கல்கி

KALKI 29.11.98
ரூ. 4.50



"அடங்க மறுப்போம்; அத்து மீறுவோம்!"
—'விடுதலைச் சிறுத்தை' திருமாவளவன் பேட்டி



அட, கேட்டதும் கிடைக்குமாம் டெலிபோன்!





“அடங்க மறுப்போம் அத்து மீறுவோம்!”

திருமாவளவன் – 'விடுதலைச் சிறுத்தைகள்' இயக்கத்தின் தலைவர். பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அங்கனூர் என்னும் கிராமத்தைச் சேர்ந்த இவர், கிரிமனாலஜியில் எம்.ஏ.வும் சட்டத்தில் பட்டமும் பெற்றவர். தடய அறிவியல் துறையில் அறிவியல் உதவியாளராகப் பணியாற்றுபவர். விடுதலைச் சிறுத்தைகளின் லட்சியம் என்ன? அனைத்திந்திய அமைப்பிலிருந்து இவர்கள் தனித்தியங்க வேண்டிய அவசியம் என்ன? இவர்கள் வன்முறையாளர்கள் என்பதால்தான், அண்மையில் இவர்கள் கடலூரில் நடத்தவிருந்த பேரணியை அரசு தடைசெய்ததா? இப்படி பல கேள்விகளையும் திருமாவளவனிடமே கேட்டோம்...

“உங்கள் இயக்கம் தமிழகத்தில் தனித்துச் செயல்பட வேண்டிய அவசியம் என்ன?”

“அம்பேத்கரின் மறைவுக்குப் பிறகு, இந்தியக் குடியரசுக் கட்சியின் மிதமான போக்குப் பிடிக்காத அதன் இளைஞர்கள்

ஒன்றுசேர்ந்து 72-ல் ஆரம்பித்ததுதான் 'Dalit Panthers of India - ஒடுக்கப்பட்ட இந்தியச் சிறுத்தைகள் (DPI)' என்கிற இயக்கம். இது மகாராஷ்டிராவில் ஆரம்பிக்கப்பட்டது. மதுரையைச் சேர்ந்த வழக்குரைஞர் மலைச் சாமி என்பவர் 82-ல் அதன் கிளையை மதுரையில் ஆரம்பித்தார். அவரது தம்பி என்னோடு சட்டக் கல்லூரியில் படித்ததால் மலைச்சாமியோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர் மறையவே, இந்த இயக்கத்துக்கு நான் தலைமையேற்க வேண்டியதாகி விட்டது. DPI என்பது உளவுத் துறையால் மிகவும் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டு, ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டதால் வடமாநிலங்களில் அதுவே, ஜனநாயக விடுதலைச் சிறுத்தைகள், கறுப்புச் சிறுத்தைகள், சிவப்புச் சிறுத்தைகள் என்று பல அமைப்புகளாக உடைந்து விட்டது. முன்பு DPI-யின் பொதுச் செயலாளராக இருந்த ராம்தாஸ் அத்வாலே, பாரதிய குடியரசுக்

அண்டை வீட்டுக்காரரை நேசி. ஆனால் குறுக்குச் சுவரை இடித்து விடாதே!

– பழமொழி.

– மலர் சூர்யா

கட்சி என்கிற பெயரில் அரசியல் கட்சிகளை ஆதரிப்பது என்கிற முடிவுக்கு வந்து விட்டார். என்னையும் அப்படி மாறச் சொன்னார். நான் அதற்கு உடன்படவில்லை. 'விடுதலைச் சிறுத்தைகள்' என்னும் பெயரில் தமிழகத்தில் இனி தனியாகவே இயங்குவோம் என்று அறிவித்து விட்டேன். இப்போது பத்தொன்பது மாவட்டங்களில் எங்கள் இயக்கம் பரவியிருக்கிறது."

"உங்கள் லட்சியம்தான் என்ன?"

"ஆண்டாண்டு காலமாக ஊர் ஒருபுறமும் சேரி ஒருபுறமுமாக இந்தியா இரண்டாகத்தான் பிரிந்து இருக்கிறது. அரசின் சலுகைகளால் தலித் மக்கள் – ஒடுக்கப்பட்ட மக்கள் என்னதான் படித்து விட்டு வந்தாலும் சமூக இழிவிலிருந்து இன்னமும் விடுதலை கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை. இதற்கு ஒரே தீர்வு ஜாதி ஒழிப்பு மட்டும்தான். அதுதான் எங்கள் இயக்கத்தின் லட்சியமாகவும் இருக்கிறது. 'ஜாதி ஒழிப்பே மக்கள் விடுதலை' என்பதுதான் எங்களின் கோஷமே!"

"நீங்கள் 'மக்கள்' என்று குறிப்பிடுவது தலித் மக்களையா?"

"ஒரு குறிப்பிட்ட ஜாதி மக்களை மட்டும் சொல்லவில்லை. தலித் என்றாலே சமூக, பொருளாதார, கல்வி ரீதியில் ஒடுக்கப்பட்டுக் கிடக்கிற எல்லா ஜாதி மக்களையும்தான் குறிக்கும். எல்லா மதத்திலுமே ஒடுக்கப்பட்டவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். எனவே, எங்கள் இயக்கத்துக்கு பலதரப்பட்ட ஜாதி மக்களும் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள்."

"நீங்கள் குறிப்பிடுகிற மக்கள் விடுதலைக்கான உங்களின் போராட்ட முறை என்ன?"

"மகாராஷ்டிராவில் DPI துவங்கப் பட்ட போது, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக, மேல்ஜாதி மற்றும் மேட்டுக்குடியினரின் நலன் காக்கிற இந்த அரசிடம் பேரணிகள் நடத்திக் கோரிக்கை மனுக்களைக் கொடுத்துப் பயனில்லை; ஆயுதம் தாங்கிய போராட்டத்தால் மட்டுமே அது சாத்தியம் என்று கொள்கை வகுத்தார்கள். அந்தப் போராட்டமும் அரசுக்கெதிரான போராட்டமே தவிர, மக்களுக்கெதிரான தல்ல. எனினும் எங்கள் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைப் பொறுத்தவரை நாங்கள் சாத்வீக முறைப்படிதான் போராடிக் கொண்டிருக்கிறோம். பேரணிகள் நடத்தி கோரிக்கை மனுக்களைத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்."

"வழிமுறை வேறு என்றாலும் நீங்களும் அரசுக்கெதிரான போராட்டத்தைத்தான் நடத்துகிறீர்கள், இல்லையா?"

"ஆமாம். இந்த அரசு என்பது இந்த சமூக அமைப்பின் பிரதிநிதியாகத்தான் செயல்படுகிறது. இந்த சமூக அமைப்பு என்பது மேட்டுக்குடி மக்களின் நலனைப் பாதுகாப்பதற்காகத் திட்டமிட்டு அமைக்கப்பட்ட அமைப்பாகத்தான் இருக்கிறது. எனவே, நாம் எத்தனை முறை வாக்களித்து அரசுகளை அமைத்தாலும் அது மேட்டுக்குடி மக்களின் நலன்களைப் பாதுகாக்கிற அரசுகளாகவே இருக்கின்றன. இந்தச் சமூகக் கட்டமைப்பை மாற்றாத வரையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடுதலை இல்லை. உதாரணத்துக்கு ஒன்று. இந்தச் சமூக அமைப்பில், சக்கிலியன் மட்டும்தான் செருப்புத் தைக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அந்தச் செருப்பை ஷோகேஸ்களில் அடுக்கி எந்த ஜாதிக்காரன் வேண்டுமானாலும் விற்பனை செய்கிறான்! விற்பவன் ஏன் தைக்க முன்வருவதில்லை? ஏன் இந்தப்

பாகுபாடான உற்பத்தி முறை? இது மாறாத வரையில் எப்படி ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலை கிடைக்க முடியும்?"

"இதற்கெல்லாம்...."

"இதற்கெல்லாம் இன்றைக்கிருக்கிற எந்த ஜாதியினரையும் காரணமாகச் சொல்ல முடியாது. யாரும் விண்ணப்பித்துக் கொண்டு ஒரு ஜாதியில் பிறப்பதில்லை. இது காலங்காலமாகத் தொடர்ந்து வருகிற ஒரு விஷயம். இந்த ஒருதலைப்பட்சமான சமூக அமைப்பைக் கட்டிக் காப்பதற்காகத்தான் 'இந்துத்வா' கோஷம் எழுப்பப்படுகிறது. அசோகர் வந்தால் புத்தமதம்; சிவாஜி வந்தால் இந்து மதம் என்று மதமும் அரசியலும் இங்கே பின்னிக் கிடக்கின்றன. அதாவது ஆட்சியாளர்கள் மதச்சார்புள்ளவர்களாக இருக்கிறார்கள் அல்லது மதம் ஆட்சியாளர்களை விழுங்கிய தன்மையுடையதாக இருக்கிறது. ஆக, இங்கே அரசமைப்பு மாற வேண்டுமானால் மதங்கள் ஒழிக்கப்பட வேண்டும். சமூக அமைப்பு முறையில் மாற்றம் உருவாக வேண்டும். சமூக அமைப்பில் மாற்றம் வர, இங்குள்ள உற்பத்தி முறையில் மாற்றம் உருவாக வேண்டும். உற்பத்தி முறையில் மாற்றம் வர வேண்டுமானால், ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளுக்கான – விடுதலைக்கான போராட்டத்தைத் தாங்களே எடுத்துக் கொண்டு நடத்தும் போதுதான் சாத்தியமாகும். அது இல்லாமல் பேரணிகளையும் ஊர்வலங்களையும் நடத்தி, அரசிடம் மனுக் கொடுத்து சலுகைகள் வாங்குவதென்பது இந்த ஒருதலைப்பட்சமான சமூக அமைப்பை ஏற்றுக் கொள்வதாகத்தான் அர்த்தமாகும். அப்படியில்லாமல் 'இனி உன்னிடம் நான் மனுக்கொடுக்க மாட்டேன். என் உரிமைகளை நானே எடுத்துக் கொள்வேன். இந்த அமைப்பு முறையைத் தூக்கியெறிந்து விட்டு, நானே ஒரு பாரபட்சமில்லாத சமூக அமைப்பை உருவாக்குவேன்' என்கிற அர்த்தத்தில்தான் 'புரட்சி செய்' என்றார் அம்பேத்கர்."

"ஆக, இதெல்லாம் ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் சாத்தியம் என்கிறீர்களா?"

"விடுதலைச் 'சிறுத்தைகள் அமைப்பு ஆயுதப் போராட்டத்தை நடத்துகிறதா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் இந்த மாதிரியான மாற்றம் என்பது ஆயுதப் போராட்டத்தினால்தான் நடக்கும். இந்துத்வாவை உடைக்காத வரையில் மாற்றம் சாத்தியமில்லை. உதாரணத்துக்குக் கிறிஸ்துவ மதம். அந்த மதத்தில் ஜாதியில்லை. ஆனால் அது இந்தியாவுக்கு வந்து, இந்துத்வாவை எதிர்த்துப் போராடாமல், அதோடு ஒரு நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்திக் கொண்டு விட்டதால்தான், இந்தியக் கிறிஸ்துவர்களுக்குள் ஜாதி இருக்கிறது. அதாவது அது இந்துத்வத்தை உள்வாங்கிக் கொண்டு விட்டது! எனவே, இந்துத்துவத்தை உடைக்காமல் ஜாதி ஒழிப்பு சாத்தியமேயில்லை. ஜாதி ஒழியாத வரையில் ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலையும் இல்லை!"

"'வன்முறை எங்கள் பாதை இல்லை' என்று நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள்..."

"ஆமாம். ரவுடியிஸம் என்பது வேறு. மிலிடென்ஸி என்பது வேறு. மிலிடென்ஸி என்பது மக்கள் போராட்டத்தைக் குறிப்பது. அதுவொரு நெறிப்படுத்தப்பட்ட போராட்டம். ஓர் இலக்குக் கொண்ட போராட்டம். ரவுடியிஸம் என்பது பொறுக்கித்தனமான வேலை. கட்டப் பஞ்சாயத்துச் செய்கிற தாதா வேலை. இதுபோன்ற பொது மக்களுக்கு எதிரான – பொது அமைதிக்கு எதிரான வேலைகளில் நாங்கள் ஈடுபட மாட்டோம். மேலவளவில் ஏழு பேர் படுகொலை செய்யப்பட்ட போது கூட – அங்கே எங்கள் அமைப்பு இருந்தபோதிலும் கூட பேருந்தின் மேல் ஒரு சிறு கல்லை எடுத்து வீசுகிற செயலில் கூட நாங்கள் ஈடுபடவில்லை. அதை அரசுக்கு எடுத்துச் சொல்லுகிற வகையில் சென்னையில் பேரணிதான் நடத்தினோம். அப்போது எங்கள் இயக்கத்தைச் சேராதவர்களால் ஒரு சிறு சலசலப்பு ஏற்பட்டது. அவர்களையும்

> **"வன்முறையைத் தூண்டி விடுவதற்கு ஒரு ரவுடி போதும்; அமைதியைக் கட்டிக் காப்பதற்குத்தான் ஒரு தலைவன் தேவை. இதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம்."**



அரசுக்கு அடையாளம் காட்டியிருக்கிறோம்."

"உங்களுடைய அமைப்பு இதுவரை திட்டமிட்ட வன்முறையில் ஈடுபட்டதே இல்லை என்கிறீர்களா?"

"திட்டமிட்ட வன்முறையில் நிச்சயமாக ஈடுபட்டதில்லை. நாங்கள் களப் பணியாற்றுகிற மதுரை மாவட்டத்தில் மூன்று அம்பேத்கர் சிலைகள் உடைக்கப்பட்டபோது கூட 'ஆயிரம் அம்பேத்கர் சிலைகள் உடைக்கப்பட்டபோதும் அமைதி காக்க வேண்டும்' என்று அறிக்கை கொடுத்தோம். வன்முறையைத் தூண்டி விடுவதற்கு ஒரு ரவுடி போதும்; அமைதியைக் கட்டிக் காப்பதற்குத்தான் ஒரு தலைவன் தேவை. இதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். ஆனாலும் அரசு, அம்பேத்கர் சிலைகளை உடைத்தவர்களைக் கைது செய்யவில்லை. ஜாதி இந்துக்கள் எங்களுக்கெதிராக எத்தனை கொடுமைகள் செய்தாலும் அவர்களை அனுசரித்தே 'அரசு இயங்குவதென்பது எங்களுக்கு மிக மிக வேதனையாய் இருக்கிறது. முதல்வரை நான் சந்தித்துக் கேட்டதால் சென்னகரம்பட்டியில் நடந்த படுகொலைக்கும் திட்டக்குடியில் நடந்ததற்கும் அரசு அதிக நிதியுதவி செய்தது. இதைத் தவிர, அரசு எங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் எதையுமே செய்யவில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள் படுகொலை செய்யப்படுகிறபோதெல்லாம் போலீஸ் ஒரு தலைப்பட்சமாகவே நடந்து கொள்கிறது. இதை எதிர்த்து திட்டக்குடியில் சாலை மறியலில் ஈடுபட்டபோது, '...கள் இந்த அளவுக்கு வந்து விட்டார்களா?' என்று மேல்ஜாதியாகக் கருதிக் கொள்கிறவர்கள், ஜாதிப் பெயரை இழிவாகச் சொல்லி கலாட்டா செய்தார்கள். போலீஸ் துணையோடு இருவரைக் கொன்றே விட்டார்கள். இதே போல் கடந்த ஆறு மாதங்களில் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் மட்டும் ஏழு படுகொலைகள் நடந்திருக்கின்றன. இந்தப் படுகொலைகளை மூடிமறைப்பதற்காகத் தான் 'விடுதலைச் சிறுத்தைகள் வன்முறையைத் தூண்டுகின்றன' என்று ஒரு ஜாதிக் கட்சித் தலைவர் திசை திருப்பி விட்டார். எங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பதிலடி கொடுக்கத்தான் வேண்டும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை இருந்தாலும் இதுவரை நாங்கள் அதைச் செய்யவில்லை. நிதானப் போக்கைத்தான் கடைப்பிடிக்கிறோம். 'அடங்க மறுப்போம்; அத்து மீறுவோம்' என்பது எங்களின் கோஷம். அதற்கு இந்த ஜாதிய சமுதாயத்துக்கு அடங்க மறுப்போம்; காலங் காலமாக வரும் இந்த ஜாதிய எல்லைகளின் அத்து மீறுவோம் என்றுதான் அர்த்தம். இது தனிப்பட்ட நபர்கள் – ஜாதிக்கு எதிரானது அல்ல."

"அரசு கூடவா உங்களுக்கு எதிராக நடந்து கொள்கிறது?"

"நான் முன்பே குறிப்பிட்ட மாதிரி, எந்த அரசானாலும் அதை உள்வாங்கி ஆட்டி வைப்பது 'இந்துத்வா' என்கிற ஜாதிய சமூக அமைப்புத்தானே! நீங்கள் ரேஷன் கடை, பள்ளிக்கூடம், மருத்துவமனை என்று எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். இதில் எது ஒன்றுமே சேரிக்குப் பக்கத்தில் இருக்காது. எல்லாமே ஜாதி இந்துக்கள் வாழும் பகுதியில்தான் இருக்கும். பெரம்பலூர் மாவட்டம் முள்ளுக் குறிச்சியில், குடிநீர்த் தொட்டியை சேரியில் கட்டுங்கள் என்று சேரி இளைஞர்கள் கோரியதற்காக, 'அந்த'த் தெருவில் உள்ள தண்ணீர்த் தொட்டியிலிருந்து வரும் தண்ணீரையா நாங்கள் குடிப்பது?' என்று ஜாதி பெயரை இழிவாகப் பயன்படுத்தி ஒன்பது இளைஞர்களை முந்திரிக்காடுகளுக்குக் கடத்திச் சென்று கட்டி வைத்து அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர். அவர்கள் மேல் போலீஸ் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வேறு வழியின்றி எங்கள் இளை

(தொடர்ச்சி 77-ம் பக்கம்)

• ரேகா



பீகார் பெண்களுக்குச் சென்னையிலிருந்து உதவி!

வரதட்சணையாகக் கேட்ட ஸ்கூட்டர் வந்து சேரவில்லை என்று கணவனுக்குக் கோபம். இனியும் அவன் பொறுத்துக் கொள்ளத் தயாராக இல்லை. தன் அம்மாவுடன் கலந்து பேசி, ஒரு முடிவெடுத்தான். வரதட்சணை கொண்டு வர முடியாத பெண், இருந்தால் என்ன; செத்தால் என்ன? அம்மாவுக்கும், பிள்ளைக்கும் கைகொடுத்தது ஸ்டவ்! அப்பாவிப் பெண் உடலில் தீப்பிடித்தது. அதை அதிர்ஷ்டம் என்பதா? துரதிர்ஷ்டம் என்பதா? தீ அவள் உடலைக் காயப்படுத்தியதே தவிர, உயிரைப் பறிக்கவில்லை.

''நீ வேண்டாம் என்றுதானே நெருப்பு வைத்தோம். இப்போது தீக் காயங்களுக்கு வைத்தியம் பார்க்க வேறு தண்டச் செலவா? எங்காவது போய்த் தொலை!'' என்று புகுந்த வீட்டிலிருந்து துரத்தி விட்டனர். 'கல்யாணம் ஆன பின், பெண்ணுக்கு, பிறந்த வீட்டில் என்ன வேலை?' என்று அங்கேயும் அந்த அபலையை ஏற்றுக் கொள்ளவில்லை.

இதுபோன்ற வரதட்சணைக் கொடுமைகள் இன்னும் பீகாரில் வெகு சகஜம். புகுந்த வீட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்டு, பிறந்த வீட்டிலும் ஏற்றுக் கொள்ளப்படாத பெண்கள், கடைசியில் தள்ளப்படுவது இந்த உலகின் புராதன தொழிலான 'அந்த' சாக்கடையில்!

இது ஒருபுறம் என்றால், இன்னொரு புறம், பெண் சிசுக் கொலை. அதுவும் ரொம்ப சகாயமான கட்டணத்தில்! ஆம்! பெண் குழந்தையைப் பெற்றெடுத்த தாய், ஆஸ்பத்திரி நர்சுக்கு வெறும் இருபது ரூபாயைக் கொடுத்து விட்டால் போதும், சின்னதாய்க் குழி பறித்து, பிறந்த சிசுவைப் புதைத்து விடுவாள். ஒரு பால் பவுடர் டின் காசில் நாலு சிசுக் கொலை!

ஆனால் இன்று, விஜி சீனிவாசன் என்கிற சமூக சேவகியின் புண்ணியத்தில், இத்தகைய பெண்களுக்கும், பெண் சிசுக்களுக்கும் ஓரளவுக்காவது விடிவு காலம் பிறந்திருக்கிறது. தமது 'அதிதி' என்கிற அமைப்பின் மூலமாக, தீக்காயம் பட்ட பெண்களின் சிகிச்சைக்கு உதவி செய்வதோடு நின்று விடாமல், தாம் நடத்தி வரும்

இல்லத்தில் அவர்களைத் தங்க வைத்து, தையல், எம்பிராய்டரி போன்றவற்றைக் கற்றுக் கொடுத்து, சொந்தக் காலில் நிற்க உதவுகிறார்; பெண் சிசுக்களைக் கொன்று விடும் நர்ஸ்களிடம், "நான் உங்களுக்கு நூறு ரூபாய் தருகிறேன். அந்தக் குழந்தைகளை என்னிடம் கொண்டு வந்து கொடுத்து விடுங்கள்" என்று சொல்லி, அவற்றுக்கு மறுவாழ்வு தருகிறார்.

பாட்னாவில் 'அதிதி' அமைப்பின் மூலம் அசரவைக்கும் சேவை புரியும் விஜிக்கு, உலக அளவில் புகழ்பெற்ற 'யூனிசெப்' போன்ற பல்வேறு அமைப்புகள் நிதி உதவி புரிந்து வருகின்றன என்றாலும், சென்னையைச் சேர்ந்த ரேகா ஹரிகரன் செய்து வரும் உதவியும் பாராட்டுக்குரியது.

ஸ்டெல்லாமேரிஸ் கல்லூரியில் ஃபைன் ஆர்ட்ஸ் முடித்தவரான ரேகா, தாமே கரிதார்கள் டிசைன் செய்கிறார், புதுமையான டிசைன்களில் புடைவைகளில் பிரிண்டிங் செய்கிறார்; எம்பிராய்டரி ஒர்க் இவரது ஸ்பெஷாலிடி! தமது பணி மூலம் கிடைக்கும் லாபத்தை அப்படியே அதிதி அமைப்புக்கு அனுப்பி வைத்து விடுகிறார்.

பாட்னாவில் சமூக சேவை செய்து வரும் விஜியின் மகள்தான் ரேகா. "93-ல் பாட்னா சென்ற போது, என் தாயின் சேவையை நான் நேரடியாகப் பார்க்கிற வாய்ப்புக் கிடைத்தது. சென்னை திரும்பியதும், நானும், என் கணவரும் இதுபற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, நாமும் அவர்களுக்கு எந்தவிதத்திலாவது உதவ வேண்டும் என்று என் கணவர் சொன்னார். மறுநாள் ஒரு தையல்காரர், ஏதாவது வேலை கிடைக்குமா? என்று எங்களை அணுகிக் கேட்டார். 'அட! இதுவும் ஆண்டவனின் சித்தம் போலும்' என்று நினைத்தோம்! அந்தக் கணத்தில் பிறந்ததுதான் 'சங்கல்ப்' என்ற அமைப்பு. ஒரு டெய்லருடன் 93-ல் ஆரம்பித்த 'சங்கல்ப்' இன்று சுமார் ஒரு டஜன் தொழிலாளர்களுடன், தையல், எம்பிராய்டரி, பிரிண்டிங் என்று மூன்று பிரிவுகளாய் சிறப்பாக இயங்கி வருகிறது.

"வியாபாரம் எப்படி?"

"நான் விளம்பரம் செய்வதில்லை. ஒருமுறை வாங்கியவர்கள் என் தயாரிப்புக்களின் தரம், புதுமை, பயமுறுத்தாத விலை ஆகிய காரணங்களுக்காக மட்டுமின்றி, இதன் லாபம், ஒரு சிறந்த சமூகநல காரியத்துக்குப் போகிறது என்பதாலும் தொடர்ந்து ஆதரவு அளிக்கிறார்கள்; தெரிந்தவர்களுக்கு சிபாரிசு செய்கிறார்கள்!"

"கடைசியாக ஒரு சந்தேகம். உங்கள் தாயார், தமிழகத்தை விட்டு விட்டு பாட்னாவில் போய் சமூக சேவை செய்வதற்கு ஏதேனும் ஸ்பெஷல் காரணம் இருக்கிறதா?"

"இருக்கிறது. அவர் முன்பு தில்லியிலுள்ள 'ஃபோர்டு பவுண்டேஷனில்' வேலை பார்த்தார். அது பல சமூக சேவை அமைப்புகளுக்கும் நிதியுதவி செய்வதைப் பார்த்த என் தாயாரும் தாமும் ஓர் அமைப்பைத் துவங்க ஆசைப்பட்டார். அவர் சுற்றிப் பார்த்தவரையில் இந்தியாவிலேயே பெண்கள் அதிக அளவில் பாதிக்கப்படுவது பீகாரில்தான் என்று உணர்ந்தார். அதனால்தான் 'அதிதி'யை பாட்னாவில் ஆரம்பித்தார்" என்று கூறும் ரேகா சொல்லும் இன்னொரு விஷயம் : "எனக்கு மூன்று குழந்தைகள் என்பதில் மட்டுமில்லை; மூவரும் பெண்கள் என்பதிலும் ரொம்ப சந்தோஷமே!"

— பாரதிமௌலி

படம் : ஸ்ரீஹரி

"உங்க ஆபீஸ்ல ஏகப்பட்ட சம்திங் வருதாமே?"

"யார் சொன்னது?"

"உங்க ஆபீஸ் ஸ்வீப்பர்தான் சொன்னான். ஆபீசைக் கூட்டித் தள்ளும்போது தினமும் அவனுக்கு நூறு, நூத்தம்பது கிடைக்குமாமே!"

— சீர்காழி வி. ரேவதி



Chairman and Board of Directors of

SRI KANDASWAMY PERMANENT FUND LTD.

Cordially invite you with family and friends
on the occasion of the

Inaugural Function of their Head Office

in the Company's fully Air Conditioned &
Computerised new own premises

at No. 28, Agraharam Street, Chintadripet,
Chennai - 600 002.
on Monday, the 30th November 1998, at 9.01 a.m.

Hon'ble Justice Thiru. S. JAGADEESAN
High Court, Chennai
has kindly consented to inaugurate the new premises
and preside over the function.

Sri. B. RAMACHANDRA ADHITHAN
Managing Editor, Malai Murasu
will light the Kuthuvilakku

Sri. B. VENKATA RAMANA
Asst. General Manager,
Corporation Bank, Regional Office, Chennai.
will inaugurate the safe vault.

Regd. Office :
No. 60, Swami Pandaram Street,
Chintadripet, Chennai - 600 002.
Ph : 8527573/8548917.

Branches :

No. 36, Jeenis Road,
Saidapet,
Chennai - 600 015.
Phone : 459 569

Sindur Shopping Centre,
X 42, First Floor, 2nd Avenue,
Anna Nagar, Chennai - 600 040.
(Next to Ayyappan Temple)
Phone : 626 3550, 622 0649

ALL ARE WELCOME




படிப்பதற்காக ஒரு நெடும்

விராச்சிலிப்பட்டியைச் சேர்ந்த மாணவி உஷாராணிக்கு, காலை மணி ஏழரையை நெருங்கும்போது படபடப்பு கூடுகிறது. ஏழரைக்கே பள்ளிக்குக் கிளம்பினால்தான் குறுக்கு வழியில் மலைச் சரிவுகளில் பத்து கி.மீ நடந்து மேல் செங்காட்டுப்பட்டியில் உள்ள பள்ளியைப் பத்து மணிக்காவது சென்றடைய முடியும்.

"காலையில் அம்மாவோடு எழுந்து அவருக்குக் கூட மாட உதவி விட்டு, கஞ்சியைக் குடித்துவிட்டு வரவே நேரம் சரியாக இருக்கிறது. அதேபோல் மாலை வீடு போய்ச் சேர ஆறு மணியாகி விடுகிறது. இந்த வருடம் பிளஸ் டூ படித்துக் கொண்டிருக்கிறேன். படிப்பதற்கு நேரமே கிடைப்பதில்லை. காலையும் மாலையும் கிட்டத்தட்ட இருபது கி.மீ நடப்பதால் வீட்டுக்கு வந்தவுடன் சாப்பிட்டதும் படுத்து விடத்தான் தோன்றுகிறது. இந்த வருடம் பொதுத் தேர்வை எப்படிச் சந்திக்கப் போகிறேன் என்றே தெரியவில்லை!" என்று கவலையுடன் சொல்லுகிறார் உஷாராணி.

பூதக்கால் கிராமத்தைச் சேர்ந்த சுமதிக்கு மழைக்காலம் வந்து விட்டால் கவலையும் கூடவே வந்து விடும். "மழைக்காலத்தில் புத்தக மூட்டைகளைச் சுமந்துக் கொண்டு



பயணம்!




• மின்சாரம் வந்தால்தான் கம்ப்யூட்டர் வகுப்பு...

குறுக்கு வழியில் வர முடியாது. சாலையில் சுமார் பன்னிரண்டு கி.மீ நடந்து வர வேண்டும். அதனால் புத்தகங்களைப் பள்ளியிலேயே வைத்து விட்டு பாலிதீன் பேப்பரைத் தலையில் சுற்றிக் கொண்டு ஓட வேண்டியிருக்கும். குளிர் உடலை வாட்டும்!'' என்று சொல்லும்போதே நடுங்குகிறாள் ஆறாவது படிக்கும் சுமதி.

உஷாராணி, சுமதி போன்று 150க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், காடு, மலைச்சரிவுகளில் ஏறி இறங்கி தினசரி பதினெட்டு, இருபது கி.மீ நடந்து பள்ளிக்குச் சென்று படிக்கிறார்கள் என்று கேள்விப்படும்போதே நமக்கு நெகிழ்ச்சியாகி விடுகிறது.

பூதக்கால், கருவங்காடு, நொச்சிலிப்பட்டி, குண்டக்காடு, புதூர் ஆகிய கிராமங்கள், திருச்சி மாவட்டத்தில் உள்ள பச்சை மலை மீதுள்ள மலைக்கிராமங்கள். இந்தக் கிராமங்களில் இருந்து, பள்ளிக்கூடம் அமைந்துள்ள மற்றொரு மலைக்கிராமமான மேல்செங்காட்டுப்பட்டியைச் சென்றடைய சாலை வசதி இருந்தும் மாணவ,



• மேல்செங்காட்டுப்பட்டியிலுள்ள மேல்நிலைப் பள்ளி

மாணவிகள் நடக்க வேண்டியிருக்கிறது.

"இதென்ன அநியாயம்?" என்கிறீர்களா? 'மலை வாழ் மக்கள் மேம்பாட்டுக்கு அரசு அதைச் செய்துள்ளது. இதைச் செய்துள்ளது' என்று சாதனைப் பட்டியல் போடும் அரசு, போடப்பட்ட சாலையில் ஒரு மினி பஸ் சர்வீஸ்கூட விட முடியாத நிலையில் இருக்கிற கொடுமையை என்னவென்பது? பள்ளிக்கூடம் செல்வதற்கே ஒரு நெடும் பயணம் போய்க் கொண்டிருக்கிறார்கள் மாணவ, மாணவிகள்.

திருச்சி மாவட்டம் துறையூரை அடுத்த உப்பிலியாபுரத்தை ஒட்டியிருப்பதுதான் பச்சை மலை. கொல்லிமலையின் தொடர்ச்சி இது. அடிவாரத்திலுள்ள ஷோபனாபுரத்தில் இருந்து காட்டிலாகா சாலையில் பத்து கி.மீ மலை ஏறியதும் சில்லென்ற காற்று நம்மை வருடுகிறது. மலை மேல் பதினைந்தாவது கி.மீ.யில் சமவெளிப் பகுதி துவங்குகிறது! இந்த மலைப்பகுதியில் அறுபதுக்கும் மேற்பட்ட கிராமங்கள். பாதிக்கு மேற்பட்ட கிராமங்கள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவை.

இந்தப் பகுதியில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட கிராம மக்களின் கல்வி வசதிக்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடத்தும் மேல்நிலைப் பள்ளிதான் மேல்செங்காட்டுப்பட்டியில் உள்ளது. சுமார் அறுநூறுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படிக்கும் இந்தப் பள்ளியில் நம்மைக் கவருகிற மற்றொரு அம்சம், அந்தப் பகுதிக்கே அந்நியப்பட்டது போல் நிற்கும் ஏ.ஸி. மெஷினும், அந்த அறையினுள் வைக்கப்பட்டிருக்கும் நான்கு கம்ப்யூட்டர்களும், பிரிண்டரும்தான்! இந்தப் பள்ளியில் கம்ப்யூட்டர் பீரியட் என்று இருந்தாலும், கரண்ட் எப்போது இருக்கிறதோ அப்போதெல்லாம்தான் கம்ப்யூட்டர் வகுப்பு நடத்தப்படுமாம். பெரும்பாலான ஆசிரியர்கள் சமவெளியிலிருந்துதான் வருகிறார்கள். ஹாஸ்டல் வசதி இருந்தாலும் அதிலுள்ளவர்களின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு வைத்திருக்கிறது ஆதி திராவிடர் நலத் துறை. ஆதலால் எல்லோரையும் ஹாஸ்டலில் சேர்க்க முடியாத நிலை உள்ளது.

"இரண்டு பஸ்தான் மலை மேல் வருகிறது. பல நாள் தாமதமாக வரும். சில நாள் சர்வீஸேகூட கட்டாகி விடும். எனவே நாங்களும் சமயத்தில் கீழிருந்து பதினேழு கி.மீ நடந்துதான் பள்ளிக்கு வர வேண்டியிருக்கும்" என்கிறார் ஆசிரியர் வீரமுத்து. ஹாஸ்டல் மாணவ, மாணவிகளுக்குச் செய்யப்படும் உணவே (கொட்டை அரிசி + கத்தரிக்காய் சாம்பார்) மாணவ, மாணவிகள் எல்லோருக்கும் மதிய வேளையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

"பூதக்கால் – மேல் செங்காட்டுப்பட்டி சாலை போடப்பட்டு விட்டாலும் பேருந்து ஏன் விடப்படவில்லை என்பது



• சுமதி



• உஷாராணி

தெரியவில்லை. சில நாட்களுக்கு முன் கலெக்டர்கூட வந்து அந்தச் சாலையைப் பார்த்து விட்டுச் சென்றார். காட்டிலாகா, பஸ் சர்வீஸ் விடுவதை ஆட்சேபிப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. அந்தச் சாலையில் விரைவில் பஸ்கள் விட வேண்டும்!'' என்று நம்மிடம் ஒரே குரலில் சொன்னார்கள் ஆசிரியர்கள்.



• ஆசிரியர் வீரமுத்து

மேல் செங்காட்டுப் பட்டி - பூதக்கால் சாலை, நெடுஞ்சாலைத் துறையின் மலைப் பகுதி வளர்ச்சிப் பிரிவால் போடப்பட்டது. இந்தச் சாலை இன்னமும் காட்டிலாகா கையில் ஒப்படைக்கப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். இதைப் பற்றிய உண்மை நிலையை அறிய திருச்சி மாவட்ட வனத்துறை அதிகாரியான திருமதி ராஜேஸ்வரியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டோம். ''மலைவாழ் மக்களின் வசதிக்கான எந்த திட்டங்களிலும் காட்டிலாகா தலையிட்டு ஆட்சேபம் கிளப்பாது. அந்தப் பகுதிகளில் ஏற்கெனவே பேருந்துகள் சென்று வருகின்றன. யாரும் எங்களை இதுவரை அணுகவில்லை. அணுகினால் விதிகளுக்குட்பட்டு எங்கள் அனுமதியை உடனே கொடுத்து விடுவோம்!'' என்றார் அவர்.

அரசுப் போக்குவரத்துக் கழகத்தினர் பூதக்கால் - மேல் செங்காட்டுப் பட்டி சாலையில் பஸ் விட ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று அறிய துறையூரிலுள்ள கிளை மேலாளரைச் சந்தித்தோம். ''மலைப் பகுதிகளில் தேவையான அளவுக்கு பஸ் வசதி செய்யப்பட்டிருக்கிறது. மலைப் பகுதிகளில் செல்லும் பஸ்களை நிர்வகிப்பதில் செலவு அதிகம். லாப நோக்கோடும் இயங்க முடியாது. எனினும் மேல் செங்காட்டுப்பட்டி மற்றும் சுற்று வட்டார கிராம மக்களின் தேவைக்காக நாங்கள் இரண்டு சர்வீஸ் விடுகிறோம். சேலம் ஆத்தூர் பகுதியில் இருந்து ஒரு சர்வீஸ் வருகிறது. சில நாட்கள் பஸ்கள் பிரேக் டவுன் ஆகலாம். மலைப் பகுதி பஸ்களில் சிறு பிரச்னை என்றாலும் ஓட்ட மாட்டோம். காரணம் ரிஸ்க் எடுக்க முடியாது. நீங்கள் சொல்லும் சாலையில் ஒரு பாலம் கட்டும் வேலை முடிவடையாததால், எங்களை இதுவரை யாரும் அணுகவில்லை. அந்தச் சாலை முழுதும் பூர்த்தி செய்யப்பட்டு, பேருந்து சென்று வரத் தகுதியாக இருக்கிறது என்று தெரிய வந்ததும், சற்றும் தாமதிக்காமல் நாங்கள் பஸ் விடுவோம்'' என்றார் அவர். மினி பஸ் விட தனியார்களுக்கு அனுமதி கொடுக்க அரசு தயாராக இருந்தாலும் லாபம் இருக்காது என்பதால் மலைப் பகுதியில் பஸ்கள் விட தனியார்கள் முன் வருவதில்லையாம்.

கிளை மேலாளர் குறிப்பிட்ட பாலம் வேலை முடிந்து மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிறது. அந்தப் பகுதியில் இருநூறு அடி தூரத்துக்குத் தார் போட வேண்டியதுதான் பாக்கி. ஆனால் மினி பேருந்து சென்றுவர இது ஒன்றும் தடையல்ல என்பது லாரிகள் போய் வருவதிலிருந்து நமக்குப் புரிகிறது. எனவே, பூதக்கால் மற்றும் சுற்று வட்டார மாணவ, மாணவிகளின் தினசரி நெடும்பயணம் தொடர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம், பல்வேறு இலாகாக்களில் முடிவெடுக்காமல் கோப்புகளில் கட்டி வைக்கப்பட்டிருக்கும் இயந்திரத்தனமான, மெத்தனத்துடன் கூடிய சிவப்பு நாடா முறைச் செயல்பாடுகள்தான் என்பது நமக்கு பளிச்சென்று தெளிவாகிறது!

— ப்ரியன்

படங்கள்: வெங்கடேஷ்

சீதா ரவி

இல்லத்தரசி

4

"உப்பை இப்பவே போடாதீங்க... காய் வேகாது..."

"ம்...?"

"கொஞ்சம் நேரம் அப்படியே மூடி வையுங்க..."

"எவ்வளவு நிமிஷத்துக்கு?"

"நிமிஷ கணக்கெல்லாம் சொல்ல முடியாது. பாதியாச்சும் வேகட்டும்; அப்புறம் போடுங்க உப்பை..."

எத்தனை விதமான பக்குவங்கள்! ஒரு ரஸமும் பொறியலும் செய்ய பதினேழு கட்டங்கள் தாண்டி வரவேண்டியிருக்கிறது. இரண்டு முறை கடுகைத் தீயவிட்டு கொட்டி வீணாக்கி விட்டான்.

"இதுக்குத்தான் சொன்னேன். அய்யர் மெஸ்ஸிலே இரண்டு பேருக்குச் சாப்பாடு சொல்லிடுங்கன்னு..."

"நாளையிலேருந்து அய்யருதான் கதி... இன்னிக்கு ஒரு நாள் உனக்கும் ஜூனியருக்கும் என் கையாலே நளபாகம்!"

முகம் சிவக்க அவள் சிரிப்பதைப் பார்க்கத் திருப்தியாக இருந்தது. முதல் முறை முத்தமிட்டபோது கண்ட அதே சிரிப்பு! இன்று அந்தச் சிரிப்புக்கு வேறு விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி உட்கார வைத்து வியர்க்க விறுவிறுக்க அவன் சாம்ராஜ்யத்தை அவன் பரிபாலனம் பண்ண வேண்டியிருக்கிறது.

அவன் பயங்களைப் பொய்யாக்கி ஏளனம் செய்வதுபோல் அந்தச் செய்தி வெளிப்பட்டது. கல்பனா கருவுற்றிருந்தாள். பவழ மோதிரம்தான் காரணம் என்று சுந்தர் அடித்துச் சத்தியம் செய்தான். 'விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால் நான் கணக்கு உதைக்குமடா! மோதிரம் அணிவதற்கு முன்பே இயற்கை தீர்மானித்த நிகழ்வு இது...' கோபிக்கு உடைத்துச் சொல்லப் பிடிக்கவில்லை. பவழ மோதிரமும் ராமமூர்த்தியும் பெயர் வாங்கிவிட்டுப் போகட்டும். அவனுக்குச் சில விஷயங்கள் தெளிவாக ஆரம்பித்திருந்தன. அது போதும்.

மிளகாய்த் தூள் பாட்டிலைத் தேடி எடுத்து "இதுதானே?" என்றான் கல்பனாவிடம்.

"நீங்களும் நாலு நாளா என்னை உட்கார வைச்சு சமைக்கப் போறீங்க... ஏன் ஒவ்வொரு முறையும் எது மிளகாய்த் தூளுன்னு உங்களுக்குச் சந்தேகம் வருது?"

அவனுக்கு ஜெயந்தி சொன்னதுதான் நினைவுக்கு வந்தது...

'ஒண்ணு நீங்க புரிஞ்சுக்கணும் கோபி... இன்னிக்குப் பெண்களுக்கு ஸ்கூட்டரோ காரோ ஓட்டறது சுலபமா கை வருது. ஏன்னா அது அவங்க முன்னேற்றத்துக்கு அடையாளம். ஆனா வீட்டு வேலைங்களைச் செய்யறதுக்கு ஆம்பளைங்க இன்னமும் அவஸ்தை படறாங்க. அது முக்கியமில்லாத வேலைன்னு ஒரு தப்பான அபிப்ராயம் காரணமாயிருக்கலாம். இது நடைமுறை வாழ்க்கைக்கு உதவாத நிலவரம்...'

'ஒரு டீவி. நாடக ஷூட்டிங்கின் கிளைமாக்ஸ் காட்சியில் தவறி நுழைந்து விட்டோமோ?' தாளமுடியாத அவநம்பிக்கையுடன் அவளைப் பார்த்தபோது சிரித்து விட்டாள்.

ஜெயந்தி வீடு தேடி வருவாள் என்று

எதிர்பார்க்கவில்லை. கல்பனாவுடனான மௌன யுத்தம் முற்றிய நிலையை எட்டியிருந்தது.

டி.வி. மேஜையில் அவன் எழுதிய 'தூசி!' கவிதையைப் பார்த்துக் கொதித்தவள் ஒரு துணியை எடுத்து நீட்டினாள்.

"அவ்வளவு சுத்தம் பார்க்கிறவராயிருந்தா நீங்களே துடையுங்க..."

அழுக்குத் துணியைப் பிடுங்கி அவள் முகத்தில் விசிறி, வார்த்தைகளால் மேலும் அடித்து... அவள் அழுதபோது அனுதாபம் ஏற்படவில்லை; தன் அத்துமீறலுக்கு வருத்தம் வரவில்லை. அழட்டுமே!

அன்றிரவும், தொடர்ந்த இரு தினங்களும் அவன் வீட்டில் சாப்பிடவில்லை. அவளும் கேட்கவில்லை. இயந்திரம் போல் சமைத்தாள். அவன் சாப்பிடாததை எடுத்து வைத்தாள். அவன் சாப்பிட்டானா என்று கேட்கவுமில்லை.

மூன்றாம் நாள், முகம் வெளுத்துத் தெரிந்தாள். அடிக்கடி சோர்ந்து உட்கார்ந்து கொண்டாள். அதைப் பார்த்து மனம்



இளகிய தருணத்தில் அழுக்குத் துணியை முகத்துக்கு நேராக நீட்டி, 'துடையுங்க' என்றது நினைவு வந்து துன்புறுத்தியது.

'மன்னித்து விடலாம்...'

'ஏன்? ஏன்? அப்படியே மன்னித்தாலும் மனத்துக்குள் இருக்கட்டும். அவள் முதலில் வருத்தம் தெரிவித்தால் பார்த்துக் கொள்ள லாம்... இப்பவும் டீ.வி. மேஜை துடைக்கப் படாமல்தானேயிருக்கிறது!

அன்று மாலை ஏழு மணிக்கு வீடு திரும்பியபோது ஜெயந்தி ஹாலில் உட் கார்ந்து ஹிண்டுவில் ஷேர் விலைகளைப் படித்துக் கொண்டிருந்தாள்.

"ஹலோ!" வியப்பை மறைத்துக் கொண்டு சொன்னான்.

"எப்படி இருக்கீங்க?"

"நல்லாயிருக்கேன்."

"கல்பனா?"

குழப்பம் வந்தது. கல்பனா இன்னும் திரும்பி வரவில்லையா? அப்படியானால் இவள் எப்படி வீட்டுக்குள்...?

"கல்பனா எப்படியிருக்கான்னு கேட் டேன்..."

"நல்லாத்தான் இருக்கா... நீங்க பார்க் கலை...?"

"நான் பார்க்கறது இருக்கட்டும். நீங்க அவளை நல்லா பார்த்துக்க வேண்டாமா?"

கலவரப்பட்டான். இவளிடம் போய் என்ன சொல்லி வைத்தாளோ? எப்படி சமா ளிப்பது? 'ஏன் வந்தாய்? என்ன வேண்டும்? வந்த வேலை ஆனால் கிளம்பிப் போக வேண்டியதுதானே?' கறாராகப் பேசி அனுப்பிவிடலாமா. ஆனால் கல்பனா எங்கே?

ப்ரீஃப்கேஸை ஓரமாக வைத்துவிட்டு சமையலறையில் எட்டிப் பார்த்தான். அமை தியாக இருந்தது.

"கல்பனா வீட்டுல இல்ல..."

"எங்கே போயிருக்கா?"

"ஒரு முக்கியமான வேலையா போயி ருக்கா... நீங்க டிரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வாங்க. டீ போட்டு எடுத்துட்டு வரேன்..."

எழுந்து உரிமையோடு சமையலறைக்குள் போய்விட்டாள்.

உடை மாற்றத் தோன்றாமல் முன் மேல் உட்காருவது போல் காத்திருந்தான். அந்த ஐந்து நிமிடங்களில் ஐநூறு விதமான கற் பனைகள் ஓடிக் கலைந்தன. கல்பனா தன்னைவிட்டுப் போய்விடுவாளோ என்கிற மிகப் பெரிய பயம் திடீரென்று கவிழ்ந்தழுத் தியது. 'வக்கீல் அது இது என்று ஏதாவது? கடவுளே! அப்பா - அம்மாவுக்கு என்ன சொல்வது?'

"நீங்க வர்ற நேரம், டீ போட்டுக் கொடுக் கணும்னு சொன்னா... நான் பார்த்துக்கறேன், போயிட்டு வான்னு அனுப்பி வைச்சேன்."

'அப்பாடி! மோசமாக எதுவுமில்லை.'

டீயை வாங்கிக் கொண்டு "தேங்க்ஸ்" என் றான்.

"யதேச்சையா லஞ்ச் அவர்லே கல்பனா வுக்கு போன் போட்டேன், 'அவங்க ஆபீஸ் வந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஃபெயின்ட் ஆயிட்டாங்க. இப்பத்தான் வீட்டுக்குப் போறாங்க'ன்னு ஆபரேடர் சொன்னா..."

"ஐயோ!" என்று எழுந்தவனை சைகை யால் அமைதிப்படுத்தினாள்.

"கூட யாராவது போயிருக்காங்களான் னேன். 'இல்லே தனியாத்தான் போயிருக்காங் க'ன்னதும் மனசு கேட்கல்லை... கடையிலே அரை நாள் லீவ் சொல்லிட்டு வந்துட்டேன்."

"இப்ப எங்க கல்பனா?"

"பதினஞ்சு நிமிஷத்துல வரேன்னு போயிருக்கா. ஷீ இஸ் ஆல்ரைட் நௌ..." சற்றே இடைவெளிவிட்டு படபடவென்று பேசினாள்:

"இதோ பாருங்க, புருஷன் பொண்டாட் டிக்குள்ளே ஆயிரம் சமாசாரம், சண்டை இருக்கும். நான் தலையிடக் கூடாது. ஆனா ஒரு பொண்ணு இந்த மாதிரி ஒரு இக்கட்டுல கூட புருஷனுக்கு போன் பண்ணித் தெரிவிக் கல்லைன்னா அது நல்லதுக்கில்லே..."

"அதுக்கு நான் என்ன பண்ண முடியும்? இதை நீங்க கல்பனாகிட்டேயில்லே சொல்ல ணும்?"

"சொல்லிட்டேன். ஏதாவது சண்டை யிருந்தா மறந்துடுன்னும் சொல்லிட்டேன். அதிகம் பேச விரும்பலை. ஆனா பொதுவா பெண்கள் emotionally transparent. உணர்வு களை மறைக்கத் தெரியாது. ஆண்கள் அதுக்கு நேர் மாறுதல்! விதிவிலக்குகள் இருக்கலாம். ஆனால் இன்னிக்கு நிலைமைல பெண்களுக்குச் சுமையும் அதிகம். வேலை செய்ற இடத்துல கிடைக்கற அங்கீகாரம் வீட்லயும் கிடைக்கணும்னு எதிர்பார்ப்பு... அதுனால உணர்ச்சிகள் சும்மா காட்டாறு மாதிரி வெளிப்படுது. பேசித் தீர்த்துக்க நேர மில்லை. சுமை அதிகமாயிருக்கறதால பொறு மையும் இல்லை..."

"அதனால்தான் பேசாம வீட்டுல இருந் தேன். கேட்டாத்தானே?"

"உங்க விஷயத்துல அது தீர்வாகலாம் கோபி... பேரைச் சொல்லிட்டேன் உரிமை யில... ஆனால் எத்தனையோ பொண்ணுங்க வேலைக்குப் போனாத்தான் குடும்பம் ஓடும்ங்கற நிலைமை இருக்குதே, அவங்க கதி யெல்லாம் என்ன?"

"அதுக்கு நானா பொறுப்பு?"

"நீங்களும் நானும் எல்லாரும்தான் பொறுப்பு! என்னை நீங்க வெளியில புடிச்சு தள்ளினாலும் பரவாயில்லே.. இதை மட்டும் சொல்லிடறேன். குடும்பம்ன்றது வீட்டுச் சுவருக்குள்ளே மட்டுமில்லே – வெளியில, தெருவுல, ஆபீஸ்ல, அரசாங்கத்துல, வீரப்பன் காட்டுல கூட குடும்ப வாழ்க்கையோட ரிமோட் கன்ட்ரோல்ஸ் இயங்கிட்டிருக்கு. பெண் என்கிறதுக்காக இதுலயெல்லாம் பட்டுக்காம ஒருத்தி கனவு கோபுரத்துல வாழ்ந்தா அது குடும்பத்துக்கும் உதவாது நாட்டுக்கும் உதவாது..."

"நீங்க என்ன பார்ட்டைமா டீ.வி. டிராமா ஸ்க்ரிப்ட் எழுதுவீங்களா?"

நக்கலால் அவளைத் துண்டித்து அனுப்ப நினைத்துத்தான் கேட்டான்.

மிகப் பெரிதாகச் சிரித்து விட்டாள் ஜெயந்தி.

அவனுக்கும் சிரிப்பு வந்துவிட்டது!

சட்டென்று எழுந்து தோளில் பையை மாட்டிக் கொண்டாள். "நல்ல யோசனை. இந்த வேலை கொஞ்சம் போர் அடிக்க ஆரம்பிச்சிருக்கே, என்ன செய்யலாம்னு பார்த்துக்கிட்டிருந்தேன். வரேன்."

வாசல் வரை போனவள் சற்று நின்று திரும்பிச் சொன்னாள்: "என்னால ஏன் இவ்ளோ தெளிவா பேச முடியுது தெரியுமா? ஏன்னா நான் கல்யாணமே பண்ணிக் கல்லை.. சம்சாரத்திலே இருக்கறவங்களுக்குக் கஷ்டம்தான்."

திரும்பவும் சிரித்துவிட்டுப் போய்விட்டாள்.

சற்று அதிர்ந்து போயிருந்தவன் சம நிலைக்கு வர எண்ணி, டீ.வியின் அருகே சென்றான். அந்த மேஜை சுத்தமாகத் துடைக் கப்பட்டு பளிச்சென்று இருந்தது.

எதுவுமே நடக்காதது போல, "ஜெயந்தி போயிட்டாங்களா?" என்றபடி வந்தாள் கல்பனா.

"எங்கே போனே...?"

"சும்மா ஒரு 'வாக்' – மாறுதலுக்கு..." அவன் மோதிர விரலைப் பிடித்துத் தடவிய படி தான் கருவுற்றிருப்பதைச் சொன்னாள்.



"எல்லோரும்தான் கள்ள நோட்டு அடிக்கிறாங்க, நீ மட்டும் எப்படி போலீசில் சிக்கினே?"

"இருநூறு ரூபாய் நோட்டை அடிச்சுட்டேன்!"

– டி. பூவராகன்

பேந்தப் பேந்த அவன் விழித்தபோது, "டாக்டர் கன்ஃபர்ம் பண்ணணும். காலை யில, ஒரே மயக்கம் மாதிரி வந்தப்ப எனக்கு உடனே புரியலை... அப்புறம்தான்..."

"அம்மாவுக்குச் சொல்ல வேண்டாமா?"

"பேசாம இப்படி என் பக்கத்துல பத்து நிமிஷம் உட்காருங்க...."

அரை மணி நேரம் சென்றதும் "பசிக்கு துங்க" என்றான்.

"நான் சமையல் செய்யறேன். நீ இப்படி உட்காரு..."

நான்கு நாட்களாக அந்த நாற்காலி சமையலறையிலேயே இருக்கிறது. அவள் மேற்பார்வையில் அவன் சமைக்கிறான் – திணறியபடி.

பாத்திரத்தை மூடி வைத்துவிட்டு அவள் பக்கம் திரும்பிப் பார்த்தான் கோபி.

"குழந்தை பிறந்தா என்ன செய்யலாம் கல்பனா?"

"இது கூட தெரியாதா? பிறந்ததும் பால் கொடுக்கணும்..."

"ஐயோ! வேலைக்கு எப்படிப் போவே நீன்னு கேட்கறேன்..."

"விட்டுடலாமா வேலையை...?"

'கிண்டலா?...' அவன் முகத்தை ஆராய்ந்த போது அனுமானிக்க முடியவில்லை.

"அவசரப்பட வேண்டாம். பார்ப்போம்..." என்றான்.

ஆச்சர்யத்துடன் அவனைப் பார்த்தாள்.

இப்போதும் அவனுக்குப் பயமாகத்தான் இருந்தது. ○

(முற்றும்)

ஸ்ரீ டிராவல்ஸ்

12/A, ரெட்ஹில்ஸ் ரோடு, கொளத்தூர், சென்னை - 600 099.
E- மெயில்: sritrave@md3. vsnl.net.in Ph : 5378620 Telefax : 5584866

கொட்டும் மழை, கொளுத்தும் வெயில், நடுக்கும் குளிர் இவை எதுவுமே இல்லாத வசந்தகால சுற்றுலா!

ST 3

வட இந்திய சுற்றுலா!

புறப்படும் தேதி : 26.02.1999

பெங்களூர்/சென்னை – அவரங்காபாத், அஜந்தா, மும்பை, ஜெய்ப்பூர், ஆக்ரா, டில்லி, சிம்லா, குலு, மணாலி, சண்டிகார், ஹரித்துவார்-ரிஷிகேஷ்-டில்லி, சென்னை/பெங்களூர்.

பயணத் தொகை : ரூபாய் 6,800/- 15 நாட்கள்

ST 2

வட இந்தியாவில் உள்ளவர்களுக்கு தென்னிந்திய சுற்றுலா!

புறப்படும் தேதி : 24.01.1999

புது டில்லி/பம்பாய், ஹைதராபாத், பெங்களூர் – மைசூர், ஊட்டி, குருவாயூர், எர்ணாகுளம், திருவனந்தபுரம், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், மதுரை, கொடைக்கானல், திருச்சி, பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், மகாபலிபுரம் – சென்னை - திருப்பதி பாலாஜி தரிசனம். மும்பாய்/புது டில்லி.

பயணத் தொகை : ரூபாய் 7,900/- 15 நாட்கள்

உடனடியாக முன் பணம் ரூபாய் 2,500/- செலுத்துபவர்களுக்கு மட்டுமே கண்டிப்பாக இடங்கள் கிடைக்கும்.


* அனைத்து இடங்களிலும் தரமான ரூம் வசதிகள்
* டூர் முழுவதும் சைவ உணவு
* இடங்களைச் சுற்றிப் பார்க்க 2X2 அருமையான டிலக்ஸ் பஸ்கள்
* எல்லா இடங்களிலும் சுற்றிக் காட்ட அனுபவம் வாய்ந்த பெண் டூர் மேனேஜர்
* மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
* நட்சத்திர ஓட்டலில் மாபெரும் விருந்து
* எல்லா இடங்களிலும் நுழைவுக் கட்டணம் உட்பட
* அனைவருக்கும் குரூப் இன்சூரன்ஸ்
* மேலும் பல பல வசதிகள்

[ஆண்டுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கும், அவர்கள் பெற்றோர்களுக்கும் கண்டிப்பாக அனுமதி இல்லை]

அனைத்து கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்!

[இரயிலில் II tier A/C, III tier A/C/Ist Class வேண்டுபவர்களுக்கு பிரத்யேக வசதி செய்து கொடுக்கப்படும். ஒருமுறை ஸ்ரீ டிராவல்ஸ் மூலம் பயணம் செய்திடுங்கள். சுகமான அனுபவம் உங்களுக்கு காத்திருக்கிறது.

ஏமாற்றத்தை தவிர்க்க! உடனே முந்துங்கள்!!





1998 நவம்பர் 29
வெகுதான்ய கார்த்திகை13
மலர் : 57
இதழ் : 18

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.


மிரண்டு போன பி.ஜே.பி!

நான்கு வட மாநிலத் தேர்தல்களிலும் காங்கிரஸ் அபார வெற்றி பெற்றுவிடும் என்பது கருத்துக் கணிப்பு ஆய்வுகளின் முடிவு. இதைக் கேட்டு காங்கிரஸ் கட்சியினர் எந்த அளவுக்கு மகிழ்ச்சியிலாழ்ந்திருக்கிறார்களோ, அந்த அளவுக்கு பி.ஜே.பி. தலைமை கலவரம் அடைந்துள்ளது.

போதாக்குறைக்கு ஜோதி பாஸுவும் சோனியா காந்தியும் ஒரே மேடையில் தோன்றி தங்கள் இரு கட்சிகளிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதை பகிரங்கப்படுத்தியுள்ளனர். காங்கிரஸிலும் சரி, கம்யூனிஸ்டுகளிடையேயும் சரி, இந்தக் கூட்டணி குறித்து இன்னமும் பலத்த கருத்து வேறுபாடு நிலவுகிறது. இருந்த போதிலும் இப்புதிய உறவு உருவாகிவிடுமோ என்ற எண்ணமே பி.ஜே.பி. மிரண்டு போகப் போதுமானதாயிருக்கிறது.

'காங்கிரஸும் கம்யூனிஸ்டுகளும் அரசைக் கவிழ்க்க முயற்சி செய்யும் துரோகிகள்' என்று கண்டனம் தெரிவித்துள்ளார் பிரதமர். பி.ஜே.பியின் இதர தலைவர்களும் காங்கிரஸ்-கம்யூனிஸ்ட்களின் புதிய 'நட்பை' 'சந்தர்ப்பவாதம்' என்று சாடியுள்ளனர்.

தனது சந்தர்ப்பவாத தேர்தல் கூட்டணியின் மோசமான பின் விளைவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் பி.ஜே.பி., எதிர்த் தரப்பினர் பேரில் சந்தர்ப்பவாதக் குற்றம் சுமத்துவது



வேடிக்கை-அதுவும் அதிகாரபூர்வமாக அக்கூட்டணி குறித்த அறிவிப்பு எதுவும் இதுவரை வராத நிலையிலேயே இவ்வளவு கலவரம்!

காங்கிரஸ் தரப்புக்கு பலம் சேர்க்கிற மற்றொரு முக்கியமான அறிவிப்பு மூப்பனாரிடமிருந்து வெளிப்பட்டிருக்கிறது. தமது கட்சி, காங்கிரஸுடன் கூட்டணி கொள்வதில் ஆட்சேபம் ஏதும் இராது என்றும் இனி காங்கிரஸ்தான் இது குறித்து முடிவுக்கு வர வேண்டும் என்றும் அவர் பேசியிருக்கிறார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் திண்டிவனம் ராமமூர்த்தியும் மூப்பனாரின் கூற்றை வரவேற்றிருக்கிறார்.


'மூப்பனாரின் இந்த நிலையைத் தொடர்ந்து தி.மு.க. தலைவர் என்ன முடிவெடுக்கப் போகிறார்?' என்று ஆவலுடன் விசாரித்திருக்கிறார் மணி சங்கர் அய்யர்!

அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து ஆதரவுக் கட்சிகள் விலகத் தயாராகிவிட்ட நிலையில் தமிழகத்தின் அரசியல் சூழ்நிலை 'ஜெ எதிர்ப்பு' என்கிற வியூகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆனால் இத்தகைய ஒரு வியூகம் உருவாவதற்கு முன், காங்கிரஸை தன் பக்கம் இழுக்க அ.தி.மு.க. முயற்சி செய்யக் கூடும். அந்த வலையில் பி.ஜே.பி. போல தானும் சிக்கிக் கொள்ளாமல், சோனியா தலைமையிலான காங்கிரஸ் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, காங்கிரஸை மையப்படுத்தி ஒரு புதிய கூட்டணி விரைவில் உருவாகிவிடும் என எதிர்பார்க்கலாம். தற்போது பி.ஜே.பியை வேண்டாவெறுப்பாக ஆதரித்து வரும் லோக் சக்தி போன்ற சிறு கட்சிகளும்கூட இந்தக் கூட்டணிக்கு இடம் பெயரக் கூடும்.

இதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்துத் தான் பி.ஜே.பி. தலைமை ஆடிப் போயிருக்கிறது.

மாநிலத் தேர்தல் முடிவுகள் பி.ஜே.பிக்கு எதிராக அமையும் பட்சத்தில், தற்போது நெருங்கி வந்து கொண்டிருக்கும் கட்சிகள் ஒன்று சேர்ந்து பி.ஜே.பி. கூட்டணி அரசைக் கவிழ்த்துவிட்டு



மற்றொரு கூட்டணி ஆட்சியை அமைக்க முயற்சி மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால், இவ்வாறு செய்வதனால் நாட்டுக்கு நல்ல பலன் கிடைக்குமா என்பது யோசனைக்குரியது.

ஆளும் அரசைக் கவிழச் செய்துவிட்டு அமைக்கப்படும் மாற்று ஆட்சி, மக்களின் மரியாதையைப் பெறுவது மிகவும் கஷ்டம்.

மீண்டும் தேர்தல் நடத்துவது, பொருளாதார ரீதியிலும் மனவியல் ரீதியிலும் தாங்க முடியாத சுமையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், நிலையான ஆட்சி, நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்கிற நன்மை கருதி அச் சுமையை ஏற்றாக வேண்டும்.

இன்னொரு பொதுத் தேர்தல் வருகிற தருணத்தில், மதச்சார்பற்ற கூட்டணியாக ஒன்று சேரும் கட்சிகள் தங்களுக்கிடையேயான ஒட்டுறவையும் அடிப்படைக் கொள்கைகளில் உள்ள ஒற்றுமையையும் மக்கள் நம்பும் வகையில் வெளிப்படுத்தி பிரசாரம் செய்யலாம்.

காங்கிரஸானாலும் சரி, கம்யூனிஸ்ட்டுகளானாலும் சரி, இனி தாராளமயமான பொருளாதாரக் கொள்கையைவிட்டு விலகி வரப்போவதில்லை என்பதால் மதச் சார்பு Vs மதச்சார்பின்மை என்கிற அம்சமே தேர்தலில் முக்கியத்துவம் பெறும்.

போஃபர்ஸ் போன்ற ஊழல்கள் நடந்திருப்பதை மறுக்க முடியாவிட்டாலும் எதிர்காலத்தில் ஊழலற்ற, தூய்மையான, திறமையான ஆட்சி அமைப்பதாக உறுதி அளிக்கலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இரு முனைப் போட்டியாக அடுத்த தேர்தல் நடைபெறுமானால், வாக்குகள் சிதறிப் போகாமல், ஒரு கூட்டணி வெற்றி பெற்று பெரும்பான்மை ஆட்சி அமைக்கும் சூழ்நிலை உருவாகும். புதிய ஆட்சியின் ஸ்திரத்தன்மையே நாடு தேக்க நிலையிலிருந்து விடுபட்டு முன்னேற முதல் படியாக அமையும்.

அர்ஜுன் சம்பத். தீவிரவாதிகளின் கொலைப் பட்டியலில் உள்ள 22 பேரில் ஒருவராகச் சொல்லப்படுபவர். இந்து முன்னணியிலிருந்து பிளவுபட்ட 'இந்து மக்கள் கட்சி'யின் மாநிலப் பொதுச் செயலாளர். 'இந்துத்வா' கோஷத்தில் அழுத்தமாய் நிற்கும் 32 வயது இளைஞர். 'நவம்பர் 29—காவலர் உரிமை தினம், டிசம்பர்—2 திருப்பரங்குன்றத்தில் தடைமீறி தீபம் ஏற்றும் தினம், டிசம்பர்—6 கரசேவை தியாகிகள் தினம், ஜனவரி—12 சரஸ்வதி வந்தனத்தை வலியுறுத்தும் தினம், பிப்ரவரி —14 பயங்கரவாத எதிர்ப்பு தினம்!' என்கிற தினப் பட்டியலை வைத்துக் கொண்டு பிஸியாய் இருந்த அவரைச் சந்தித்தோம்....



கல்கி: 'டிசம்பர் ஆறாம் தேதியை மம்தா பானர்ஜி துக்க தினமாக அறிவித்துள்ளாரே?

அர்ஜுன் சம்பத்: இங்கே கூடத்தான் 'லத்தீப்' அன்றைக்கு உண்ணா விரதம் இருக்கப் போவ தாகச் சொல்லியிருக்கிறார். உண்ணா விரதம் இருப்பவர் அயோத்திக்குப் போய் இருக்க வேண்டியதுதானே? இங்கே த.நா அரசோ, தமிழக போலீசோ, மக்களோ கூட இந்தப் பிரச்னையில் எந்த விதமான சம்பந்தமும் இல்லாதவர்கள். பாப்ரி மஸ்ஜித்தை இடித்த பொழுது இங்கும் சரி, உ.பி. யிலும் சரி முழு அமைதியே இருந்தது. அயோத்திக்கு வெளியே எங்கெல்லாம் தீவிரவாத அமைப் புக்கள் இருக்கிறதோ— அவர்களைத் தூண்டிவிடக் கூடியவர்கள் இருக் கிறார்களோ அங்கேதான் கலவரங் கள் நடந்தது. நடக்கிறது. 'பாப்ரி மஸ்ஜித்' இடிக்கப்பட்ட நாளில் உண்ணாவிரதம் இருப்பேன் என இவர் சொல்வதும் அல்லது அந்த நாளை துக்க தினமாகக் கொண்டாடுவோம் என்று மதுரையில் தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம்— சுவர்களில் எழுதியிருப்பதும் தமிழகத்தில் மீண்டும் மதக் கலவரத்தைத் தூண்டும் முயற்சி. எப்படி கோவையில் கடந்த ஆண்டு செய்தார்களோ அதே போல இந்த ஆண்டு மதுரையில் செய்து கொண் டிருக்கிறார்கள். சென்ற வருடம் டிசம்பர் ஆறாம் தேதி துக்க தினம், கறுப்புத் தினம் என்று எழுதினார்கள். அதன் பின் விளைவினை நாம் கண்டதனால் இதனைச் சொல்கிறோம்.

கல்கி: அப்போது நீங்களும்தானே—இந்து முன்னணியுடன் இணைந்து வெற்றி தினம் என அறிவித்திருந்தீர்கள்? அது எந்த வகையில் சரி?

சம்பத்: நாங்கள் வெற்றித் திருநாள் என்று இதுவரையிலும் முதலில் அறிவித்ததில்லை. இந்து முன்னணியும் அப்படிச் செய்ததில்லை. ராமர் பிறந்த இடத்தில் இருந்த ஒரு கட்டடத்தை இடித்தது அவர் களுக்கு துக்க தினம் என்றால், ராமர் பிறந்த இடத்தை நாங்கள் மீட்ட தினத்தை வெற்றி தின மாகவே கொள்ள வேண்டியிருக்கிறது. இப்போதும் சொல்கிறோம்.... அவர்கள் அப்படி அறிவிக்காமல், உண்ணாவிரதமும் இருக்காமல் இருக்கட்டும். நாங் களும் எதுவும் செய்யாமல் இருக்கிறோம். ஆனால் போன வருடம் த.மு.மு.க. செய்த காரியத்தை இப் போது லத்தீப் செய்கிறார்.

கல்கி: பாப்ரி மஸ்ஜித் இடிப் பின் பின்னணி இன்றைக்கு வரைக் கும் ஒரு தீர்க்க முடியாத—மக்கள் விரோதப் போக்கைத்தான் ஏற் படுத்தியிருக்கு. நீங்கள் அந்த இடிப் புக்கு என்னதான் நியாயம் கற்பித் தாலும் அடுத்தடுத்து நிகழும் வன் முறைகளுக்கு எதுதான் தீர்வு?

பி.ஜே.பியும் ஆர்.எஸ்.எஸ்.ஸும் தமிழகத்தைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை!

சம்பத்: கேள்வியில் அடிப்படையான ஒரு விஷயத்தை நான் மறுக்கிறேன். பாப்ரி மஸ்ஜித்தை இடித்ததனால் கலவரம் என்பது அடிப்படையிலேயே தவறான கருத்து. 1947–லே தனியாக பாகிஸ்தான் கேட்டார்களே அப்போது எந்த பாகிஸ்தான் இடிக்கப்பட்டது? நவகாளி திப்ராவுல இந்துக்களைக் கொன்றார்களே அப்போது எந்த மசூதி இடிக்கப்பட்டது? மீரட் உட்பட பல் வேறு இடங்களிலெல்லாம் கலவரம் நடந்ததே, அதெல்லாம் பாப்ரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட பின்னாலா நடந்தது? பாப்ரி மஸ்ஜித் விவகாரத்தை அரசியல் காரணத்திற்காகவே இந்த அரசியல்வாதிகள் பெரிது படுத்தி விட்டனர்.

கல்கி: ஏற்கெனவே மத வேற்றுமை உணர்வுகளால் கலவரங்கள் நடந்துள்ள சரித்திரத்தை நீங்களே சொல்கிறீர்கள். அந்த வேற்றுமையை வளர்ப்பது எப்படி நியாயமாகும்? தவிர தீவிரவாதம் என்பது பாப்ரி மஸ்ஜித் இடிப்புக்குப் பின்னால்தானே சராசரி குடிமகன் வரையிலும் வலுப்பெற்றுள்ளது? சராசரி மனிதனின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டிருக்கிறது!

சம்பத்: நீங்கள் சொல்வதுபோல் பாப்ரி மஸ்ஜித் இடிப்பினால் சராசரி மனிதனுக்கு பாதிப்பிருந்திருந்தால் – 'பாப்ரி மஸ்ஜித்தை இடித்தேன்' என மார்தட்டிச் சொல்லுகிற கல்யாண்சிங் இன்றைக்கும் அங்கே முதலமைச்சராய் இருக்கிறாரே...எப்படி...? பாப்ரி மஸ்ஜித் இடிப்பு சரி எனச் சொல்லுகின்ற சிவசேனை எப்படி ஆட்சியில் உள்ளது...? இந்தக் கம்யூனிஸ்டுகளும், காங்கிரஸ், தி.க., தி.மு.கவில் உள்ளவர்களும் வேண்டுமானால் இதை திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கலாமேயொழிய, இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மையான இந்துக்கள் ராமர் பிறந்த இடத்தில் அவருக்கு ஆலயம் அமைய வேண்டும் என்றே நினைக்கிறார்கள். நீங்கள் கேட்கிற நிரந்தரத் தீர்வு இங்கே ஏற்பட வேண்டுமானால் ராமர் ஆலயத்துடன் இன்னும் இரண்டு விஷயங்களை அவர்கள் விட்டுக் கொடுத்தே ஆக வேண்டும். அவை கண்ணன் பிறந்த மதுரா, புனிதமான காசி. இந்த இடங்களில் அந்நியனுடைய அடிமைச் சின்னத்தை வைத்துக் கொண்டு அவர்களுடன் நாங்கள் சமாதானமாக இருக்க முடியாது. அது சாத்யமே இல்லை. நியாயப்படி நாங்கள் கேட்டால் மூவாயிரம் கோயில்கள் கேட்க வேண்டும். அவர்களுடன் விவகாரம் வேண்டாம் என்றே இந்த மூன்று விஷயத்தை மட்டும் விட்டுக் கொடுக்கச் சொல்கிறோம். பொது சிவில் சட்டம் கொண்டு வந்தால் ஒழிய இங்கே நிரந்தரத் தீர்வு சாத்யமில்லை.

கல்கி: இன்னும் இங்கே தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர் என நீங்கள் நம்புகிறீர்களா...?

சம்பத்: நிச்சயமாக. அல்–உம்மா, ஜிகாத் தடை செய்யப்பட்ட பின்னாலும் கூட மற்ற கட்சிகளின் போர்வையில் அவர்கள் இன்றைக்கும் வெளிப்படையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கல்கி: நீங்கள் இந்து முன்னணியில் இருந்து பிரிந்து வந்தவர்கள்... பா.ஜ.கவிலிருந்தும் விலகியே நிற்கிறீர்கள். ஏன்? என்ன காரணம்?

சம்பத்: இந்து முன்னணி, பா.ஜ.க. எல்லாமே ஆர்.எஸ்.எஸ். சார்ந்த அமைப்புகள். இந்த அமைப்புகள் அகில இந்திய அளவில் செயல்படக் கூடிய-அகில இந்திய பிரச்னைகளை மையமாக வைத்தே செயல்படக் கூடியவை. அமைப்பு ரீதியாகவோ–பிரச்னைகள் அடிப்படையிலோ அவர்கள் தமிழகத்தில் சரியானபடி கவனம் செலுத்தவில்லை. செயல்படவும் இல்லை. உதாரணமாக இங்கே ராஜகோபாலன் கொலை வழக்கு. இந்து முன்னணித் தமிழகத் தலைவர் ஒருவர் கொல்லப்பட்ட நிலையில் பா.ஜ.க. எம்.பிக்களில் ஒருவர் கூட நாடாளு

மன்றத்தில் அது பற்றிப் பேசவில்லை. அங்கே அயோத்தி பிரச்னைக்குக் கொடுக்கப்பட்ட கவனம் இங்கே கொடுக்கப்பட வில்லை. வங்காளத்தில் 'பீன்பிகாங்கிற' ஒரு சின்ன கிராமத்தை கிழக்கு வங்காளத்திற்கு கொடுத்தவுடனே அத்வானி சத்யாக்ரகம் பண்றதுக்குக் கூப்பிடறார். நாங்களும் போகிறோம். ஆனால் இங்கே கச்சத்தீவு அப்படியே இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது. இதுக்கு எந்த விதமான போராட்டமும் இல்லை. காவிரிப் பிரச்னையை எடுத்துக்கிட்டீங்கன்னா அவங்க அகில இந்தியா தழுவின நிலைப்பாடுதான் எடுக்கிறார்களேயொழிய, தமிழகத்தின் உரிமைக்கும், நலனுக்கும் குரல் கொடுப்பதில்லை. மேலும் தமிழ்நாட்டிற்கென சில விசேஷமான பிரச்னைகள் இருக்கு. இங்கே நாத்திக சக்திகள் ஆட்சியில் இருக்கு. இந்து விரோத சக்திகள் ஆட்சியில் இருக்கு. இந்தியாவின் எந்தப் பகுதியிலும்- கோயில்களுக்கு முன்னால் 'கடவுள் இல்லை...' என்கிற கல்வெட்டு கிடையாது. இங்கேதான் இருக்கு. இப்படி தமிழகம் இந்து விரோதிகளின் களமாக- இந்துக்களுக்கு எதிரான பயங்கரவாதிகளின் முக்கியமான கேந்திரமாக இருக்கிறது. தமிழகம் இந்துக்களுக்கு அறவே பாதுகாப்பற்ற பூமியாக-இந்துக்கள் பிரச்னை பற்றி கவலை கொள்ளாத அரசியல்வாதிகள் நிறைந்த பகுதியாக- இருந்து வருகிறது. அதனால் இந்துக்களுக்காக ஒரு அமைப்பை இங்கே வலிமைப்படுத்த வேண்டும் என்றே 1995-ல் இதனை உருவாக்கினோம்.

கல்கி: உங்களுடைய கருத்துக்கள் இந்து முன்னணித் தலைவர் ராமகோபாலன் கருத்துக்களுடன் ஒத்துப் போவது போல் உள்ளதே..!

சம்பத்: அவருடைய கருத்துக்களுடன் எங்களுக்கு நிறைய முரண்பாடு உண்டு. தமிழ்மொழி அர்ச்சனையை அவர் உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கிறாரா என்பதில் எங்களுக்கு ஓர் ஐயப்பாடு உண்டு. அதை அவர் இன்னும் தெளிவுபடுத்த வில்லை. அவர் நடத்துவது ஓர் இயக்கம். நாங்கள் அரசியல் அமைப்பு. தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்து சமுதாயத்திற்குத் தலைமையேற்க வேண்டும் என நாங்கள் நினைக்கிறோம். இன்றைக்கு வரைக்கும் பா.ஜ.க. கட்சியில் ஒரு தலித்கூட மாநிலத் தலைவரா வரலை. இந்து முன்னணியில் கூட ஒரு சாதாரண- ஒடுக்கப்பட்ட- தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முக்கியமான பொறுப்புகளில் வர முடியவில்லை. எனவே அங்கே அதற்குச் சரியானபடி வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது.

கல்கி: கடைசியாக ஒரு கேள்வி. நீங்களும் தி.மு.க.வை கடுமையாகச் சாடுகிறீர்கள். இஸ்லாமியர் சார்ந்த த.மு.மு.கவும் கலைஞர் அரசைக் கடுமையாக விமர்சிக்கிறது. உண்மையில் தமிழக அரசின் செயல்பாடு எப்படியுள்ளது?

சம்பத்: எங்களைப் பொறுத்தவரை தி.மு.க. அரசு குண்டு வெடிப்புக்குப் பின்னால் ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறது. இஸ்லாமியரை ஆதரிப்பது என்பது வேறு-இஸ்லாமிய பயங்கரவாதச் செயல்களை ஆதரிப்பது என்பது வேறு என்கிற கண்ணோட்டம் இன்றைக்கு தி.மு.கவில் உருவாகியிருக்கு. அதன் அடிப்படையில் பயங்கரவாதிகளுக்கு எதிராய் எடுக்கப்படுகிற நடவடிக்கைகளை வைத்து த.மு.மு.க. போன்ற அமைப்புகள் அவற்றை ஒட்டுமொத்த இஸ்லாமியர்கள் மீது எடுக்கப்படுகிற நடவடிக்கைகளாகச் சித்தரிக்கிறார்கள். த.மு.மு.கவின் இந்நிலை நமக்கு ஆபத்தானது. ○

பேட்டி, படம்: **கேயெஸ்வி**



''அரசியல் கூட்டத்துக்கு வர்றவங்ககூட வியாபாரத் தந்திரம் தெரிஞ்சுக்கிட்டாங்க தலைவரே!''

''என்னய்யா விசயம்?''

''ரெண்டு மீட்டிங் கூலிக்கு அழைச்சா ஒரு மீட்டிங் இலவசமா வர்றதா அறிவிச்சிருக்காங்க!''

– அம்பை தேவா

இன்றைய மங்கையர் எல்லா இடங்களிலும் அருஞ்செயலாற்றி சீரும் சிறப்புமாய்த் திகழ்கின்றனர்.



இன்றைய மங்கையரிடம் பாதுகாப்பிற்கு சேமிக்கும் இயல்பான செயல்பண்புடன் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் பிரதிபலிக்கின்றன.

எல் ஐ சி-யின்

ஜீவன் ஸ்நேஹா

தனிப்பட்ட முறையில் இன்றைய மங்கையர்கான பாலிஸி

சிறப்பு அம்சங்கள்:

- விருப்பபடி பணமாக மாற்றிப் பெறும் வசதியுடன் கூடிய காப்பீடு செய்த தொகையின் காலந்தோறுமான வருமானம். எல்ஐசி-யில் வைத்திருந்தால் கவர்ச்சியான ஆதாயங்கள்.
- ஆண்டொன்றுக்கு காப்பீடு செய்த ஒவ்வொரு ஆயிரம் ரூபாய்க்கும் ரூ 70/- என்ற வீதம் கேரன்ட்டி அடிஷன்களாக கூடுதல் தொகையும் மற்றும் காப்பீடு செய்த ஒவ்வொரு ஆயிரம் ரூபாய்க்கும் ரூ.55/- முதல் ரூ.535/- என்ற மாறுபடும் வீதம் லாயல்ட்டி அடிஷனாகவும் கார்ப்பரேஷனின் பணி அனுபவம் மற்றும் காப்பீடு செய்துள்ள தொகையையும் பொறுத்து செலுத்துவதற்கான தன்னிகரற்ற ஏற்பாடு உள்ளது.
- சில சூழ்நிலையின் கீழ் பிரிமியம் கட்டாதிருப் பினும் ஆயுள் காப்பீடு தொடரும்.
- பிரிமியம் செலுத்திவதில் சலுகை - தள்ளுபடியுடன் முன்னதாக பிரிமியம் செலுத்தும் வசதி.
- 'ஜீவன் ஸ்நேஹா' விபத்து ஆதாயத்துடன் கர்ப்பத்திலும், குழந்தை பிறக்கையிலும் உள்ள ஆபத்துக்கும் காப்பீடு வழங்குகிறது - கூடுதல் கட்டணம் இன்றி.
- 'ஜீவன் ஸ்நேஹா' முதிர்வின் பேரில் ஓய்வுக் கால ஊதிய (ஆண்டளிப்பு) விருப்பத்தேர்வு சலுகையும் வழங்குகிறது.

லைஃப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா

மக்களின் மகத்தான சேவையில்

நீங்கள் எடுத்துள்ள பாலிசி பற்றி எமது ஐவிஆர்எஸ் வசதி மூலம் தகவல்களை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் :

மும்பாய் : 618 7655, சென்னை : 858 9830, பெங்களூர் : 221 1435.

SASALIC/98-R/TAM

சென்னை கதிட்ரல் ரோடில், தனிஷ்க் நகைக் கடை தயவில், சென்னை மாநகரத்து பெரிய நகைக் கடைகள் மட்டுமல்ல; பல்வேறு ஊர் நகைக் கடைகளின் வண்டவாளங்களும் தண்டவாளம் ஏறும் காட்சி அரங்கேறிக் கொண்டிருக்கிறது. காரணம் அங்கு வைக்கப்பட்டிருக்கும் கேரட் மீட்டர் என்ற கருவிகள்தான். (நகையில் எந்த அளவுக்குத் தங்கமும், செம்பு, வெள்ளி . போன்ற அதன் உடன்பிறவா சகோதரிகளும் கலந்து இருக்கின்றன என்பதைத் துல்லியமாகக் காட்டும் இந்தக் கருவியைப் பற்றிய கவர் ஸ்டோரி, இம்மாத ஆரம்பத்தில் கல்கியில்


• கேரட் மீட்டர்

ஏமாற்று வேலை

அம்பலம் ஆனது!

வெளிவந்தது.)

பொதுமக்கள் தங்களிடம் உள்ள நகைகளைக் கொண்டு வந்து, கேரட் மீட்டரில் வைத்து பரிசோதித்துக் கொள்ளலாம்; இதற்குக் கட்டணம் எதுவுமில்லை என்று அறிவித்திருந்தனர். சென்னை நகர சினிமா தியேட்டர்கள் . ஹவுஸ்ஃபுல் ஆனதோ இல்லையோ, தனிஷ்க் ஷோரூமில் போட்டிருந்த இருபத்தைந்து சீட்களும் தொடர்ந்து ஃபுல். தாம்பரம், குரோம்பேட்டை போன்ற புறநகர் வாசிகள்தான் என்று இல்லை; அயலூர்க்காரர்களும்கூட வந்திருந்தார்கள். லோக்கலில் நகை வாங்கினவர்கள்தான் என்று இல்லை; அபுதாபி, அமெரிக்காவிலிருந்து தங்கம் வாங்கியவர்களும் நகைகளைக் கொண்டு வந்திருந்தார்கள்.

சரியாக நூற்றியெண்பது விநாடிகளில் நகையின் பரிசுத்தம் தெரிந்து போகிறது. மைலாப்பூரைச் சேர்ந்த ஸ்ரீமதி, கொண்டு வந்திருந்த வளையலை கேரட் மீட்டருக்குள் வைத்ததையடுத்த மூன்று நிமிடங்களில் அவருக்கு ஏக டென்ஷன். கம்ப்யூட்டர் திரையில் அவரது வளையல் 21.90 கேரட் என்று வந்தபின்தான் நார்மல் ஆனார்.

ஒரு நகைக்கடையில் வாங்கிய தங்கக் காசைப் பரிசோதித்தபோது 22 கேரட் இருந்தது. ஆனால் அதே கடையில் வாங்கிய மோதிரத்தை வேறு ஒருவர் கொண்டு வந்தார். அதனைச் சோதித்தபோது 21 கேரட்தான் இருந்தது.

"நான் இந்த நெக்லசை வாங்கின நகைக் கடை இப்போது மூடப்பட்டு விட்டது!" என்று சொன்னபடியே நெக்லஸைத் தந்தார்கள் வடபழனியிலிருந்து வந்த தம்பதி. நகைக் கடையில் டெபாசிட் போட்ட பொது ஜனங்கள் அநேகம் பேர் ஏமாந்து போய் விட்டாலும், நெக்லசை வாங்கிய தம்பதிக்குத் திருப்தி; 22.01 கேரட் இருந்ததால்!

கேரட் மீட்டர் முன்பு அமர்ந்து பரிசோதித்துக் கொடுத்துக் கொண்டிருந்த அழகப்பனுக்கு "ஸாரிங்க! நிறைய பேர் வெயிட் பண்ணறாங்க. அதனால, ஒருத்



தருக்கு ஒரு நகைதான் டெஸ்ட் பண்ண முடியும்'' என்று சொல்லி மாளவில்லை. அவர் பக்கம் நியாயம் இருந்தாலும், வந்திருந்தவர்களுக்குக் கொஞ்சம் ஏமாற்றம் முகத்தில் ஏற்பட்டதை கவனிக்க முடிந்தது.

''என்னிடம் நாற்பது, ஐம்பது பவுனுக்கு நகைகள் இருக்கின்றன. அத்தனையையும் கொண்டு வர முடியாதே என்ன செய்ய?'' என்று ஒருவர் ஆலோசனை கேட்க, 'ஒரு கடைக்கு ஒன்று என்று சாம்பிளாக எடுத்துக் கொண்டு வாருங்கள்' என்று ஆலோசனை கூறப்பட்டது.

''இருபத்தி இரண்டு கேரட் என்று சொல்லி, உங்களிடம் விற்கப்பட்ட நகை 20.65 கேரட்தான் என்று இப்போது நிருபணமாகி விட்டதே! அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று கோபாலபுரத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியிடம் கேட்டபோது, ''என்ன பண்ண? வாங்கின கடையில் போய்ச் சொல்லலாம்? ஆனால் என்ன பலன் கிடைக்கும்?''

''கோர்ட்டுக்குப் போகலாமே?''

''துண்டுக் காகிதத்தில் எஸ்டிமேட் எழுதிக் கொடுத்து, வரியைத் தவிர்த்து, வாங்கின நகையாயிற்றே! பில் இல்லாமல் கோர்ட் ஏற முடியாதே!'' என்றார் வேதனையுடன்.

கேரட் மீட்டரில் பரிசோதிக்கும் ஒவ்வொரு நகையும் உண்மையில் எத்தனை கேரட் என்று சொல்லி விற்கப்பட்டது, கஸ்டமர் எந்த ஊர்க்காரர், எந்த மாதிரியான நகை பரிசோதிக்கப்பட்டது போன்ற விவரங்களைக் குறித்து வைத்துக் கொள்ளுகிறார்கள்.

இப்படி வந்து பரிசோதிக்கப்பட்ட நூறு நகைகளைப் பற்றிய விவரங்களைக் கூர்ந்து ஆராய்ந்ததில் திடுக்கிடச் செய்யும் உண்மை ஒன்று வெளியானது. உண்மையில் 22 கேரட் இருந்த நகைகள் வெறும் பத்து சதவீதம்தான். மற்றவையெல்லாமே பதினெட்டு கேரட்டில் தொடங்கி 21.9 கேரட் வரை தரத்தில் மாறுபட்டன.

''இதுவரை வந்த கஸ்டமர்களிலேயே மறக்க முடியாதவர் யார்?'' என்று கேட்டபோது கிடைத்த பதில்:

''ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி 22 கேரட் என்று நினைத்துத் தாம் வாங்கிய நகை, வெறும் பதினாலு கேரட்தான் என்று தெரிந்தவுடன் துக்கம் தாங்காமல் அழவே ஆரம்பித்து விட்டார்!''

— மௌலி

படம்: ஸ்ரீஹரி

''உன் கணவர் டாக்டரா இருக்கலாம், அதுக்காக டைனிங் ரூமைக் கூட ஆபரேஷன் தியேட்டர் மாதிரி ஜோடிக்கணுமா?''

''என்ன செய்யறது? சமயலுக்குக் காய்கறி நறுக்கிக் கொடுக்கச் சொன்னால்கூட ஆபரேஷன் தியேட்டர் சூழ்நிலை இருந்தாத்தான் வெட்ட வரும் என்கிறார்!''

– லலிதா செல்லப்பா



கோவை: டிசம்பர்-6 எப்படியிருக்கும்?

கடந்த ஆண்டு கோவையில் நடந்த பாதக நிகழ்ச்சிகளுக்கெல்லாம் முழு முதற்காரணம் முதலில் நடந்த போஸ்டர் யுத்தம். கல்கியில் நாம் அப்போதே வலியுறுத்தியிருந்ததை, நாம் மறந்தாலும் கோவை காவல் துறை மறப்பதாயில்லை. வன்முறையைத் தூண்டும் மத உணர்வை வலியுறுத்தும் போஸ்டர்களோ, சுவர் எழுத்துக்களோ எங்கும் காணோம். ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் போன்ற போஸ்டர்களும் காவல்துறை அனுமதி பெற்றே ஒட்டப்பட வேண்டும்.

கடந்த தீபாவளியன்று வாழ்த்துச் செய்தி சொல்கிறேன் பேர்வழி என்று இந்து முன்னணி, சில போஸ்டர்களை (இந்துக் கடைகளிலேயே வாங்கி, இந்தியப் பொருளாதாரத்தை உயர்த்துங்கள்...!) ஒட்டியிருந்தது. அவை பெரும்பாலும் அப்புறப்படுத்தப்பட்டு விட்டன.


நகரின் மையத்தில் இருந்த போலீஸ் செக் போஸ்ட்கள் படு உஷாராக்கப்பட்டுள்ளன. முக்கியமான சில இடங்களில் செக் போஸ்ட்கள் புறக்காவல் நிலையங்களாகவே மாறி விட்டன. விடுமுறையில் உள்ள போலீஸார் அனைவரும் பணிக்குத் திரும்ப அழைக்கப்பட்டிருப்பதாகவும், வெளி மாவட்டங்களிலிருந்து கூடுதல் போலீஸார் அழைக்கப்பட இருப்பதாகவும் தொடர்ந்து போலீஸ் வட்டாரத் தகவல்கள். கூடுதலாக வீடு வீடாகச் சென்று சோதனைகளும் நடத்துகிறார்கள் போலீஸார்.

இந்த நிலையில் 'டிசம்பர் - 6' எப்படியிருக்கும்? என்கிற கேள்வியை இரு ஆன்மீகவாதிகளைச் சந்தித்துக் கேட்டோம்.

பேரூர் ஆதீனம் மருதாசல அடிகளார் (இளைய பட்டம்) :

இந்த வருடம் வன்முறைக்கான அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரியவில்லை. மக்கள் வன்முறையால் சோர்ந்து போயிருக்கிறார்கள். ஆனால் வேறு வகையில் அபாயம் வரலாம்.

உதாரணமாக சம்பத்தில் குண்டு



• இந்து முன்னணி ஒட்டிய போஸ்டர்கள்...

வெடிப்பில் கைதான ஏழு பேரை வடகோவையில் போலீஸார் அழைத்துப் போனபோது எழுப்பப்பட்ட கோஷம் அவர்கள் மனத்தில் என்ன இருக்கிறது என அறிய வைத்தது. 'எங்களுடைய அல்லாவின் ராஜ்யம் அமைகிற வரை ஓயமாட்டோம்.. யாரெல்லாம் அல்லாவை வழிபடவில்லையோ அவர்களெல்லாம் எங்கள் எதிரிகள்தான்...' என ஆயிரக் கணக்கானவர் மத்தியில் கோஷம் எழுப்புகின்றனர் என்றால் அதன் பின் விளைவுகளை எண்ணிப் பாருங்கள்.

இது தீவிரவாதத்தில் நம்பிக்கையிருக்கக் கூடியவனுக்கு 'இவ்வளவு நடந்த பிறகும் இவர்களிடத்தில் அமைதி வரவில்லை. எனவே நாமும் நம் போக்கை வலுப்படுத்த வேண்டும்' என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். இங்கே மேற் சாம்பலைப் பார்த்து நெருப்பு அணைந்து போச்சுன்னு நினைக்கிறாங்க. அதுவல்ல உண்மை. உள்ளுக்குள் இன்னும் அது அப்படியேதான் இருக்கிறது. சப்பைக் கட்டுக்கட்டி – சிக்கலான நேரத்திற்கு மட்டும் நடவடிக்கை எடுத்து ஆறப் போட்டுப் போட்டே நமக்கு பழகிப் போச்சு. இது தவறு.



• பேரூர் ஆதீனம் - இளைய பட்டம்

மக்களிடம் விழிப்பு வேண்டும். தீவிரவாதத்தைப் புரிஞ்சுக்கறதுக்கு முன்னால் மதம்னா என்னன்னு புரிஞ்சுக்கணும். உயர்ந்த நிலைக்குப் போவதுதான் சமயம். ஒவ்வொரு கிராமத்திலோ, பகுதியிலோ, ஊர்களிலோ கூட்டு வழிபாட்டு முறை வாரத்திற்கு ஒருமுறையேனும் செய்யணும். மக்கள் மனதால் பண்பட வேணும். அது நிச்சயம் பக்குவப்படுத்தும். இல்லையென்றால் சமயத்தினால் பயனில்லாமல் போகும். மக்களிடையேயிருந்து அமைதிக் குழு உருவாக வேணும். அரசாங்கத்தினால் அது திணிக்கப்படக் கூடாது. அப்போதுதான் முழுமையான தீர்வு கிடைக்கும்.

அபுபக்கர் பாகவி (கோவை மாநகர மூஸ்லீம்கள் மார்க்க அறிஞர்கள் சபை – தலைவர். மத நல்லிணக்கக் குழு உறுப்பினர்) :

என் கணிப்புப்படி 1992 – டிசம்பர் 6க்குப் பிறகு கோவையைப் பொறுத்தவரை சில அசம்பாவிதங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்த அடிப்படையிலேயே அரசாங்கமும் அதிகாரிகளும் இப்போது அனுமிக்கிட்டிருக்கிறார்கள். பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்துட்டு வர்றாங்க. ஆனா இந்த வருஷத்தைப் பொறுத்தவரை அதற்குண்டான தீவிரவாதத்தை விரும்பக் கூடிய இளைஞர்கள் இங்கே இல்லை என்பதுதான் என் கருத்து. கோவையில் எந்த மாதிரி அசம்பாவித சம்பவங்களும் நடக்காது என்பது எனது திடமான நம்பிக்கை. குடும்ப ரீதியாகவ்ும், தொழில் ரீதியாகவும் பெரும்பான்மையான முஸ்லீம்கள் இப்பகுதியில் பாதிக்கப் பட்டுள்ளனர்.



• அபுபக்கர் பாகவி

இதனால் இப்போது, 'இனி யாருடைய மனத்திலும் அந்த மாதிரி எண்ணங்களை நீ உருவாக்கி விடாதே. யாருக்கும் அத்தகைய எண்ணங்களைக் கொடுத்து விடாதே'ன்னு அல்லாவிடம் ஒவ்வொரு முஸ்லீமும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறான். இனி அந்த மாதிரி நிலை வந்ததுன்னா எங்களால எதுவும் தாங்க முடியாது. பொருளாதாரத் துறையிலும், மற்ற எந்த துறையிலும் அந்த ரூபம் வந்து விடக் கூடாது என்பதே எங்களின் ஐந்து நேரத் தொழுகையிலும் பிரார்த்தனையாயிருக்கிறது. ●

சந்திப்பு, படங்கள் : **கேயெஸ்வி**

திருப்பதி போயிருந்தேன், போன வாரம். குளிரும் க்யூவும் லட்டு வாசனையும் லவுட் ஸ்பீக்கர் பாடல்களும் – எதுவும் மாறலை; ஒண்ணு தவிர. எப்பவும் இருக்கற சுத்தம் ஏனோ இப்ப இல்லை. அங்கங்க குப்பை, bad smell. பப்ளிக் டாய்லட்ஸை சரியா பராமரிக்கலை. மலை மேல முன்னெல்லாம் சிகரெட் பிடிக்க அலவ் பண்ண மாட்டாங்க. இப்ப ஒரு உப புகை மண்டலமே உருவாகி, புனிதத்தோட பர்ஸன்டேஜ் குறைஞ்சிட்டு வருது. எத்தனை கூட்டம் வந்தாலும் ஊர் சுத்தம் கெடலைங்கறதுதான் திருப்பதியோட பெரிய ப்ளஸ் பாயின்டா இருந்தது. இப்ப இருக்கற நிலைமை இன்னும் ஆறு மாசம் நீடிச்சா,

சுமி
சூப்பர் மார்க்கெட்!

மலையே நாறிடும். வெங்கடாஜலபதி வேற இடத்துக்கு ட்ரான்ஸ்பர் கேட்க ஆரம்பிச்சிடுவார். தேவஸ்தானம் உடனே முழிச்சிக்க வேண்டியது அவசியம்.

பத்மாவதி தாயார் கோயில்ல பின்பக்கம் ஒரு கிழவி குறி சொல்லிட்டிருந்ததைக் கொஞ்ச நேரம் நின்னு வேடிக்கை பார்த்தேன். அந்த கான்வர்ஸேஷனை அப்படியே தரேன். கடைசி வரில ஒரு 'செகாவியன் டச்' இருக்கறதை கவனிங்க:

"சொல்லு, சொல்லு, குறையென்ன சொல்லு."

ஒரு பெண்: "தாயி என் புருஷனை கோவத்துல வெட்டிட்டேன்."

"வெட்டின கை எந்தக் கை? வாள் பிடிச்ச கை எதுவோ?"

"எடது கை தாயி!"

(தூக்கிக் காட்டுகிறாள். கிழவி சற்று நேரம் கண்ணை மூடி நின்றுவிட்டு)

"தப்பில்லை தாயே, தக்கதுதான் செஞ்சிருக்கே. முட்ட வந்த மாடனை நீ முறிஞ்சி விழ வெச்சிருக்கே. குடிகாரப் பய அவனோ, குடி கெடுக்க முனைஞ்சிருக்கான். குடி காக்கும் ஆத்தா உன் குறுவாளா நின்னிருக்கா."

"பாவம் ஒண்ணும் வராதே ஆத்தா?"

"வராது. வராது. வந்தாலும் தங்காது. ஆத்தா மனங்குளிர அரிசிப் பொங்கல் சோறு வையி. கால் நூறு காசெடுத்துக் கணக்கா எண்ணி வையி."



"அப்பிடியே செய்யறேன் தாயி. நாளைக்கே உன் உண்டியல்ல இருவத்தஞ்சு ரூவா போட்டுடறேன்!"

(குறி சொன்னவளுக்குக் காசே குடுக்காம போயிட்டா அந்த ராயலசீமா பொண்ணு!)

* * *

தியேட்டர்கள்ல அநியாய டிக்கெட் விலை வெக்கறதா சொல்லி ரீஸன்டா சில தியேட்டர்களுக்கு லைசென்ஸை

ரத்து பண்ணியிருக்காங்க. இதை வரவேற்கிறதோட, இந்த நல்ல காரியம் பண்றவங்களுக்கு இன்னும் சில ஏரியாக்களை அடையாளம் காட்ட விரும்பறேன். கிண்டி சிட்டி லிமிட் தாண்டினதும் வரிசையா தாம்பரம் வரைக்கும் வரக்கூடிய எந்த ஒரு தியேட்டர்லேயும் டிக்கெட்ல உள்ள ரேட் வாங்கப்படறதில்லை. குத்து மதிப்பா இருவது, இருவத்தஞ்சுன்னு வர்ற கூட்டத்துக்கேத்தாப்பல ரேட்! குரோம்பேட் ராகேஷ்ல ஒரு படம் பார்க்கப் போயிருந்தேன். டிக்கெட் ரேட் 7.50. ஆனா வாங்கினது இருவத்தஞ்சு! இதுவே ரஜினி படம்னா ஒரு ரேட், கமல் படம்னா ஒண்ணு, ராஜேந்தர், சரத், விஜய், இப்படி ஸ்டார் வேல்யூவுக்கு ஏற்ப ரேட் மாறும்னு அந்த ஏரியாக்காரங்களே சொல்றாங்க.

இத்தனைக்கும் பக்கத்து பில்டிங்கே போலீஸ் ஸ்டேஷன்.

வெங்கடாஜலபதி டிரான்ஸ்ஃபர் கேட்பார்!?

என்றான்...

அவங்க ஆசிர்வாதமும் பங்கும் இல்லாம இது நடக்கும்னு நான் நம்பலை. சினிமாக்கள் ஓடாததுக்கு திருட்டு வீடியோவை மட்டும் குறை சொல்லிட்டிருக்கறதுல பிரயோஜனமில்லை. திருட்டு தியேட்டர்களை முதல்ல கவனிச்சாகணும். இந்த ரேஞ்சுல போயிட்டிருந்ததுன்னா, யார்தான் தியேட்டர் பக்கம் ஒதுங்க வருவாங்க?

* * *

தமிழன்பனோட 'நடை மறந்த நதியும் திசை மாறிய ஓடையும்' – ரீஸன்டா நான் படிச்சு ரசிச்ச கவிதைத் தொகுதி. கவிதைக்கு அப்புறம் வரலாம். முதல்ல ப்ரொடக்‌ஷனைப் பத்திச் சொல்லணும். கிழிக்கவே முடியாத கெட்டி அட்டை, காஸ்ட்லி பேப்பர், நல்ல ப்ரிண்டிங். ஒரு கவிதைப் புஸ்தகம் இத்தனை பிரமாதமா தயாராகி வர்றது நல்ல விஷயம். கொஞ்சம் காஸ்ட்லின்னாலும் (50 ரூ) பூம்புகார் பதிப்பகம் இதுக்கு எடுத்திட்டிருக்கிற சிரத்தையைக் கண்டிப்பா பாராட்டணும்.

தமிழன்பன்கிட்ட எனக்குப் பிடிச்ச விஷயம் அவரோட சென்ஸ் ஆஃப் ஹ்யூமர். படிச்சதும் சில இடங்கள்ல நம்மை மறந்து சிரிப்போம். சிரிச்ச உடனே யோசிக்க வைக்கிற கவிதைகள். ஒரே ஒரு சாம்பிள் தரட்டுமா?

எனக்குத் தெரியும்
என்றாலும்
எதிர்மாடித் தமிழனைக் கேட்டேன்;
'எப்போது வரும் தமிழ்ப் புத்தாண்டு?'
'எப்போதும்
தப்பாது
ஏப்ரலில் வரும்'

* * *

ஏரிகல் விழறதை வெறுங் கண்ணோட பார்க்கலாம்னு சொல்லி ஆசை காட்டினதுல என் மாதிரி பலர் கண்ணாடியைக் கழட்டிட்டு மொட்டை மாடில ஒரு ராத்திரி தவம் கிடந்து மண்டை காய்ஞ்சதுதான் மிச்சம். கல்லும் தெரியலை; மண்ணும் தெரியலை. தாய்லாந்துக்காரங்களுக்கு அந்த பாக்கியம் கிடைச்சிருக்கு. இந்தத் 'தாய்லேண்டு'ல என் ப்ரெண்ட் ரங்கராஜன் மாதிரி ஒரு சிலர், 'ஒரு கல்லு பார்த்தேன்; ஒண்ணே முக்கா கல்லு பார்த்தேன்'னு புருடா விட்டுட்டிருக்காங்க.

காத்த நேரத்தில் என் மனம் 'யாத்த' ஒரு பா:

தூக்கம் முழிச்சி, அண்ணாந்து
பார்த்து நின்னு
வீக்கம் கண்டுடுச்சே கழுத்து – ஏக்கம்
எனக்கொண்ணும் பெரிசில்லை;
எண்ணி வெச்சேன் வானத்தில்
எண்ணூறு நட்சத் திரம்.

— சுமி

அரசு மருத்துவமனைதான் இது என்றால் யாரும் நம்ப முடியாது. அந்த அளவுக்குச் சேவையும் சுத்தமும் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன...

சாதாரணமாக இரண்டு லட்ச ரூபாய் செலவாகும் குழந்தைகளுக்கான இருதய அறுவைச் சிகிச்சையை, இலவசமாகச் செய்துகொண்டு, குணமாகிப் போகிறவர்களைப் பார்க்க வேண்டுமானால் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்குத்தான் வரவேண்டும்!

"அது பழைய ஆஸ்பத்திரிதானே?" என்று கேட்பவர்கள், அந்த வளாகத்துக்குள்ளேயே சமீபத்தில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டு, இயங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகள் இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவைப் பார்த்திருக்க மாட்டார்கள்.

அரசு மருத்துவமனை என்று சொல்லிவிட முடியாத அளவுக்குச் சுத்தம்.

("கொஞ்சம் ஸ்ட்ரிக்ட் ஆக இருந்தால் அது சாத்தியம்தான்!")

மருந்துகள் இலவசம்.

இருதயத் துடிப்பைச் சீராக இயக்கும் பேஸ்மேக்கர் இலவசம்; வால்வுகள் இலவசம்!

போஸ்ட்-ஆபரேடிவ் வார்டைப் பார்த்தால் அசத்துகிறது. மிக நவீன கருவிகள். சுவர் முழுக்க வண்ணமயமான சித்திரங்கள், இயற்கைக் காட்சிகள். கட்டில்கள், விரிப்புகள் எல்லாம் படுசுத்தம்.

பரிவான டாக்டர்கள்...

இந்தப் பிரிவின் தலைவர் டாக்டர் ஸ்ரீமதியை நாம் சந்தித்தபோது, அப்போதுதான் ஓர் ஓபன் ஹார்ட் சர்ஜரி செய்து முடித்து விட்டு, தம் அறையில் அமர்ந்தபடி, ஸோனி குட்டித் திரையில், அந்த ஆபரேஷனின் அடுத்த கட்டத்தைத் தம் சக டாக்டர்கள் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வசதி குறைந்தவர்களுக்கு





• வார்டு முழுக்க சத்தமும் குளிர்ச்சியும்தான்!

வரப்பிரசாதம்!

''எத்தனை வயதுக் குழந்தைகளுக்கு இங்கே இருதய அறுவைச் சிகிச்சை செய்கிறீர்கள், டாக்டர்?''

''பிறந்த குழந்தை முதல் 12 வயது வரையிலான குழந்தை வரை!''

''பிறவியிலேயே வருமா?''

''பிறவியிலேயும் வரும். பிறகு ருமாட்டிக் ஹார்ட் டிஸீஸ் என்ற பெயரிலும் வரும்!''

''ருமாட்டிக் ஹார்ட் டிஸீஸ் என்றால்?''

''மூச்சுவிடத் திணறும். கைகால் வீங்கும். நுரையீரலில் காற்றுக்குப் பதில் திரவம் சேர்ந்து விடும். லிவர் பெரிதாகி விடும். மூட்டுக்களில் வலி ஆரம்பிக்கும். காய்ச்சல் இருக்கும்...''

''எந்த வகை அதிகம், டாக்டர்?''

''கஞ்சனிட்டல் எனப்படும் பிறவிக் கோளாறு வகைதான்! இருதயத்தின் வலப்புறம், இடப்புறம் உள்ள இரண்டிரண்டு வால்வுகள் தவிர, நடுவே மைட்ரல் வால்வு ஒன்றும் இருக்கிறது. சில குழந்தைகளுக்கு இருதயத்தில் துளைகள் இருப்பதால் பிரச்னை வருகிறது. சில குழந்தைகளுக்கு வால்வுகள் பழுதாவதால் பிரச்னை வருகிறது. ருமாட்டிக் ஹார்ட் டிசீஸ் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு, மைட்ரல் வால்வு குறுகலாகி, அல்லது பழுதாகி, இரத்தம் கீழ்நோக்கிப் போகாமல், மேல்நோக்கிப் பாய ஆரம்பித்து விடும். ஹார்ட்-லங் மெஷினில் பார்த்து விட்டு, பிறகு அந்த வால்வை விரிவாக்கிக் விடுவோம்!''

அறுவைச் சிகிச்சை முடிந்து, போஸ்ட்-ஆபரேடிவ் பிரிவில் படுத்திருந்த ரமேஷ் என்ற குழந்தையைக் காண்பித்தார் டாக்டர் ஸ்ரீமதி. மூச்சுவிடத் திணறல், லிவர் பெரிதாகி பிறவியிலேயே இருந்த பிரச்னை. இப்போது இயல்பாக மூச்சு விட்டுக் கொண்டிருந்தது குழந்தை.

ஊட்டியிலிருந்து வந்திருந்த ஜீவினிக்கு ஆறு வயது. இதயத்தில் ஓட்டைகள் இருந்ததாம். அடைக்கப்பட்டு, குணமாகி, நார்மலாக இருந்தது குழந்தை.

''வால்வு என்ன விலையாகிறது டாக்டர்?''

''வால்வு 45,000 முதல் 50,000 ரூபாய் வரை ஆகிறது. இம்போர்ட்டட் வால்வுகள். தவிர, மருந்துகளையும் கொடுத்து விடுகிறோம். இலவசம்தான்! எந்த மாநிலத்திலுமே இந்த மாதிரி ஒரு மருத்துவமனையைப் பார்த்திருக்க முடியாது. இந்தியாவிலேயே, குழந்தைகளுக்காக மட்டுமே இயங்குகிற மிகப் பெரிய மருத்துவமனை இதுதான். ஐநூறுக்கு மேற்பட்ட கட்டில்கள். அதில் 37 இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவுக்கு. இந்த நாலு வருடங்களில் மட்டும் சுமார் 1500 இருதய அறுவைச் சிகிச்சைகள் செய்திருக்கிறோம்!''

என்பது சதவிகிதக் குழந்தைகளை, நிலைமையைப் பொறுத்து, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பரிசோதனைக்கு வரச் சொல்லுகிறார்கள். ஊட்டச் சத்துக் குறைவு இக் குழந்தைகளுக்கு ஒரு பிரச்னையாக இருக்கிறது. ''பெரும்பாலும் ஏழைத் தாய்மார்கள். அதுதான் காரணம். இந்தக் குழந்தைகளின் தாய் அல்லது தகப்பன் கூடவே வருவதால், அவர்கள்

தங்குவதற்கு இடமின்றியும் உணவின்றியும் தவிக்க நேர்கிறது. (ரசிகர் நற்பணி மன்றங்கள், பெரிய மனம் படைத்தவர்கள் இதற்கு உதவலாம்!)

ஜப்பானிய அரசு கிட்டத்தட்ட 22 கோடி ரூபாய்க்கு உதவியிருக்கிறது. கருவிகள், இயந்திரங்கள், ஏர்கண்டிஷனர்கள் என்று எல்லாவற்றுக்கும் அதன் மூலம் செலவழிக்க முடிந்ததாம்.

''அரசும் நூறு சதவிகித ஒத்துழைப்புத் தருகிறது. முதல்வர், சுகாதார அமைச்சர், சுகாதாரத் துறைச் செயலர் எல்லாருமே இந்த மருத்துவமனை விஷயத்தில் அதிகமான அக்கறை காட்டுவதால்தான் இந்தச் சாதனை சாத்தியமாகி இருக்கிறது!'' என்கிறார் டாக்டர் ஸ்ரீமதி.

இதயத்தைச் சுற்றி வர சீழ் கோத்துக் கொண்டு விடுமாம் சில குழந்தைகளுக்கு. இதை சர்ஜரி மூலம் அகற்றுவதுதான் எளிதாம். அப்படியும் சுமார் 250 கேசுகள் குணமாகி இருக்கின்றன என்றார் டாக்டர் ஸ்ரீமதி. இரத்தக் குழாய் மிகச் சிறியதாகி பிரச்னை இருக்கும் சில குழந்தைகளுக்கு. அதற்கும் அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது.

இங்கே ஸ்பெஷல் வார்டே கிடையாது!

''பாகுபாடு எதுவும் இருக்கக் கூடாது என்பதுதான் எங்கள் நோக்கம்!'' என்கிறார் டாக்டர்.

''வசதி படைத்தவர்கள் செலவைப் பற்றிக் கவலைப்படாமல் தனியார் மருத்துவமனைகளுக்குப் போய் விடுவார்கள். வசதி இல்லாதவர்களின் குழந்தைகள் என்ன செய்ய முடியும்? அவர்களுக்கு இந்த மருத்துவமனை உதவியாக இருக்க வேண்டும் என்பது அரசின் லட்சியம்!'' என்றார் குழந்தைகள் மருத்துவமனை இயக்குநர் டாக்டர் கிருஷ்ணகுமாரி.

''அப்படியானால் மாதச் சம்பளம் வாங்குவோரான மிடில் கிளாஸ் பெற்றோர்களின் குழந்தைகள்?''

''அவர்களுக்கும் சிகிச்சை அளிக்கிறோம். ஆனால் அதுவும் பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மேல் ஆகாது!'' என்கிறார் டாக்டர் ஸ்ரீமதி.

சந்திப்பு : **எஸ்.வி.என்.**

படம் : **ஸ்ரீஹரி**

கிரிக்கெட் என்ன

"ஐயோ அம்மா இன்னிக்கு கத்திரிக் காய் கறியா?" என்று கதறினான் என் பன்னி ரெண்டு வயது மகன்.

"ஏண்டா, நம் வீட்டில் கத்திரிக்காய் சமைச் சுப் பத்து நாளாகுதே" என்று பதிலளித்த என் மனைவி,"நீங்களே நியாயத்தை சொல்லுங்கள்" என்பது போல் என்னைப் பார்த்தாள்.

மகனின் முகம் கோபத்தில் சிவந்து போன தைப் பார்க்க எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. இத்தனைக்கும் கத்திரிக்காய் என்றால் அவ னுக்குக் கொள்ளைப் பிரியமாயிற்றே! பின் ஏன் இந்தப் பதற்றம்?

விரைவில் விவரம் பிடிபட்டது. "போன வாரம் அம்மா கத்திரிக்காய் சமைச்ச அன்று தான் நம்ம டீம் ஆஸ்திரேலியா டீம்கிட்ட தோத்தது. ராகுல் டிராவிட் டக்" என்றான்.

இதென்ன லாஜிக்? இடைவிடாத பயிற்சி, பந்து வீச்சாளரின் திறமை, பேட்ஸ்மெனின் செயல்பாடு, பிட்ச்சின் தன்மை, குழு உணர்வு போன்ற விஷயங்கள்தான் கிரிக் கெட் பந்தயத்தின் வெற்றி தோல் வியை நிர்ணயிக்கும் என்று நான் பாமரத்தனமாக நம்பிக் கொண் டிருக்க, என் மனைவி கத்திரிக் காய் சமைத்ததினாலா ராகுல் டிராவிட் டக் அடித்தார்? இந்திய அணி தோற்றது?

தொடர்ந்த நாட்களில் உற்று கவனித்த போதுதான் எனது பல்வேறு நண்பர்கள் மற்றும் உறவினர்களிடையேயும் இது போன்ற கிரிக்கெட் சென்டிமெண்ட்கள் கொட்டிக் கிடந்தது தெரிய வந்தது.

"ப்ளீஸ், கொஞ்சூண்டு மறைச்சுண்டு நில் லுடா" என் தன் மகனைக் கெஞ்சினார் என் ஒன்றுவிட்ட மாமா டீவி. எதிரே உட்கார்ந்து கொண்டு. டீவியைப் பார்க்கவிடாமல் மறைத் தால்தானே கோபம் வர வேண்டும்? மாறாக இதென்ன வித்தியாசமான வேண்டுகோள் என்று கவலைப்பட வேண்டாம் - அப்படி சற்றுமுன் மறைக்கப்பட்ட போதுதான் ராபின் சிங் சிக்ஸர் அடித்தாராம்!

"என்னங்க, என்னை "சனியனே"ன்னு ரெண்டு தடவை திட்டுங்க" என்று நண்பரின் மனைவி கெஞ்ச, அவரது விருப்பத்தை மறுக் காமல் பூர்த்தி செய்தார் நண்பர். பிறகு "இப்போ உன் டர்ன். 'இன்னொரு முறை என்னை சனியனேன்னு திட்டினால் நடக்கறதே வேறே'ன்னு கத்தும்மா" என்றார். வேறொன்று மில்லை. சென்ற வாரம் அதே போன்ற தகராறு அவர் களிடையே நடந்து கொண்டிருந்த போதுதான் கங்குலியும், சச்சினும் பார்ட்னர்ஷிப்பில் நூறு ரன் எடுத்திருந்தார்கள்!

"என்னவானாலும் அவ இன்னிக்கு இந்த வீட்டுப்படியை மிதிக்கக் கூடாது" என்று என் சித்தப்பா கத்தி என்னை அசர வைத்தார். இத்தனைக்கும் சித்தப் பாவுக்கும் சித்திக்கு மிடையே எந்தச் சண் டையும் கிடையாது. ஆனால் என்ன செய்ய? போன மாதம் தன் அம்மா வீட்டுக்குப் போன சித்தி திரும்பி வந்த அன்றுதான் இங்கிலாந்திடம் இந்திய அணி தோற்றிருந்தது. இன்று மீண்டும் அதே இரு அணிகளும் மோதவிருக்க ரிஸ்க் எடுக்கலாமோ? எனவே சித்தி அதற்கு அடுத்த நாள்தான் பிறந்த வீட்டிலிருந்து திரும்பி வர அனுமதிக்கப் பட்டார்.



இந்த வித சென்டிமென்ட் காரணமாக எனது மற்றொரு



கத்திரிக்காயா?

நண்பர் டாய்லெட்டில் அரைமணி நேரத்துக்கும் மேலாக இருக்க நேர்ந்ததுதான் கொடுமை. "கொஞ்சம் அங்கேயே இருப்பா. நீ போன தடவை டாய்லெட்டி லிருந்து வந்தப்போதான் அஸாரின் விக்கெட் விழுந்தது. இப்போ நீ வந்து ஜடேஜாவின் விக்கெட்டும் விழுந்தா நம் டீம் அவ்ளோதான்" என்று அவரது டீனேஜ் மகன் வெளியிலிருந்து திட்டவட்டமாகக் கூற, பின்னணியில் நண் பரின் மனைவி, "இந்த மனிதருக்கு கிரிக்கெட் மேட்ச் நடக்கும்போதுதானா டாய்லெட் போகத் தோணும்!" என்று வெறுப்புடன் அலுத் துக் கொண்டதும் கேட்டது.

இதையெல்லாம் விடுங்க. "விபூதி இட்டுக் கொண்டு ஸ்லோகம் சொல்லாமல் என்ன எப்பப் பார்த்தாலும் சினிமாப் பாட்டு வேண்டி யிருக்கு?" என்று பேரனை அடிக்கடி கடிந்து கொள்ளும் பக்கத்து வீட்டுத் தாத்தா, "டேய் அந்த 'அசக்குன்னா அசக்குதான், குமுக்குன்னா குமுக்குதான்' பாட்டைப் பாடிண்டு ஆடுடா" என்று தன் பேரனைக் கெஞ்சிய துர்ப்பாக்கிய மும் நடந்தேறியது. என்ன செய்ய, ஜெயசூர்யா வின் போல்டாக வேண்டுமே!

அதற்காக நம் பண்பாட்டிற்கு கிரிக்கெட் எதிரி என்று ஒரேயடியாக முடிவு கட்டிவிட வேண்டாம். அன்றொரு நாள். கங்குலி ரன்-அவுட்டா இல்லையா? மூன்றாவது அம்பய ரிடம் முடிவு விடப் பட, 'பச்சை விளக்கு எரிய வேண்டுமே'' என்ற பதற்றம் இந்திய நாடு முழு தும் தொற்றிக் கொள்ள, சமயம் பார்த்து எதிர்வீட்டுப் பாட்டி "தேவாரம் பாடினா நல்லது. அதன் மூலமாகத்தான் பாண்டிய ராஜா கண்ணாம்புக்காளவாயிலே போட் டும் கூட, எதிரணியை – ஜைன மத சித்தாந்தங்களை திருநாவுக்கரசராலே ஓட ஓட விரட்ட முடிஞ்சது" என்று சம்பந்தமில்லாமல் அளந்தார். உடனே மொத்தபேரும் அவர் சொன்ன ''மாசில் , வீணையும்'' மற்றும் "பண்ணிநேர் மொழியாள் உமை பங்கரோ''வையும் திருப்பிச் சொல்ல, சின்னத்திரையில் பச்சை விளக்கு எரிந்தது. அதற் குப் பிறகு எப்போது இந்தியா பேட் செய்யும்போது தர்ட் அம் பயரின் ஆலோசனை கோரப்பட்டாலும் அவர்கள் வீட்டிலிருந்து தேவாரப் பதிகங்கள் கேட்கத் தொடங்கின. அப்படியும் 'சிவப்பு விளக்கு' எரிந்தால் "ஸ்டுப்பிட், தரித்திரம். நீ தப்பாப் பாடிட்டே. அதனாலேதான் இப்படி" என்று திட்டுக் குரல்களுக்கும் குறைவில்லை.

இதற்கிடையில் "அம்மா, நான் பாடப்புத்த கத்தை எடுத்தாலே அன்று இந்திய அணி அவுட்டாயிடுது" என்று சாதித்து, "இந்த சீரியல் முடியற வரை நீ படிக்கவே வேண்டாம்" என்று பெற்றோர் ஒப்புதலையும் வாங்கி விட்டான் மூன்றாவது வீட்டு பிரசாந்த்.

"அதெல்லாம் சரி, உன் வீட்டில் கத்திரிக் காய் செய்ததில் உன் மகன் முறைத்துக் கொண் டானே அன்றைய மேட்ச் என்னவாச்சு?'' என்று கேட்கிறீர்களா?''

''என் மனைவி சமைத்ததினாலா இந்திய அணி தோற்றது? இத்தனைக்கும் அவளது சமையல் பக்குவம் 'அஸார் அண்ட் கோ'வை எட்டியிருக்க நியாயமில்லையே?'' என்று நான் யோசித்துக் கொண்டிருக்க, "சரி சரி இன் னைக்கு வெண்டைக்காய் கறியும் சேர்த்துச் சமைச்சுடறேன்'' என்றபடி உள்ளே போனாள் மனைவி. ஒருநாள் அவள் வெண்டைக்காய் சமைத்த போதுதான் இந்திய அணி ஜெயித்த தாம்.

கத்திரிக்காய், வெண்டைக்காய் இரண்டை யும் ஒரே நாளில் சமைத்து விட்டாளே, என்ன வாகும்? வேறென்ன. அன்றைய போட்டி 'டை'யில் முடிந்தது! ●

அருண் சரண்யா

அறுவைச் சிகிச்சை

அந்த ஆர்த்தோ ஸ்பெஷலிஸ்ட்டைப் பார்த்தே ஆக வேண்டும். ஆபரேஷன் தியேட்டர் முகப்பில் அடுப்புக்கல் கூட்டின மாதிரி அக்கா, அண்ணன், தம்பி...

பச்சைத் துணி போர்த்து அம்மாவை எப்போதோ ஆபரேஷன் தியேட்டருக்குள் கொண்டு சென்று விட்டிருந்தனர். டாக்டர்கள் உள்ளுக்குள் போகும் போதே பிடித்திருக்கலாம். அவசரமாய்ப் போன நாலைந்து பேரில் சடாரென்று யார் 'ஸ்பெஷலிஸ்ட்' - யார் அஸிஸ்டெண்ட் என கண்டு பிடிக்க முடியாதது துரதிருஷ்டம். அப்படியே டாக்டர்கள் போகும்போது மறிப்பது அபசகுனம் என அவர்கள் நினைத்தும் விடலாம்.

நானாவித மருந்துகளின் வாசம் நாசியில். ஆறுமாதமாய் கூடவே பழகி ஒன்றிவிட்டதனால் பெரிதாகப் படவில்லை. அரசு ஆஸ்பத்திரியின் அசூயை வாசம் இங்கில்லாததே பெரிய விஷயம்.

கிளினிக் டாக்டர், அவரைப் பார்த்துப் புண்ணியமில்லை என்பதற்கு ஒரு நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தி, நாற்பத்தெட்டாயிரத்துச் சொச்சம் பட்டியலிட்ட தம் பில்லில் தம்முடைய பீஸ் மூவாயிரம் மட்டும் கழித்துக் கொள்வதாக பரோபகாரம் காட்டியிருந்தார்.

'கைதேர்ந்த ஆர்த்தோ. அவர் சக்ஸஸ் பண்ணாத கேஸே இல்லை... இந்த பீஸ் கூட அவர் ஒருவருக்கில்லை... அவர் அஸிஸ்டெண்ட் மூணு பேருக்கும் சேர்த்து... அவர் இவ்வளவு குறைச்சலா வர்றதே பெரிய விஷயம்!'

கிளினிக் டாக்டர் அவருக்குக் கொடுத்த சர்ட்டிபிகேட் இங்கே முக்கியமில்லை. அவர் குறைத்த மூவாயிரமும் முக்கியமில்லை. ஸ்பெஷலிஸ்ட்டின் பதினைந்தாயிரம் ரூபாய் பீஸ் ஒரு பாடு கடனை அடைக்கும். அங்கே இங்கே என்று அனைவரும் அலைந்து திரட்டின பணம். 'மருத்துவர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்த தேவதூதர்கள். அவர்களுக்குக் காசு பெரிதல்ல. தர்மம்... உயிர்காக்கும் தர்மம் கொண்டு ஒழுகுபவர்கள்...!' என்று எப்போதோ அம்மா சொன்ன வாக்குக்கு இவர் ஒருவராவது பொருந்தி வர மாட்டாரா என்கிற நப்பாசை.

மனிதரை நேரில் பார்த்து ரூபாய் ஐம்பதாயிரத்தைத் திரட்ட கைவண்டி அண்ணன் பட்ட துன்பம், தான் அலுவலகத்தில் அட்வான்ஸ் வாங்க பட்ட கஷ்டம், படிப்பை விட்டு விட்டுத் தம்பி அலைந்த அலைச்சல்... எல்லாம் எடுத்துரைத்தால் தம் பீஸ் பதினையாயிரத்தை ஒன்றிரண்டு ஆயிரங்களாகக் குறைத்துக் கொள்ள மாட்டாரா?

கதவு திறந்து செவிலியொருத்தி பீங்கான் கிண்ணத்தில் எதையோ கொண்டு வந்து ஜன்னலில் வைத்து விட்டுப் போனாள். அதற்குள் இரத்தம் கசியும் கருஞ்சாம்பல் நிற எலும்பு மூட்டு. இற்றுப் போனதுபோல் உடைந்த இடத்தில் சொரசொரப்பாய்... வாசலில் வழுக்கி விழ வைத்துத் தன்னைக் கழற்றிக் கொண்டு அம்மாவையும் எங்களையும் வதைத்தெடுத்த எலும்புக்குண்டுக்கு விடுதலை கிடைத்து விட்டது.


"இதை முதலிலேயே செய்திருக்கலாம்!"

அங்கலாய்ப்புடன் பார்த்துவிட்டு வந்து சொன்னாள் அக்கா. பின்னால் போய்ப் பார்த்து வந்தவர்களின் பார்வையிலும் அதே ஆமோதிப்பு. இற்றுப் போன அந்த எலும்பு மூட்டு சற்று நேரம் அங்கிருந்தவர்களுக்குக் காட்சிப் பொருளாகிப் போனது.

'செய்திருக்கலாம்தான். கழற்றி பிளேட் மாற்ற ரூபாய் ஐம்பதாயிரமாயிற்றே!'' உள்ளுக்குள் அக்காவுக்கு பதிலுறுக்கும் வார்த்தைகள்.

இந்த இற்றுப் போன எலும்பு மூட்டு வெறும் எண்ணெய்க் கட்டில் ஒட்டிக் கொள்ளும் என்று எண்ணியது எவ்வளவு

கா.சு. வேலாயுதன்



தவறு என்றும் உள்ளுக்குள் குமைச்சல்.

சாமான்யன் நம்பலாம். ஒரு அரசு ஆஸ்பத்திரி டாக்டர் எப்படி ஒரு மாவுக் கட்டில் சரியாகப் போகும் என வாக்குறுதி கொடுத்தார் என்பதே சிந்தனையாயிருந்தது.

இதே கிளினிக், இதே டாக்டர். ஆபரேஷனுக்கு முதலில் பட்டியலிட்ட தொகை இருபதாயிரம். அதற்கே வசதியில்லை என்று அரசு ஆஸ்பத்திரிக்கு ஓடிய தன் விளைவு. இப்போது மூவரும் சேர்ந்து அம்பதாயிரத்துக்கு வலுக்கட்டாயமாய் இழுத்து வந்த வசதியை அப்போதே இருபதாயிரத்துக்குக் கொண்டு வந்திருந்தால் அம்மாவுக்கும் இந்த நரக வேதனை இல்லை. நமக்கும் இந்த அலைச்சல் இல்லை.

''சர்ஜரி தேவையில்லை. வெறும் போல்ட் பிட்டிங்ல மாவுக்கட்டு போதும்... மூணு மாசம் பக்குவமா இருந்தா சரியாயிடும்...!'' நீலத்திரையாய் அந்த டாக்டரின் முகம். சரிந்த வாக்கில் உச்சிக்கு ஏறும் நெற்றி. அடர்ந்த புருவம். சாம்பல் நிறக் கண்கள்.

''ஆபரேஷன் இல்லாம ஆகாதுன்னு...



ஒரு புறாவால் எவ்வளவு வேகமாகப் பறக்க முடியும்? கல்கத்தாவில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. காலண்டர் என்ற புறா, கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கும் இடையேயான தூரத்தை 17 மணி நேரத்தில் கடந்தது. டெல்லி-கல்கத்தா தூரத்தை ராஜதானி எக்ஸ்பிரஸ் ரயில் கடக்க எடுத்துக் கொள்ளும் நேரம் 17 மணி 10 நிமிடம்!

இந்தியன் எக்ஸ்பிரஸிலிருந்து: எஸ். ஆலன்

வெளி டாக்டர்க...!"

"இருக்கலாம். ஆனா இது இவங்களுக்கு அவசியமில்லை!"

"ஏன் டாக்டர்?"

"ஹார்ட் ட்ரபிள், பி.பி., சுகர் கம்ப்ளெயிண்ட் வேற... வயசும் தாங்காது. ஆபரேஷன் உயிருக்கே ஆபத்தா முடியும்!"

"வேற வழி டாக்டர்?"

"பொறுமையாயிருக்கணும்!"

பொறுமையாயிருந்தனர். ஒன்றல்ல, இரண்டல்ல. மூன்று, நான்கு மாதங்கள். படுக்கையிலேயே ஒன்று, இரண்டு இத்யாதிகள் கழித்து... மருமகள்கள், மகள்கள் அருவைப்பட்டு... ஓடி, விலகி... பிறகு பழக்கப்பட்டுப் போய்...

இடுப்புக்குக் கீழே தொடை வரை கட்டு. தொடையில் 'ட்ரில்' செய்து 'க்ளாம்ப்' வைத்து, 'போல்ட்' போட்டு ஒரு மினி மெக்கானிக்கல் ஃபிட்டிங்கின் நரக வேதனையில் அம்மா மூன்று மாதத்தில் ரொம்பவும் சுருங்கிப் போனாள். மற்றவர்கள் அதை விட சுருங்கி...

கட்டுப் பிரித்தபோது அம்மா பழையபடி உயிர் போகிற வலியில் அலறினாள். யாரையும் கை தொட விடவில்லை.

அரசு ஆர்த்தோ அதை பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை. "ஒரு மாதம் பெட் ரெஸ்ட் இருக்கட்டும். இந்த மருந்து மூணு வேளைக்கும் தவறாம. இந்தக் 'க்ரீமை' தொடையில் தடவுங்க!"

ஒன்றல்ல, இரண்டு மாதத்திற்கு மேல் தடவிப் பார்த்தும் புண்ணியமில்லை.

"ஐயோ பகவானே... அந்த மனுஷனைக் கொண்டு போன இடத்துக்கே என்னையும் கொண்டு போயேன்!"

– அம்மா அரற்றின அரற்றலில் அதிர்ந்து போன ஒன்றுவிட்ட மாமாதான் விவரம் கேட்டு கடிந்தார்.

"இது சர்ஜரி கேஸ். அரசு டாக்டர் உங்ககிட்ட பூசி மெழுகியிருக்கார். ஓடு. மனிடம் ஓடு. கொஞ்சம் 'கவனித்து' கவனிக்கச் சொல். இல்லை, காரியமாகாது!"

அரசு தலைமை மருத்துவர் அரசு ஆர்த்தோவை விட படு கெட்டியாக நின்றார். வெளி டாக்டர்களின் பரிந்துரை ஏற்கப்படாது. ஜி.ஹெச். ஆர்த்தோ பரிந்துரைக்கணும் என்பதில் தெளிவாய் இருந்தார். அரசு ஆர்த்தோவோ, "இது பி.பி., சுகர் பேஷண்ட். ஏதும் ஆகி விட்டால்... எப்படி ஒரு ஹார்ட் பேஷண்டுக்கு சர்ஜரி செய்யலாம்னு கேள்வி வந்தா? முடியாது!"

பழைய பல்லவியே அவரிடம்.

வேறு வழியில்லாது திரும்ப இதே கிளினிக் வாசம். திரும்ப எக்ஸ்ரே, ஸ்கேன், ப்ளட், இறக்குமதி செய்யப்பட்ட பிளேட் என பட்டியல்....

அம்மாவை அவளுடைய படுக்கைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். மரக்கட்டை மாதிரி வாய் கோணிக் கிடக்கும் உருவம். அருகில் க்ளினிக் டாக்டர். அதைச் சுற்றிலும் நர்சுகள்... அவர்களைச் சுற்றி நின்று கண்ணீர் உகுக்கும் உறவுகள்.

இரத்த அழுத்தம், மூச்சுக் காற்று, புட்டியிலிருந்து அம்மாவின் உடலுக்குள் பாயும் இரத்தத்தை சரிப்படுத்திக் கொண்டு வந்த க்ளினிக் டாக்டர்,

"ஷி இஸ் ஆல் ரைட். வித் இன் டு வீக்ஸ்ல நடக்கப் பழக்கிடலாம்!"– புன்னகைத்துக் கொண்டே போனார்.

"ஸ்பெஷலிஸ்ட்?" கேட்டதற்கு செவிலி ஒருத்தி எதிர்ப்பட்டாள்.

"இப்பத்தான் பின்பக்க வழியா போறார் சார்!" வாஷ் பேஷினில் கையை அலம்பியபடி அவள்.

ஓடு!

பதினையாயிரம். அவர் மனசைக் கசிய வை. இரக்கம் காட்டச் சொல். கெஞ்சத் தயங்காதே...

மூளையின் இயக்கத்தில் வார்த்தைகள் உந்தித்தள்ள, கிளினிக் காம்பவுண்ட் கேட்டிற்கு ஓடுவதற்கும், அங்கே நின்றிருந்த மாருதியில் ஒன்றிரண்டு வெள்ளைக் கோட்டுகள் திணிபட்டு கதவு சாத்தப்படுவதற்கும் சரியாக இருந்தது.

இருந்தாலும் காரின் கதவோரத்தில் இருந்த அந்த உருவம் நன்றாகவே தெரிந்தது. காரின் கறுப்புக் கண்ணாடி மேலேற மேலேற, அந்த உருவத்தைப் பார்த்தது ஒரே ஒரு செகண்ட்தான்.


ஆனால் அழிக்க முடியாத அந்த உருவம்.

சரிந்த வாக்கில் உச்சிக்கு ஏறும் நெற்றி. அடர்ந்த புருவம். சாம்பல் நிறக் கண்கள். சந்தேகமேயில்லை. சாட்சாத் அரசு ஆஸ்பிடல் ஆர்த்தோ ஸ்பெஷலிஸ்ட்தான்!

கிளர்ச்சியூட்டும் விண்வெளிப் பயணம்!

முப்பத்தாறு வருடங்களுக்கு முன்னால், 1962 பிப்ரவரியில் அமெரிக்க 'நாஸா' விண் ஆய்வுக் கழகத்தால் விண்ணிற்கு அனுப்பி வைக்கப்பட்ட முதல் அமெரிக்கர் என்னும் பெருமையைப் பெற்றவர் ஜான் கிளென். அப்போது அவருக்கு வயது நாற்பது. இன்று மீண்டும், விண்ணில் பறக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் இவர்- முதன்முதலாக அண்டவெளிப் பயணம் மேற்கொள்ளும் 'முதியவர்' என்னும் பெருமையையும் பெறுகிறார்.

அக்டோபர் 29, 1998ல் 'டிஸ்கவரி' விண்வெளிக் கப்பல் மூலம் பூமியிலிருந்து சுமார் 325 மைல் தொலைவில் வட்டமிட அனுப்பி வைக்கப்பட்ட எழுவர் கொண்ட குழுவில் இவரே வயதில் மிக மிக மூத்தவர். இவர், இந்த விண்வெளி வீரர் குழுவின் தலைவராக இல்லாவிடினும், இப் பயணத்தின் கதாநாயகன் இவர்தாம்! ('பொன்னியின் செல்வன்' நாவலில் கதையின் நாயகன் அருள்மொழி வர்மராக இருந்தாலும், வாசகர்களின் நாயகனாக வல்லவரையன் வந்தியத்தேவனை 'கல்கி' படைக்கவில்லையா? அதேபோல் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!)



• ஜான் கிளென்



சுமார் 36 லட்சம் மைல் பயணம் செய்யும் இக்கலம், பூமியை 144 தடவை சுற்றி வரும். ஐந்து சூப்பர் கம்ப்யூட்டர் உட்பட, கன்ட்ரோல் சுவிட்சுகள்; புஷ்பட்டன்கள்; விஞ்ஞான ஆய்வுக் கருவிகளைக் கொண்டது இக்கலம்.

கிளென் 36 வருடங்களுக்கு முன்னர் தமது விண்வெளிப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்ட பின்னர், மீண்டும் ஒரு தடவை 'நாஸா' மூலம் விண்ணில் பறக்க விரும்பியிருக்கிறார். எனினும் இதுவரை மறுக்கப்பட்டு வந்த 'பறப்பு' இப்போது வழங்கப்பட்டதற்குக் காரணம் இல்லாமலில்லை!

அமெரிக்காவில் மட்டும் சுமார் 12.5 மில்லியன் மக்கள்- அத்தனை பேரும் முதியவர்கள்-சமநிலைப் பிறழ்ச்சி (balance disturbance) நோயினாலும்; மேலும் 25 மில்லியன் முதியோர் 'ஆஸ்டியோபொரோசிஸ் (osteoporosis) எனப்படும் எலும்புத் தேய்வு நோயினாலும் அவதிப்படுவதாக மருத்துவ அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

அதே சமயம்- விண்ணில் (புவியீர்ப்பு சக்தி குறைவான) பறப்பவர்களின் உடலில் முதுமைக்குரிய மாறுதல்கள்

மிகவேகமாக நடைபெறுகின்றன என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த இரண்டு விஷயங்களையும் கவனித்த அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள்; 'முதியவர்' ஒருவரை விண்ணில் சில காலம் வாழ வகை செய்து, அப்போது ஏற்படும் அவரது 'உடல்-உள' மாறுதல்களை கவனிப்பதன் மூலமாக, முதுமையில் தோன்றும் வியாதிகளுக்குத் தீர்வு காண முடியும் என நினைத்தார்கள் அதனால்தான் 'ஜான் கிளென்'னுக்கு முன்பு மறுக்கப்பட்ட அனுமதி இப்போது வழங்கப்பட்டது.

இந்த விண்வெளிப் பறப்பின் போது- தூக்கத்தில் ஏற்படும் தடைகள் மற்றும் உடலில் உண்டாகும் 'புரோட்டீன் இழப்பு' ஆகிய இரண்டிற்கும் முக்கியத்துவமளிக்கப்பட்டிருக்கிறது.

தூக்கத்தில் ஏற்படும் தடங்கல்களை அறியும் பணியில்-எழுவர் குழுவில் ஒரே பெண்ணும்-சர்ஜனுமான சியாகி முகாய், கிளென்னுக்குத் துணையாகச் செயல்படுகிறார். இதற்கென கிளென்னின் தலைப் பகுதி எலக்ட்ரானிக் சாதனங்களால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு, மூளையில் இருந்து வெளிப்படும் அலை வடிவ ஆற்றல் தொடர்ச்சியாகப் பதிவு செய்யப்படும். அதே சமயம் 'காப்சூல்' வடிவில் அமைந்த 'வெப்ப அளவி'யினை அவர் விழுங்குவதன் மூலமாக 15 விநாடிக்கொரு தடவை, உடலின் உள்ளே ஏற்படும் 'வெப்பநிலை' பற்றிய தகவல்கள் பதிவு செய்யப்படுகின்றன. தூக்கம் விட்டெழுந்த பின்னர், அவருக்கு வீடியோ கேம் போன்ற விளையாட்டுச் சாதனங்கள் தரப்பட்டு, அவற்றைப் பயன்படுத்தும்போது, மூளையின் செயல்திறன், கணிணிகளின் . துணையோடு கணிக்கப்படுகிறது.

உடலின் தசைகள் வலுவிழப்பதற்கு, புரோட்டீன் இழப்பே காரணமாகையால்- இதனை ஆராய்வதற்கென பெட்ரோ டுகே (Pedro Duque) என்னும் மற்றொரு விண்வெளி வீரர் (இவரே குழுவில் மிகக் குறைந்த வயதினராவார்.) கிளென்னுடன் பறக்கிறார்!

மன அழுத்தம் காரணமாக உடலில் சுரக்கும் 'ஹார்மோன்'களே துரித புரோட்டீன் இழப்பினைத் தூண்டிவிடுகிறது எனக் கருதப்படுவதால் கிளென்- புரோட்டீன் மாத்திரைகள், ஊசி மருந்துகள் மூலம் தம்மைப் புதுப்பித்தவாறு அவ்வப்போது 'இரத்த தானமும்' செய்து வருவார். இப்படி 12 தடவை அவர் வழங்கும் இரத்தம் பரிசோதிக்கப்பட்டு புரோட்டீனுக்கும்-மன அழுத்த ஹார்மோனுக்கும் இடையிலான தொடர்பு கண்டு பிடிக்கப்படும். இவை தவிர இதயத் துடிப்பில் உண்டாகும் மாறுதல் கண், தளர்ச்சி, நினைவாற்றல், நோய் எதிர்ப்பு ஆற்றல் போன்றவற்றில் 'அவரது' செயல்பாடுகளும் இவ்வாய்வின் மூலமாகக் கண்டறியப்படவுள்ளன.

1962ல்- 'அமெரிக்க-ரஷ்ய' நாடுகளுக்கிடையில் நிலவிய 'பனிப்போரில்' தமது தாய்நாட்டின் மதிப்பினை உலகளாவிய அளவில் உயர்த்தும் பொருட்டு விண்ணில் பறந்த கிளென்-இன்று உலக முதியோர்களின் நீண்ட ஆயுள்/உடல் நலம் ஆகியவற்றுக்குத் துணை செய்யும் பொருட்டு மீண்டும் விண்ணில் பறக்கிறார்!

— சர்வசித்தன்



கருத்து:கே.பி. ஜோதி ரஞ்சன்

அமரர் கல்கி

பொன்னியின் செல்வன்



முப்பத்து நான்காம் அத்தியாயம்

அநுராதபுரம்

ஸூரியன் அஸ்தமனமாகும் சமயத்தில் அவர்கள் அநுராதபுரத்தை அணுகினார்கள். இலங்கைத் தீவின் தொன்மைமிக்க அத்தலை நகரத்தைச் சற்றுத் தூரத்திலிருந்து பார்த்தபோதே வந்தியத்தேவன் அதிசயக் கடலில் மூழ்கி பேசும் சக்தியை இழந்தான். அநுராதபுரத்தைப் பற்றி அவன் பலர் சொல்லக் கேள்விப்பட்டதுண்டு. அந்நகரைப் பற்றி அவர்கள் செய்த வர்ணனைகளிலிருந்து அதன் தோற்றம் இப்படி இருக்குமென்று அவன் கற்பனை செய்து பார்த்ததும் உண்டு. ஆனால் அவனுடைய கற்பனைகளையெல்லாம் அந்த மாநகரம் விஞ்சியதாயிருந்தது. அம்மம்மா! இதன் மதில் சுவர் எத்தனை பெரியது! எப்படி இருபுறமும் நீண்டு கொண்டே செல்கிறது? எந்த இடத்திலே அச்சுவர் வளைந்து திரும்புகிறது என்று தெரிந்து கொள்ளவும் முடியவில்லையே? மதில் சுவருக்கு உள்ளே எத்தனை எத்தனை கோபுரங்களும் ஸ்தூபங்களும் மண்டப சிகரங்களும் தலைதூக்கிக் கம்பீரமாக நிற்கின்றன? ஒன்றுக்கொன்று அவை எவ்வளவு தூரத்தில் நிற்கின்றன? இவ்வளவும் ஒரே நகரத்துக்குள்ளே, ஒரே மதில் சுவருக்குள்ளே, அடங்கியிருக்க முடியுமா? காஞ்சி, பழையாறை, தஞ்சை முதலிய நகரங்



களெல்லாம் இந்த மாநகரத்தின் முன்னே எம்மாத்திரம்? அசோக சக்கரவர்த்தியின் காலத்தில் பாடலிபுத்திரமும் விக்ரமாதித்தனின் ஆட்சியில் உஜ்ஜயினி நகரமும் கரிகால் வளவன் காலத்தில் காவேரிப் பட்டினமும் ஒருகால் இந்த நகரத்தைப் போல் இருந்திருக்கலாம்! தற்காலத்தில் உள்ள வேறு எந்தப் பட்டணத்தையும் இதற்கு இணை சொல்ல முடியாது...!

மதில் சுவரும் அதன் பிரதான வாசலும் நெருங்க, நெருங்க, நகரை நோக்கிச் செல்வோரின் கூட்டம் அதிகமாகி வந்தது. தமிழர்களும் சிங்களவர்களும் பிக்ஷுக்களும் இல்லறத்தாரும் ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமிகளும் பெருங்கூட்டமாகச் சென்றார்கள். எல்லாரும் தேர்த் திருவிழாவுக்குச் செல்கிறவர்களைப் போல் குதூகலமாகச் சென்றார்கள். அவர்களில் ஒரு சிலர் நமது பிரயாணிகள் மூவரையும் கவனிக்கவும் சுட்டிக் காட்டவும் தொடங்கினார்கள். இதைக் கண்டதும் பொன்னியின் செல்வர் மற்ற இருவருக்கும் சமிக்ஞை செய்துவிட்டு, இராஜபாட்டையிலிருந்து விலகிக் குறுக்கு வழியில் சென்றார். மரங்களால் மறைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய செய் குன்றத்தின் அடிவாரத்தில் வந்து குதிரையை நிறுத்தினார். பின் தொடர்ந்து வந்த இருவரையும் பார்த்து, ''குதிரைகள் வெகுதூரம் வந்திருக்கின்றன. சற்று நேரம் இளைப்பாறட்டும். நன்றாக இருட்டிய பிறகு நகருக்குள் போவோம்!'' என்றார்.

குதிரைகள் மீதிருந்து மூவரும் இறங்கி ஒரு கற்பாறை மீது உட்கார்ந்தார்கள்.

''இவ்வளவு கூட்டமாக ஜனங்கள் போகிறார்களே? இன்றைக்கு இந்த நகரத்திலும் ஏதாவது உற்சவமோ?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''இந்த நாட்டில் நடக்கும் திருவிழாக்களுக்குள்ளே பெரிய திருவிழா இன்றைக்குத்தான்!'' என்றார் இளவரசர்.

''ஈழ நாட்டில் ஏதோ யுத்தம் நடக்கிறது என்று கேள்விப்பட்டேன். இங்கே வந்து பார்த்தால் ஒரே உற்சவமாயிருக்கிறதே!'' என்றான் வந்தியத்தேவன்.

''பழையாறையில் ஸ்ரீஜயந்தி உற்சவம் நடந்தது என்று நீர் சொல்லவில்லையா?''

''ஆமாம்; ஆனால் பழையாறை சோழ நாட்டில் இருக்கிறது...''

''அநுராதபுரம் ஈழநாட்டில் இருக்கிறது. அதனால் என்ன? சோழ நாட்டிலும் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் ஆட்சிதான்; ஈழ நாட்டிலும் அவருடைய செங்கோல் ஆட்சிதான்...!''

''ஆனால் இந்த நாட்டில் இன்னும் பகைவர்கள் இருக்கிறார்களாமே!...''

''பகைவர்கள் எங்கேயோ இருக்கிறார்கள். அதற்கு, இங்குள்ள ஜனங்கள் என்ன செய்வார்கள்? போர்க்களத்தில் போர் நடக்க வேண்டியதுதான்; ஊர்ப்புறத்தில் உற்சவமும் நடக்க வேண்டியதுதான்!... திருமலை! நீ என்ன சொல்கிறாய்?'' என்றார் இளவரசர்.



''இங்கே வெளிப் பகைவர்கள் இருந்தால் அங்கே உட்பகைவர்கள் இருக்கிறார்கள். வெளிப்பகைவர்களைக் காட்டிலும் உட்பகைவர்களே அபாயமானவர்கள். ஆகையால் இளவரசர் இந்த நாட்டிலேயே உற்சவமும் யுத்தமும் நடத்திக் கொண்டிருப்பதே நல்லது என்று அடியேன் சொல்லுகிறேன்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''அழகாய்த்தானிருக்கிறது. வெளிப் பகைவர்களை விட உட்பகைவர்களே அபாயகரமானவர்கள் என்றால், அங்கேதானே நம் இளவரசர் இருக்க வேண்டும்? அபாயம் அதிகம் உள்ள இடமே வீரபுருஷர்கள் இருக்க வேண்டிய இடம் அல்லவா?'' என்றான் வந்தியத்தேவன்.

"வீரம் என்றால், அசட்டுத்தனமாகச் சதிகாரர்களிடமும், கொலைகாரர்களிடமும் போய் அகப்பட்டுக் கொள்ள வேண்டும் என்று அர்த்தமா? வீராதி வீரனாகிய நீ அங்கே போய் அப்படி அகப்பட்டுக் கொள்வதுதானே? எதற்காகத் தப்பி ஓடி வந்தாய்?'' என்றான் திருமலை.

"போதும்! போதும்! நீங்கள் ஒரு யுத்தம் இங்கே ஆரம்பித்து விட வேண்டாம்!" என்று அருள்மொழிவர்மர் சமாதானம் செய்வித்தார்.

இருட்டிய பிறகு மூன்று பேரும் அந்நகருக்குள் பிரவேசித்தார்கள். அன்று யாத்திரீகர்கள் யாரையுமே கோட்டை வாசலில் தடுத்து நிறுத்தவில்லை. எல்லாரையும் தங்கு தடையின்றி விட்டுக் கொண்டிருந்தார்கள். காவலர்கள் சும்மா நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தோடு கூட்டமாக நம் கதாபுருஷர்கள் மூவரும் நகருக்குள் பிரவேசித்துச் சென்றார்கள்.

அநுராதபுரத்தின் வீதிகளிலும் ஜனக்கூட்டம் அளவில்லாமலிருந்தது. ''சாது! சாது!'' என்ற கோஷம் வானை அளாவியது. ஆங்காங்கு பல மாட மாளிகைகளும் விஹாரங்களும் இடிந்து கிடப்பதை வந்தியத்தேவன் கண்டான். இடிந்து போன பல கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டிருப்பதையும் பார்த்தான். புதுப்பிக்கும் திருப்பணி இளவரசர் கட்டளையின் பேரிலேதான் நடந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். இப்படியெல்லாம் இவர் செய்து வருவதன் நோக்கம் என்ன? ஜயிக்கப்பட்ட நாட்டின் மக்களுக்கு இவர் ஏன் இவ்வளவு சலுகை காட்டுகிறார்? ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்துடன் அடிக்கடி சண்டை போட்டு வருகிறார்கள் இந்தச் சிங்கள அரசர்கள். இத்தகைய நெடுங்காலப் பகைவர்களின் தலை நகரத்தை அழித்துக் கொளுத்தித் தரைமட்டமாக்குவதற்கு மாறாக, இடிந்து போன கட்டடங்களைப் புதுப்பித்துத் திருவிழாக்கள் நடத்த இவர் அனுமதித்து வருகிறாரே? இது என்ன அதிசயம்! இதில் ஏதோ மர்மம் இருக்கத்தான் வேண்டும். அது என்னவாயிருக்கும்? வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் ஒரு விந்தையான எண்ணம் உதித்தது. ஆம், ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும். சோழ நாட்டில் இவருக்கு



உரிமை எதுவும் இல்லை. பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர் இருக்கிறார். அவருடன் போட்டியிட மதுராந்தகத் தேவர் இருக்கிறார். ஆகையால் இந்தமா இலங்கைத் தீவில் இவர் ஒரு தனி ராஜ்யத்தை ஸ்தாபித்துச் சுதந்தர மன்னராக விரும்புகிறார் போலும்! - யார் கண்டது? இவருடைய விருப்பம் நிறைவேறினாலும் நிறைவேறலாம்! குடந்தை ஜோசியர் சொன்னார் அல்லவா? "அருள்மொழி வர்மர் துருவ நட்சத்திரம் போன்றவர்! அவரை நம்பினவர்களுக்கு ஒரு குறைவும் இல்லை!" என்று. அத்தகைய வீர புருஷரிடம், தான் வந்து சேர்ந்து விட்டதை நினைத்து அவனுடைய உள்ளம் மகிழ்ச்சியால் பூரித்தது.

வெளிப்புறங்கள் இடிந்து இருளடைந்திருந்த ஒரு பழைய மாளிகையின் வாசலில் வந்து நின்றார்கள். குதிரைகளின் மீதிருந்து இறங்கினார்கள். அந்த இடம் முக்கியமான வீதிகளிலிருந்து சற்று ஒதுக்குப்புறமாக இருந்தது. ஆகையால் அங்கே ஜனக்கூட்டம் இல்லை. இளவரசர் மூன்று தடவை கையைத் தட்டினார். உடனே இந்திர ஜாலத்தினால் நடந்ததுபோல் அந்த மாளிகையின் ஒரு பக்கத்தில் கதவு திறந்து வழி உண்டாயிற்று. ஆட்கள் யாருமே இருந்ததாகத் தெரியவில்லை. இளவரசர் இருட்டிலேயே நுழைந்து மேலே சென்றார். வந்தியத்தேவன் பின்னால் திரும்பிக் குதிரைகளின் கதி என்னவென்று ஆவலுடன் பார்த்தான். இளவரசர், "குதிரைகளுக்கு வழி தெரியும்!" என்று வந்தியத்தேவனைக் கையைப் பிடித்து இழுத்துச் சென்றார். சற்றுத் தூரம் இருளிலேயே நடந்தார்கள். பிறகு 'மினுக் மினுக்' என்று வெளிச்சம் தெரிந்தது. பின்னர், பிரகாசமான ஒளி தென்பட்டது. அது ஒரு பழைய காலத்து அரண்மனையின் உட்புறம் என்று வந்தியத்தேவன் கண்டான்.

"இங்கே கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும். மகா சேன சக்கரவர்த்தியின் அந்தப்புரம் இது. திடீரென்று சக்கரவர்த்தி விஜயம் செய்து நம்மைத் துரத்தப் பார்த்தாலும் பார்ப்பார்!" என்றார் இளவரசர்.

"மகாசேனர் என்பவர் யார்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"மகாசேனர் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த இலங்கா ராஜ்யத்தை ஆண்ட சக்கரவர்த்தி. அவர் பொது ஜனங்களுக்குப் பல நன்மைகளைச் செய்தார். ஆகையால் அவருடைய ஆவி இந்த நகரத்தில் இன்னமும் உலாவிக் கொண்டிருப்பதாக ஜனங்கள் நினைக்கிறார்கள். அவருடைய ஆவியானது துணியில்லாமல் குளிரில் கஷ்டப்படப் போகிறதே என்று மரக்கிளைகளில் துணிகளைக் கட்டித் தொங்க விடுகிறார்கள்! இந்த அரண்மனையிலும் அவருக்குப் பிறகு யாரும் வசிப்பதில்லை. வெறுமனேதான் விட்டு வைத்திருக்கிறார்கள்!" என்றார் இளவரசர்.

இளவரசருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் பணிவிடை செய்ய அங்கு ஏவலாளர் இருந்தார்கள். குளித்து உணவருந்திய பிறகு மூவரும் அந்த அரண்மனையின் உச்சி மாடத்துக்குச் சென்றார்கள். அவர்கள் இருந்த இடத்திலிருந்து சுற்றுப்புறமெங்கும் பார்க்கலாம். ஆனால் அவர்களைக் கீழேயுள்ளவர்கள் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட இடத்தில் போய் அமர்ந்தார்கள்.

"ஐயா! பன்னிரண்டு நாழிகைக்கு எங்கேயோ வரும்படி புத்தர் சிலை செய்தி சொன்னதாகக் கூறினீர்களே?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இன்னும் நேரமிருக்கிறது. சந்திரன் இப்போதுதானே உதயமாகியிருக்கிறான்? அதோ அந்தத் 'தாகபா'வின் உச்சிக்கு நேரே சந்திரன் வந்ததும் புறப்பட்டு விடுவோம்!" என்றார் இளவரசர்.

அவர் சுட்டிக் காட்டிய இடத்தில் ஒரு பெரிய குன்று போன்ற தாகபா ஸ்தூபம் நின்றது. புத்தர் பெருமானுடைய திருமேனியின் துகளை

அடியில் வைத்து எழுப்பிய ஸ்தூபங்களாதலால் அவை 'தாது கர்ப்பம்' என்று அழைக்கப்பட்டன. தாது கர்ப்பம் என்னும் பெயர்தான் பின்னர் 'தாகபா' ஆயிற்று.

''எதற்காக இவ்வளவு பெரிய கட்டடங்களைக் கட்டினார்கள்?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''முதன் முதலில், புத்தர் எவ்வளவு பெரியவர் என்பதை ஜனங்களுக்கு உணர்த்துவதற்காக இவ்வளவு பெரிய சின்னங்களை நிர்மாணித்தார்கள். பின்னால் வந்த அரசர்களோ தாங்கள் எவ்வளவு பெரியவர்கள் என்பதைக் காட்டுவதற்காக, முன்னால் கட்டியிருந்த ஸ்தூபங்களைக் காட்டிலும் பெரிதாகக் கட்டினார்கள்!'' என்றார் இளவரசர்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சமுத்திரத்தின் கொந்தளிப்பைப் போன்ற பேரிரைச்சல் ஒன்று கேட்டது. வந்தியத்தேவன் இரைச்சல் வந்த திக்கைத் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் ஒரு பெரிய சேனா சமுத்திரத்தைப் போன்ற





பெருங்கூட்டம், - வீதிகளில் முடிவில்லாது நீண்டு போய்க் கொண்டிருந்த ஜனக் கூட்டம், - வருவது தெரிந்தது. அந்த ஜனசமுத்திரத்தின் நடுவே கரிய பெரிய திமிங்கலங்கள் போல் நூற்றுக் கணக்கில் யானைகள் காணப்பட்டன. கடல் நீரில் பிரதிபலிக்கும் விண்மீன்களைப் போல் ஆயிரம் ஆயிரம் தீவர்த்திகள் ஒளி வீசின. ஜனங்களோ லட்சக்கணக்கில் இருந்தார்கள்.

வந்தியத்தேவன் "இது என்ன? பகைவர்களின் படை எடுப்பைப் போல அல்லவா இருக்கிறது?" என்றான்.

"இல்லை, இல்லை! இதுதான் இந்த இலங்கை நாட்டிலேயே மிகப் பெரிய உற்சவமாகிய பெரஹராத் திருவிழா!" என்றார் இளவரசர்.

ஊர்வலம் நெருங்கி வர வர வந்தியத்தேவனுடைய வியப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது. அந்த மாதிரி காட்சியை அவன் தன் வாழ்நாளில் பார்த்ததில்லை. முதலில் சுமார் முப்பது யானைகள் அணிவகுத்து வந்தன. அவ்வளவும் தங்கமுக படாங்களினால் அலங்கரிக்கப்பட்ட யானைகள். அவற்றின் நடுநாயகமாக வந்த யானை எல்லாவற்றிலும் கம்பீரமாக இருந்தது. -ன், அலங்காரத்திலும் சிறந்து விளங்கியது. அதன் முதுகில் நவரத்தினங்கள் இழைத்த தங்கப் பெட்டி ஒன்று இருந்தது. அதன்மேல் ஒரு தங்கக்குடை கவிந்திருந்தது. நடுநாயகமான இந்த யானையைச் சுற்றியிருந்த யானைகளின் மீது புத்த பிக்ஷுக்கள்



பலர் அமர்ந்து வெள்ளிப் பிடி போட்ட வெண் சாமரங்களை வீசிக் கொண்டிருந்தார்கள். யானைகளுக்கு இடையிடையே குத்து விளக்குகளையும் தீவர்த்திகளையும் இன்னும் பலவித வேலைப்பாடமைந்த தீபங்களையும் ஏந்திக் கொண்டு பலர் வந்தார்கள். கரிய குன்றுகளையொத்த யானைகளின் தங்க முகபடாங்களும் மற்ற ஆபரணங்களும் புத்த பிக்ஷுக்களின்

கைகளில் அசைந்த வெண்சாமரங்களும் பல தீபங்களின் ஒளியில் தகதகவென்று பிரகாசித்துக் கண்ணைப் பறித்தன.

யானைகளுக்குப் பின்னால் ஒரு பெரும் ஜனக்கூட்டம். அந்தக் கூட்டத்தின் மத்தியில் சுமார் நூறு பேர் விசித்திரமான உடைகளையும் ஆபரணங்களையும் தரித்து நடனமாடிக் கொண்டு வந்தார்கள். அவர்களில் பலர் உடுக்கை போன்ற வாத்தியங்களைத் தட்டிக் கொண்டு ஆடினார்கள். இன்னும் பலவகை வாத்தியங்களும் முழங்கின. அப்பப்பா! ஆட்டமாவது ஆட்டம்! கடம்பூர் அரண்மனையில் தேவராளனும் தேவராட்டியும் ஆடிய வெறியாட்டமெல்லாம் இதற்கு முன்னால் எங்கே நிற்கும்! சிற்சில சமயம் அந்த ஆட்டக்காரர்கள் விர்ரென்று வானில் எழும்பிச் சக்கராகாரமாக இரண்டு மூன்று தடவை சுழன்று விட்டுத் தரையில் வந்தார்கள். அப்படி அவர்கள் சுழன்றபோது அவர்கள் இடையில் குஞ்சம் குஞ்சமாகத் தொங்கிக் கொண்டிருந்த துணி மடிப்புக்கள் பூச்சக்கரக் குடைகளைப் போலச் சுழன்றன. இவ்விதம் நூறு பேர் சேர்ந்தாற்போல் எழும்பிச் சுழன்று விட்டுக் கீழே குதித்த காட்சியைக் காண்பதற்கு இரண்டு கண்கள் போதவில்லைதான்! இரண்டாயிரம் கண்களாவது குறைந்த பட்சம் வேண்டும்! ஆனால் அத்தகைய சமயங்களில் எழுந்த வாத்திய முழக்கங்களைக் கேட்பதற்கோ இரண்டாயிரம் செவிகள் போத மாட்டா! நிச்சயமாக இரண்டு லட்சம் காதுகளேனும் வேண்டும். அப்படியாக உடுக்கைகள், துந்துபிகள், மத்தளங்கள், செப்புத் தாளங்கள், பறைகள், கொம்புகள் எல்லாம் சேர்ந்து முழங்கிக் கேட்போர் காதுகள் செவிடுபடச் செய்தன.

இந்த ஆட்டக்காரர்களும் அவர்களைச் சுற்றி நின்ற கூட்டமும் நகர்ந்ததும் மற்றும் முப்பது யானைகள் முன் போலவே ஜாஜ்வல்யமான ஆபரணங்களுடன் வந்தன. அவற்றில் நடுநாயகமான யானையின் மேலும் ஓர் அழகிய வேலைப்பாடு அமைந்த பெட்டி இருந்தது. அதன் மேல் தங்கக்



குடை கவிந்திருந்தது. சுற்றி நின்ற யானை மீதிருந்தவர்கள் வெண் சாமரங்களை வீசினார்கள். இந்த யானைக் கூட்டத்துக்குப் பின்னாலும் ஆட்டக்காரர்கள் வந்தார்கள். இந்த ஆட்டக்காரர்களுக்கு நடுவில் ரதி, மன்மதன், முக்கண்ணையுடைய சிவ பெருமான் வேடம் தரித்தவர்கள் நின்றார்கள். சுற்றி நின்றவர்கள் ஆடிக் குதித்தார்கள்.

''இது என்ன? சிவபெருமான் இங்கு எப்படி வந்தார்?'' என்று வந்தியத்



தேவன் கேட்டான்.

''கஜபாகு என்னும் இலங்கை அரசன் சிவபெருமானை அழைத்து வந்தான். அதற்குப் பிறகு இங்கேயே அவர் பிடிவாதமாக இருக்கிறார்!'' என்றார் இளவரசர்.

''ஓ வீர வைஷ்ணவரே! பார்த்தீரா! யார் பெரிய தெய்வம் என்று இப்போது தெரிந்ததா?'' என்று வந்தியத்தேவன் கேட்டு வாய் மூடுவதற்குள் மற்றும் சில யானைகள் அதே மாதிரி அலங்காரங்களுடன் வந்து விட்டன. அந்த யானைகளுக்குப் பின்னால் வந்த ஆட்டக்காரர்களுக்கு மத்தியில் கருடாழ்வாரைப் போல் மூக்கும் இறக்கைகளும் வைத்துக் கட்டிக் கொண்டிருந்த நடனக்காரர்கள் சுழன்றும், பறந்தும், குதித்தும், மூக்கை ஆட்டியும் ஆர்ப்பாட்டமாக ஆடினார்கள்.

''அப்பனே! பார்த்தாயா? இங்கே கருட வாகனத்தில் எங்கள் திருமாலும் எழுந்தருளியிருக்கிறார்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.



மீண்டும் ஒரு யானைக் கூட்டம் வந்தது. அதற்குப் பின்னால் வந்த ஆட்டக்காரர்களோ கைகளில் வாள்களும் வேல்களும் ஏந்திப் பயங்கரமான யுத்த நடனம் செய்து கொண்டு வந்தார்கள். தாளத்துக்கும் ஆட்டத்துக்கும் இசைய அவர்கள் கையில் பிடித்த வாள்களும் வேல்களும் ஒன்றோடொன்று டணார் டணார் என்று மோதிச் சப்தித்தன.

இவ்வளவுக்கும் கடைசியாக வந்த யானைக் கூட்டத்துக்குப் பின்னால் ஆட்டக்காரர்கள் அவ்வளவு பேரும் இரண்டு கையிலும் சிலம்புகளை வைத்துக் கொண்டு ஆடினார்கள். அவர்கள் ஆடும்போது அத்தனை சிலம்புகளும் சேர்ந்து கலீர் கலீர் என்று சப்தித்தன. ஒருசமயம் அவர்களுடைய நடனம் வெகு உக்கிரமாயிருந்தது. இன்னொரு சமயம் அமைதி பொருந்திய லலித நடனக் கலையாக மாறியது.

இந்தக் காட்சிகளையெல்லாம் கண்டும் பலவித சப்த சித்திரங்களைக் கேட்டும் பிரமித்து நின்ற வந்தியத் தேவனுக்கு இளவரசர் இந்த ஊர்வலத் திருவிழாவின் வரலாற்றையும் கருத் தையும் கூறினார்.

தமிழகத்து அரசர்களும் இலங்கை அரசர்களும் நட்புரிமை பாராட்டிய காலங்களும் உண்டு. கடல் சூழ் இலங்கைக் கஜபாகு மன்னனும் சேரன் செங்குட்டுவனும் அவ்விதம் சிநேகமாயிருந்தார்கள். சேரன் செங் குட்டுவன் கண்ணகி என்னும் பத்தினித் தெய்வத்துக்கு விழா நடத்தியபோது கஜபாகு அங்கே சென்றிருந்தான். அந் நாட்டில் நடந்த மற்ற திருவிழாக் களையும் கண்டு களித்தான். பின்னர் ஒரு சமயம் சேரன் செங்குட்டுவன் இலங்கைக்கு வந்திருந்தபோது கஜபாகு மன்னன் விழா நடத்தினான். தமி ழகத்தின் தெய்வங்களாகிய சிவ பெருமான், திருமால், கார்த்திகேயர், பத்தினித் தெய்வம் ஆகிய நாலு தெய் வங்களுக்கும் ஒரே சமயத்தில் திருவிழா நடத்தினான். இந்த விழாக்களில் மக்கள் அடைந்த குதூகலத்தைக் கண்டு, பின் னர் ஆண்டுதோறும் அந்த விழாக் களை நடத்தத் தீர்மானித்தான். புத்தர் பெருமானுக்கு அவ்விழாவில் முதல் இடம் கொடுத்து மற்ற நாலு தெய்வங் களையும் பின்னால் வரச் செய்து விழா நடத்தினான். அன்று முதல் அந்த விழா இலங்கையில் நிலைத்து நின்று மிகப் பெரிய திருவிழாவாக ஆண்டுதோறும் விடாமல் நடந்து வருகிறது.

''ஆனால் தெய்வங்களை எங்கும் காணவில்லையே?'' என்றான் வல்ல வரையன்.

''ஒவ்வொரு யானைக் கூட்டத்திலும் நடு நாயகமாக வந்த யானை மீது வைத்திருந்த பெட்டியைப் பார்த் தீரா?''

''பார்த்தேன்! அந்தப் பெட்டிக்குள் தெய்வங்களைப் பூட்டி வைத்திருக் கிறார்களா? தப்பித்துக் கொண்டு தமிழகத்துக்குப் போய் விடக் கூடாது என்று?''

இதைக் கேட்ட பொன்னியின் செல்வர் நகைத்து விட்டு, ''அப்படி யில்லை; முதலில் வந்த யானை மீதிருந்த பெட்டிக்குள்ளே புத்த பெருமானுடைய பல் ஒன்றைப் பத்திரமாய்ப் பூட்டி வைத்திருக்கிறார்கள். புத்த சமயத்தார் இந் நாட்டில் போற்றிக் காப்பாற்றும் செல்வங்களுக்குள்ளே விலை மதிப்பற்ற செல்வம் அது. ஆகையால் அந்தப் புனிதப் பொருளை அழகிய பெட்டியில் வைத்து யானை மீது ஏற்றி ஊர்வலமாய் எடுத்துச் சென்றார்கள்!'' என்றார்.


''பின்னால் வரும் பெட்டிக்குள்ளே என்ன இருக்கிறது?'' என்று வந்தியத் தேவன் கேட்டான்.

''சிவன், விஷ்ணு, முருகன், கண்ணகி ஆகியவர்களின் பற்கள் கிடைக்க வில்லை! ஆகையால் அவற்றுக்குப் பதிலாக அந்தந்தத் தேவாலயத்தின் தெய்வங்களுக்கு அணியும் திருஆப ரணங்களை அந்தப் பெட்டிகளில் பத்திரமாய் வைத்துக் கொண்டு போகிறார்கள்'' என்று இளவரசர் கூறினார்.

வந்தியத்தேவன் சிறிது சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு, ''ஆகா! தங் களுக்குப் பதிலாகப் பெரிய பழுவேட் டரையர் மட்டும் இங்கே படை யெடுத்து வந்திருந்தால்...?'' என் றான்.

அச்சமயத்தில் திருவிழா ஊர் வலத்தின் கடைசிப் பகுதி அந்த வீதி முடுக்கில் திரும்பிச் சென்றது. வாத்திய முழக்கம், ஜனங்களின் ஆரவாரம், - இவற்றின் ஓசை குறையத் தொடங் கியது.

''குறிப்பிட்ட நேரத்துக்கு இன்னும் ஒரு நாழிகைதான் மிச்சமிருக்கிறது. வாருங்கள். போகலாம்!'' என்று இளவரசர் மேடையிலிருந்து இறங் கினார். மூவரும் கீழே வீதிக்கு வந்தார்கள். ஊர்வலம் சென்றதற்கு நேர் எதிர்ப்பக்கம் நோக்கி நடந் தார்கள். நகர மக்கள் அனைவரும் பெரா ஹராத் திருவிழாவில் ஈடுபட்



டிருந்தபடியால் இவர்கள் போன வீதிகளில் ஜன நடமாட்டமே இல்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு விஸ்தாரமான ஏரியின் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அந்த ஏரியில் தண்ணீர் ததும்பிக் கரையில் அலைமோதிக் கொண்டிருந்தது. சந்திர கிரணங்கள் அந்த அலைகளில் தவழ்ந்து விளையாடி வெள்ளி அலைகளாகச் செய்து கொண்டிருந்தன.

ஏரிக் கரையிலிருந்து கீழே இறங்கிச் சென்றார்கள். அவ்விடத்தில் செண்பக மலர்களின் நறுமணம் பரவியிருந்தது. இன்னும் பலவகைப் புஷ்பச் செடிகளில் வெள்ளை மலர்கள் கொத்துக் கொத்தாகப் பூத்துத் திகழ்ந்தன. ஆங்காங்கே சிறிய சிறிய செய்குன்றுகளும் படித் துறைத் தடாகங்களும் காணப்பட்டன. தடாகம் ஒன்றின்மேலே அமைந்திருந்த அத்தகைய சிங்க முகத்துவாரத்திலிருந்து நீர் அருவி பொழிந்து கொண்டிருந்தது. அந்தத் தடாகக்கரை அருகில் நெருங்கிச் சென்று மூவரும் நின்றார்கள்.

அநுராதபுரத்துக்கு வெளியே சாலை ஓரத்தில் நின்ற புத்தர் சிலையின் தோற்றம் வந்தியத்தேவனுடைய மனக்கண் முன்னால் வந்தது. சிலையின் அடிப்பீடத்தில் வரிசையாக வைத்திருந்த தாமரை மொட்டுக்களை இளவரசர் எண்ணிப் பார்த்துப் பன்னிரண்டு என்று சொன்னார். அவை பன்னிரண்டு நாழிகையைக் குறித்தன போலும். தாமரை மலர்களாயிராமல் மொட்டுகளாயிருந்தபடியால் இரவைக் குறித்தன போலும். அந்த மொட்டுகளுக்கு அருகில் இருந்த சிங்க முகத்துக் கிண்டியும் வந்தியத்தேவனுடைய நினைவில் இருந்தது. அந்தப் பாத்திரம் இந்தச் சிங்க முக அருவி விழும் தடாகத்தைக் குறிப்பிட்டது போலும்!

இதெல்லாம் சரிதான்! ஆனால் இங்கு எதற்காக யார் இளவரசரை வரச் செய்திருக்கிறார்கள்? இதில் என்னென்ன அபாயங்கள் நேரிடுமோ என்னமோ தெரியவில்லையே? ஆயுதம் ஒன்றும் கொண்டு வரக்கூடாது என்று இளவரசர் தடுத்ததன் கருத்து என்ன? ஒருவேளை இங்கு ஏதேனும் காதல் நிகழ்ச்சி நடைபெறப் போகிறதோ?

இந்த நினைவு வந்ததும் வந்தியத்தேவனுடைய உள்ளம் கொந்தளித்தது. அவனுடைய மனம் கடல் கடந்து பழையாறைக்குப் பாய்ந்து சென்றது. இளையபிராட்டியும் வானதிதேவியும் அவன் மனக் கண்முன் வந்தார்கள்.

இளவரசரின் வாயைப் பிடுங்கிப் பார்க்கலாம் என்று வந்தியத்தேவன் எண்ணினான். "ஐயா! இந்த இடத்தைப் பார்த்தால் பழைய காலத்து அரண்மனை நந்தவனம் மாதிரி அல்லவா தோன்றுகிறது!" என்றான்.

"ஆம்; இது அரண்மனை நந்தவனம் இருந்த இடந்தான். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நந்தவனத்தையொட்டித் துஷ்டகமனுவின் அரண்மனை இருந்தது. அதோ பார்! இன்னமும் அந்த அரண்மனையின் சில பகுதிகள் அழியாமல் இருக்கின்றன!" என்றார்.

வந்தியத்தேவன் அங்கே சற்றுத் தூரத்தில் தெரிந்த பழைய அரண்மனை மாடங்களைப் பார்த்து விட்டு, "அந்தக் கட்டடங்கள் அரண்மனை அந்தப்புரமாயிருந்திருக்கலாம். இந்தத் தடாகத்தில் அரசிளங்குமரிகள் இறங்கி ஜலக்ரீடை செய்து மகிழ்ந்திருப்பார்கள்!" என்றான்.

"இந்த நந்தவனத்திலே நடந்த அதிசயமான சம்பவம் வேறு ஒன்று உண்டு. ஆயிரம் வருஷத்துக்கு முன்னால் நடந்தது. துஷ்டகமனு மன்னனின் புதல்வன் **ஸாலி** என்பவன் இங்கே ஒருநாள் உலாவிக் கொண்டிருந்தான். ஒரு பெண் இந்தத் தடாகத்தில் தண்ணீர் மொண்டு புஷ்பச் செடிகளுக்கு ஊற்றிக் கொண்டிருப்பதைக் கண்டான். அந்தப் பெண்ணிடம் காதல் கொண்டான். அவள் ஒரு சண்டாளப் பெண் என்றும், அவள் பெயர் **அசோகமாலா** என்றும் அறிந்தான். சண்டாளப் பெண்ணாயிருந்தாலும் அவளையே மணந்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தான். 'அப்படியானால் நீ சிம்மாசனம் ஏற முடியாது!' என்று தந்தை கூறினார். 'சிம்மாசனம் வேண்டாம்; எனக்கு அசோக மாலாதான் வேண்டும்' என்று ஸாலி வாஹனன் பிடிவாதமாகக் கூறி விட்டான். இந்த உலகத்தில் இன்னொரு ராஜகுமாரனால் இப்படிக் கூற முடியும் என்று தோன்றுகிறதா?"

இவ்வாறு பொன்னியின் செல்வர் கூறியபோது, கோடிக்கரைக்கடலில் படகு செலுத்திய 'சமுத்திர குமாரி'யின் நினைவு வந்தியத்தேவனுக்கு வந்தது. ஆகா! ஒருவேளை இவரும் அந்தப் பெண்ணை நினைத்துக் கொண்டுதான் இந்தக் கதையைச் சொல்லுகிறாரா, என்ன?

பூங்குழலியின் பேச்சை எப்படி எடுக்கலாம் என்று அவன் எண்ணிக் கொண்டிருந்தபோது, அங்கே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. சிங்கதாரைத் தடாகத்தின் பின்புறச் சுவரில், உட்பக்கம் குழிவாக அமைந்து, அதற்குள்ளே இருவர் அமரும்படியான ஒரு கல் ஆசனம் இருந்தது. அப்படி அமைந்திருந்த அறையின் ஓர் ஓரத்தில் திடீரென்று விளக்கு வெளிச்சம் காணப்பட்டது. விளக்கைப் பிடித்துக் கொண்டிருந்தவரின் கரம் முதலில் வெளி வந்தது. பிறகு புத்த பிக்ஷு ஒருவரின் திருமுகமும் காணப்பட்டது.

வந்தியத்தேவன் அந்த இந்திர ஜாலக் காட்சியை அடங்கா வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான். மேலே என்ன நடக்கப் போகிறது என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தினால் அவன் மூச்சும் சிறிது நேரம் நின்றிருந்தது.

(தொடரும்)

சத்தியமூர்த்தி சாகரம்

கல்கி கலெக்ஷன்



• சத்தியமூர்த்தி

சில மாதங்களுக்கு முன்பு நமது மராமத்து இலாகா மந்திரி கனம் பக்தவத்ஸலம் அவர்கள் நுங்கம்பாக்கத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். அப்போது சென்னை நகரசபைக்கு அவர் ஒரு எச்சரிக்கை செய்தார். "பூண்டி தேக்கத்துக்குச் 'சத்தியமூர்த்தி சாகரம்' என்ற பெயர்தான் பொருத்தமானது. சென்னை நகரசபை அம்மாதிரி தீர்மானம் செய்து நல்ல பெயர் வாங்கிக் கொண்டால் ரொம்ப நல்லது. இல்லாவிட்டால் சென்னை சர்க்காரே முன்வந்து மேற்படி நாமகரணத்தைச் செய்து விடுவார்கள்!" என்று சொன்னார்.

இதற்குப் பிறகு சென்னை நகரசபை சும்மா இருக்க முடியுமா? ஏற்கெனவே பூண்டித் தேக்கத்துக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பெயரை வைக்க வேண்டுமென்ற பிரேரணை வந்த சமயம், சென்னை நகர சபை பெரும்பான்மை வோட்டுக்களால் அதை மறுதளித்தது. இப்போது அந்த மறுதளிப்பை வாபஸ் வாங்கிக் கொண்டு, "பூண்டித் தேக்கத்துக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி பெயரைத்தான் இட வேண்டும்" என்று சிபாரிசு செய்தது.

எனக்கும் உடனே 'சத்தியமூர்த்தி சாகர'த்தைத் தரிசனம் செய்ய வேண்டும் என்னும் தாகம் ஏற்பட்டது.

புராணங்களில் சொல்லப்படும் 'க்ஷீர சாகர'த்தையும், உலக வழக்கில் உள்ள சம்சார சாகரத்தையும் தவிர, மற்றபடி 'சாகரம்' என்றால் உப்பு நீராகவே இருக்கும்.

ஆனால் பூண்டியில் உள்ள 'சத்தியமூர்த்தி சாகர'மோ இன்றைக்குச் சென்னை மாநகரில் வசிக்கும் மக்களில் பாதிப் பேருக்குத் தாகம் தீர்க்கத் தண்ணீர் கொடுக்கிறது! வாழ்நாளெல்லாம் சுதந்தர தாகங்கொண்டிருந்து, மற்றவர்களுக்கும் சுதந்தர தாகத்தை அபாரமாய் உண்டாக்கிய தலைவரின் பெயரை இனிச் சென்னைவாசிகள் தாகத்துக்குத் தண்ணீர் குடிக்கும்போதெல்லாம் ஞாபகப்படுத்திக் கொள்வார்கள்.

✠ ✠ ✠

சென்னை மாநகரில் 1937-ம் வருஷத்தில் நேர்ந்திருந்த தண்ணீர்ப் பஞ்சம் சிலருக்கு நினைவில் இருக்கலாம். அந்த வருஷம் பருவ மழை பெய்யாதபடியால் 'ரெட் ஹில்ஸ்' ஏரியில் தண்ணீர் வற்றிப் போகவே, சென்னை நகரின் குழாய்களில் தண்ணீர் சொட்டுச் சொட்டென்று சொட்ட ஆரம்பித்தது. நகரவாசிகள் தண்ணீருக்குத் தவித்தார்கள்.

அப்போது 'குறத்தலையாறு' என்னும

அமரர் கல்கி


நதியில் பூண்டி கிராமத்துக்கு அருகில் ஒரு அணை கட்டினால் தண்ணீரை நிறையத் தேக்கி வைக்கலாமென்றும், அதை அவசியமான அளவுக்கு 'ரெட்ஹில்ஸ்' ஏரியில் விட்டு வந்தால், சென்னை நகருக்குத் தண்ணீர்ப் பஞ்சமே இராது என்றும் என்ஜினியர்கள் சொன்னார்கள்.

இந்தத் திட்டமானது தீரர் சத்தியமூர்த்தி சென்னை நகர சபையின் தலைவராயிருந்த போது ஊர்ஜிதமாயிற்று. 1940-ம் வருஷ மத்தியில் வேலை தொடங்கி மூன்று வருஷத்தில் அணைக்கட்டு முடிந்தது. செலவு 65 லட்சம் ரூபாய் ஆயிற்று. இப்போது கட்டினால் அதே அணைக்கட்டுக்குச் செலவு இரண்டு கோடி ஆகுமாம்! எனவே, தாம் மேயராயிருந்த காலத்தில் அணைக்கட்டு வேலை ஆரம்பித்துவிட வேண்டுமென்று அவசரப்பட்ட ஸ்ரீ சத்தியமூர்த்தியின் திருநாமம் வாழ்க!

✠ ✠ ✠

பூண்டித் தேக்கம் வேலை முடிந்து வருஷம் நாலுக்கு மேலே ஆனபோதிலும், 'சத்தியமூர்த்தி சாகரம்' என்ற பெயர் நிச்சயமான பிறகுதான் அதைப் பார்க்க வேணுமென்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. இரண்டு வாரத்துக்கு முன்னால் நண்பர்களின் கோஷ்டியுடன் சென்றிருந்தேன். அணைக்கட்டையும், அணைக்கட்டுக்கு அப்பால் தேக்கப்பட்டிருந்த ஜலத்திரளையும் பார்த்தேன். கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் அந்தக் காட்சியைப் பார்த்துமே தாகம் தீர்ந்து விட்டது. சுமார் 7000 ஏக்கரா விஸ்தீரணத்தில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. நதி நடுவில் தண்ணீர் நிலையில் ஆழம் சுமார் 33 அடி என்று தெரிந்தது. இந்தத் தேக்கத்தின் காரணமாக இருபத்தேழு கிராமங்கள் நீரில் மூழ்கிப் போயினவாம். மூழ்கிப் போன கிராமங்களில் வசித்திருந்தவர்களுக்குத் தகுந்த நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதால் அவர்கள் சந்தோஷமாக வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்று குடியேறி விட்டார்களாம்.

தண்ணீரில் மூழ்கிய கிராமங்கள் ஒன்றில் ஒரு பெரிய ஆலயம் இருந்தது; இப்போதும் இருக்கிறது. அதாவது கோயிலின் மேல் மண்டபம், கர்ப்பக் கிரஹ மண்டபம், ஸ்தூபி ஆகியவை தண்ணீருக்கு மேலே தெரிகின்றன. அந்தக் கோயிலில் வீற்றிருந்த இறைவன் தண்ணீரில் மூழ்கியது பற்றிக் கொஞ்சமும் கோபித்துக் கொள்ளவில்லையென்று அறிந்தேன். எல்லையில்லாத, ஆழந் தெரியாத அலை மோதும் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டு நிம்மதியாகத் தூங்கும் பகவான் இந்த முப்பத்துமூன்று அடி



• சத்தியமூர்த்தி சாகரம்

ஆழமுள்ள நீர் நிலைக்கா பயப்பட்டு விடப் போகிறார்? ஒருநாளும் இல்லை. இங்கும் நிம்மதியாகத்தான் பகவான் இருப்பார். ஆனால் கிட்டப் போய்ப் பார்த்து விட்டு வருவதற்கு எனக்குத்தான் வசதி இல்லை.

✤ ✤ ✤

சென்னையிலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்தில் பூண்டிக் கிராமம் இருக்கிறது. பூண்டிக்குப் புறப்பட்டபோது அங்குள்ள அணைக்கட்டையும் சாகரத்தையும் பார்த்துவிட்டு வரும் உத்தேசத்துடன் மட்டுந்தான் போனோம். அந்த உத்தேசம் சுலபத்தில் நிறைவேறி விட்டது. அணைக்கட்டையும் சாகரத்தையும் பார்த்தோம். தண்ணீரைக் கொஞ்சமாக விடுவதற்கும், அதிகமாக விடுவதற்கும், விடாமலே அடைத்து வைப்பதற்கும் செய்யப்பட்டிருக்கும் அதிசயமான ஏற்பாடுகளையும் பார்த்தோம். நதியில் பிரவாகம் வரும் சமயங்களில் தண்ணீரை அதிகமாகத் திறந்து விட்டால் அதன் வேகத்தைத் தடுத்து மெதுப்படுத்தி விடுவதற்காகச் செய்திருக்கும் ஏற்பாட்டையும் கவனித்தோம். ஒரு கை தண்ணீரும் அள்ளிக் குடித்து "சத்திய மூர்த்திக்கு ஜே!" என்று கோஷித்த பிறகு சென்னைக்குத் திரும்ப ஆயத்தமானோம்.

அப்போது ஸூபர்வைஸர் ஸ்ரீ ராமமூர்த்தி, "இதற்குள் புறப்படுகிறீர்களே? ராமபாத சாகரம், துங்கபத்திரை, பவானி, மலாம் புழை அணைக்கட்டுகளைப் பார்க்க வேண்டாமா?" என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "நான்தான் ஜிம்ப்பாக்கத்திலிருந்து வருகிறேன்; தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டேன். பிறகு ஸ்ரீராமமூர்த்தி விஷயத்தைச் சொன்னார். பூண்டியில் அணைக்கட்டைத் தவிர, 'நீர்ப் பாசன ஆராய்ச்சி நிலையம்' ஒன்று இருப்பதாகத் தெரிந்தது. இது 1944-ம் ஆண்டில் தான் ஸ்தாபிக்கப்பட்டதாயினும், இந்தச் சில வருஷத்தில் அபாரமான ஆராய்ச்சிகள் நடத்தியிருப்பதாகத் தெரிய வந்தது. முக்கியமான பெரிய அணைக்கட்டுகள் கட்டுவதற்கு அவசியமான பூர்வாங்க சோதனைகளையெல்லாம் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் செய்கிறார்களாம்.

உதாரணமாக, ராமபாத சாகரம் அணைக்கட்டு இருக்கிறது. (அணைக்கட்டு இப்போது இல்லை; ஆனால் அதைப் பற்றிய யோசனை இருக்கிறதல்லவா!) அதைக் கட்டி முடிக்க 80 கோடி ரூபாய் ஆகும் என்ற விவரத்தை நேயர்கள் படித்திருப்பார்கள். செலவுத் திட்டத்திலிருந்து அது எவ்வளவு மகத்தான வேலையென்று தெரிந்து கொள்ளலாம். கோதாவரி ஆறு இந்தியாவிலுள்ள மூன்றாவது பெரிய ஜீவ நதி. அதில் எப்போதும் பிரவாகம் இருந்து கொண்டிருக்கும். அணைக்கட்டுக் கட்ட வேண்டுமானால், நதியின் மணல் பரப்புக்குக் கீழே இருநூறு அடி ஆழம் தோண்டி அஸ்திவாரம் போட்டாக வேண்டும். நதியை இரண்டாகப் பிளவுபடுத்தி, ஒரு பகுதியில் தண்ணீரை விட்டு இன்னொரு பகுதியை அடைத்து விட்டு மேற்கண்ட விதம் அஸ்திவாரம் போட வேண்டும். பெரிய பெரிய பிரம்மாண்டமான இரும்புக் குழாய்களை மணலில் கீழே இறக்கி நதியை அடைக்க வேண்டும். இப்படி அடைத்த பிறகு கசிந்து வரும் தண்ணீரை இறைப்பதே பிரமப் பிரயத்தனமாயிருக்கும். அடியில் தோண்டத் தோண்டத் தண்ணீர் குபு குபுவென்று ஊறி வெள்ளமாய்ப் பெருகும். இந்த நிலையில் அணைக்கட்டுக் கட்ட வேண்டும். இதைப் பற்றி யோசனை கேட்பதற்காக நமது மாகாணத்து என்ஜினீரிங் நிபுணர்கள் அமெரிக்கா சென்றார்கள். "நீங்கள் போட்ட திட்டமே சரி; அதைவிட நல்ல திட்டம் இருக்க முடியாது!" என்று அமெரிக்க நிபுணர்கள் சொல்லி விட்டார்கள்.

இப்படி அமெரிக்காவில் 'சர்டிபிகேட்' வாங்கிய திட்டம் பூண்டியிலேதான் உருவாயிற்று. பற்பல சோதனைகளுக்குப் பிறகு உருவாயிற்று. கோதாவரி நதியின் அகலம் மூன்று மைல் என்றால், இங்கே அதை மூன்று கஜமாக வைத்துக் கொள்கிறார்கள். அதேமாதிரி கணக்கில் தண்ணீர் வெள்ளத்தை விடுகிறார்கள். அகலம் நூற்றுக்கு ஒரு பங்கு என்றால், தண்ணீர் வெள்ளமும் அப்படியே நூற்றுக்கு ஒரு பங்காகவும், வெள்ளத்தின் வேகமும் நூற்றுக்கு ஒரு பங்காகவும் வைத்துக் கொண்டு சோதனை நடத்துகிறார்கள். அதில் ஏற்படக்கூடிய இடையூறுகளையெல்லாம் கண்டுபிடிக்கிறார்கள். அஸ்திவாரம் எவ்வளவு ஆழத்திலிருந்து போட வேண்டும், அணைக்கட்டின் உயரம் எவ்

வளவு இருக்க வேண்டும், அதற்கு எவ்வளவு இரும்பு வேண்டும், எவ்வளவு செமண்டு வேண்டும், என்னென்ன இயந்திரங்கள் வேண்டும் என்றெல்லாம் சோதனை செய்து கண்டு பிடிக்கிறார்கள்.

"இதென்ன? ஏட்டுச் சுரைக்காய் கறிக் குதவுமா? இப்படிச் சின்ன அளவில் திட்டம் போட்டுச் செய்யும் சோதனைகள் பெரிய அணைக்கட்டு கட்டுவதற்கு உதவுமா?" என்றால், கட்டாயம் உதவும் என்று நிரூபிக்கப் பட்டிருக்கிறது. உதாரணமாக, மேற்படி ஆராய்ச்சி நிலையத்தில் துங்கபத்திரா அணைக்கட்டு கட்டுவதற்கு இரண்டு திட்டங்கள் காட்டப்படுகின்றன. அணைக் கட்டு, மதகு, மதகை அடைக்கும் கதவு, கதவைத் திறந்து விட்டதும் தண்ணீர் பாய்வது எல்லாம் காட்டப்படுகின்றன.

இரண்டு திட்டங்களில் ஒன்று இந்தப் பூண்டி ஆராய்ச்சி நிலையத்தில் தயாரானது. இன்னொன்று ஹைதராபாத் என்ஜினியர்கள் தயாரித்தது. பூண்டியில் போட்ட திட்டத்தில் பல லட்சம் ரூபாய் லாபமாகிறது. வடநாட்டிலிருந்து சில பிரபல என்ஜினியர்கள் வந்து இரண்டு திட்டங்களையும் பார்வையிட்டார்கள். "பூண்டி நிலையத் திட்டந்தான் சரி!" என்று சொல்லி விட்டார்கள். நைஜாம் சர்க்காரும் அதை ஒப்புக் கொண்டு, வேலையும் நடந்து வருகிறது.

இப்படி இன்னும் பல சோதனைகளைப் பார்த்தோம். மேட்டூர் தேக்கத்தின் தண்ணீர் இப்போது தஞ்சை ஜில்லாவுக்கு மட்டும் பயன்பட்டு வருகிறது. சேலம் ஜில்லாவுக்குப் பயன்படவில்லை. அதைச் சேலம் ஜில்லாவுக்குப் பயன்படுத்த ஒரு திட்டம் போட்டுச் சோதனை செய்து வருகிறார்கள்.

தஞ்சாவூரை நோக்கித் தடதடவென்று கால்வாயில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தக் கால்வாய் ரொம்பப் பள்ளம். சட்டென்று ஒரு பலகையை அந்தக் கால்வாயில் செருகுகிறார்கள். அவ்வளவுதான்! பக்கத்திலுள்ள மேட்டுக் கால்வாயில் குபுகுபுவென்று தண்ணீர் பாய்ந்து வெள்ளமாய் ஓடுகிறது. இப்படி இரண்டு மூன்று தடவை செய்து காட்டவே எனக்கு ஒரே கவலையாகப் போய் விட்டது. தஞ்சாவூர் ஜில்லாவுக்குப் போக வேண்டிய தண்ணீரெல்லாம் அநியாயமாய்ச் சேலத்துக்குப் போகிறதே என்று "போதும்! நிறுத்துங்கள்!" என்று சொன்னேன். ஜனாப் டி.பி. குட்டியம்மு சாகிபுவும் நிறுத்தும்படி உத்தரவு போட்டார். அதன் பயனாக, சேலம், தஞ்சாவூர் இரண்டு இடத்துக்குமே தண்ணீர் போகாமல் நின்று விட்டது!

"ஆகா! இந்த என்ஜினியர்களே இப்படித்தான்!" என்று வருத்தப்பட்டுக் கொண்டேன்.

ஜனாப் டி.பி. குட்டியம்மு சாகிபு மேற்படி ஆராய்ச்சி நிலையத்தின் தலைவரான எக்ஸிகியூடிவ் என்ஜினியர். ('இச்சிபெட்டின என்ஜினியர்' அல்ல - எக்ஸிகியூடிவ் என்ஜினியர்!) மிக்க சிரத்தையுடன் அங்கு நடக்கும் சோதனைகளையெல்லாம் எங்களுக்குக் காட்டி விவரித்துக் கொண்டு வந்தார். இந்த ஆராய்ச்சிகளில் அவருக்கு எவ்வளவு ஆர்வம் என்பது நன்றாகத் தெரிந்தது.

⊕ ⊕ ⊕

பொதுவாக, சென்னை மாகாணம் பிரபல என்ஜினியர்களுக்குப் பெயர் போனது. நமது மாகாணத்தில் உள்ள என்ஜினியரிங் திறமையை யெல்லாம் நன்றாகப் பயன்படுத்தினால் ஒரு சில வருஷங்களில் சென்னை மாகாணத்தை நீர் வளத்தில் நிகரற்ற நாடாகச் செய்து விடலாம். இத்தனை காலமும் நமது என்ஜினியர்கள் அதிகாரவர்க்க ஆட்சியின் கீழ் அதிகாரவர்க்க தோரணையில் காரியம் செய்து கொண்டு வந்தார்கள். இப்போது சுயராஜ்ய சர்க்காரின் கீழ் வேலை செய்து வருகிறார்கள். அதிலும் சென்னை மாகாணத்தில் என்ஜினியரிங் இலாகா கனம் பக்தவத்ஸலத்தின் பொறுப்பில் இருக்கிறது. திறமையை நன்கு உபயோகப்படுத்தவும் ஊக்கம் தர வேண்டியவர்களுக்கு ஊக்கம் அளிக்கவும் கனம் பக்தவத்ஸலம் நன்கு அறிந்தவர். அவருடைய நிர்வாகத்தின் கீழ் என்ஜினியரிங் இலாகாவின் மனப்போக்கே நல்ல மாறுதல் அடைந்து வருவதை எங்கும் கண்டு வருகிறோம். பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருப்பதையும் பார்க்கிறோம். சென்னை மாகாணத்தின் அதிர்ஷ்டம் மட்டும் சரியாக இருந்தால் நமது என்ஜினீரிங் இலாகாவின் மூலம் நாடு பலவிதங்களில் நன்மை அடைவதைச் சீக்கிரத்தில் பார்க்கலாம்.

(கல்கி, பிப்ரவரி 15, 1948)

ராவணன் தயாரித்த மூலிகை

வித்தியாசமாக இருக்கட்டும் என்று 'மூலிகைப் பெட்ரோல்' ராமரைச் சந்தித்துப் பேச, ராவணனை ராமர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றோம். இவர் சேத்துப்பட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனத்தில் பணிபுரிபவர். ராவணனை, ராமருக்கு அறிமுகம் செய்து வைக்க, இருவரும் உரையாடினார்கள். ஒரு கட்டத்தில், ராமர் செய்முறையை விளக்க, ராவணனே மூலிகைப் பெட்ரோல் தயாரித்தார்...



ராவணன்: *விஞ்ஞானப் பரிசோதனைகளில் 'ரிபீடபிலிடி' என்று ஒருமுறை உண்டு. ஒரு கண்டுபிடிப்பு நிஜமானது என்றால், அதைக் கண்டுபிடித்தவர் மட்டுமின்றி, வேறு யார், அதற்குரிய செய்முறைப்படி செய்தாலும், அது நிருபணமாக வேண்டும். உங்களுடைய மூலிகைப் பெட்ரோல் விஷயத்தில் அது சாத்தியமா?*



ராமர்: *நான் மட்டுமில்லை சார்! ஒரு மூணு வயதுக் குழந்தையும் இதனைச் செய்து காட்ட முடியும்.*

ராவணன்: *அப்படியெனில் உங்களைத் துணையாகக் கொண்டு என்னால் மூலிகைப் பெட்ரோல் தயாரிக்க முடியுமா?*

ராமர்: *ஓ! தாராளமாக!*

(உடனே ராமர் தன் உதவியாளரிடம் சுடு தண்ணீர் கொண்டு வரச் சொல்லி விட்டுத் தாம் உள்ளே போய், பவுடர் மாதிரியான இரண்டு சமாசாரங்களை எடுத்து வந்தார்.)

ராமர்: *(வெளிர் மஞ்சள் நிறத்திலிருந்த பவுடரைக் காட்டி) இதுதான் மூலிகைப் பவுடர். இது (வெள்ளை நிற பவுடரைக் காட்டி) கெமிக்கல். இவை இரண்டையும், சுடு தண்ணீரில் போட்டால், கெமிக்கல் ரியாக்ஷன் நடந்து, தண்ணீர் + எரிபொருள் கலவை உருவாகி, அதனைத் தொடர்ந்து மேலே எரிபொருளும், அடியில் தண்ணீருமாகப் பிரியும்.*

(உதவியாளர் கொதிக்கக் கொதிக்க, ஒரு சிறிய அலுமினியப் பாத்திரத்தில் சுடுநீர் கொண்டு வந்தார். ராமர் எங்களுக்கு ஒரு டம்ளரைக் கழுவி எடுத்துக் கொண்டு வரச் சொல்லி, அதை எங்கள் முன்பு தரையில் வைத்து சுடுதண்ணீரை ஊற்றச் சொன்னார். ஒரு காகிதத்தை அதிலே நனைத்து எடுத்து, எரியும் மெழுகுவர்த்திச் சுடரில் காட்ட, அது தீப்பிடிக்கவில்லை.)

ராமர்: *இதில் மண்ணெண்ணெய், பெட்ரோல் போல ஏதாவது கலந்திருந்தால், இந்நேரம் தீப்பிடித்திருக்குமில்லையா?*

(அடுத்து தண்ணீரில், தாம் வைத்திருக்கும் இரண்டு பவுடர்களையும் ராவணனிடம் கொடுத்துப் போடச் செய்தார்)

ராவணன்: *இப்போது, இதைக் கலக்க வேண்டும் இல்லையா! இதில்தானே சென்னை ஐ.ஐ.டி.யில் பிரச்னை வந்தது?*

ராமர்: *ஆமாம்! உங்கள் பேனாவைக் கொண்டே கலக்கலாம். கலக்குவதற்கு அதுவே போதும்.*

(பேனாவால் சுடுதண்ணீரை நன்றாய்க் கலக்கிவிட்டு, பேனாவைத் தொட்டுப் பார்த்தபோது, லேசான பிசுபிசுப்புடன் இருந்தது. சிறிது நேரம் காத்திருந்தோம்.)

ராமர்: *தண்ணீரிலிருந்து, எரிபொருள் பிரிய ஆரம்பித்து விட்டது. ஒரு காகிதத்தை எடுத்து, அதை டம்ளரில் மேலாகத் தோய்த்து மெழுகுவர்த்தியில் இப்போது காட்டுங்கள். அப்புறம் என்ன நடக்கிறதென்று பாருங்கள்!*

ராவணன்: *சட்டென்று தீப்பிடிக்கிறது!*



• ராமர் துணையுடன் இராவணன் தயாரிக்கிறார்...

ஆனாலும் எனக்கு ஒரு சந்தேகம். காகிதம், தீப்பிடிக்கும் பொருள்தானே!

பெட்ரோல்!

ராமர்: (சுற்று முற்றும் பார்த்து, ஒரு நீண்ட ஆணியை எடுத்தார்) இந்த ஆணியை, எரிபொருளில் தோய்த்து நெருப்பில் காட்டுங்கள். அப்புறம் நம்பிக்கை வரும்.

ராவணன்: இப்போது, நீல நிறச் சுடருடன் கொஞ்சம் போல, ஆணி மீது எரிகிறதே!

ராமர்: இன்னொன்றையும் கவனியுங்கள். இந்தச் சுடரில், புகை வரவில்லை. பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் என எது எரிந்தாலும், புகை வரும். ஆக, நான் கண்டுபிடித்திருப்பது மூலிகை எரிபொருள்!

ராவணன்: சரி ராமர்! உங்களது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

ராமர்: விரைவில் ஜெனிவா சென்று அகில உலக அளவில் காப்புரிமை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப் போகிறேன்.

ராவணன்: இது நவம்பர் 1998. மூலிகை ராமர் 1.1.2000ல் எப்படி இருப்பார் என்று கனவு காணுகிறீர்கள்?

ராமர்: நாளை என்ன நடக்கும் என்பது நம் கையில் இல்லை. ஆனால், விரைவிலேயே நம் நாட்டில் மட்டுமின்றி, அகில உலக அளவில் அங்கீகாரம் பெறுவேன். 2000 ஆண்டில், மூலிகை எரிபொருள் வர்த்தக ரீதியில் தயாராகி, விற்பனையாகிக் கொண்டிருக்கும். ஆரம்பக் கால கட்டத்தில், பெட்ரோலுக்கு ஈடான மூலிகை எரிபொருள், லிட்டர் பதினைந்து ரூபாய்க்கு விற்க வேண்டியிருக்கும். 2000வாக்கில் மக்களுக்கு இரண்டு ரூபாய்க்கு ஒரு லிட்டர் மூலிகை எரிபொருள் கிடைக்கும் நிலைமை இருக்கும்!

ஏற்பாடு, தொகுப்பு:
எஸ். சந்திரமௌலி
படங்கள்: **ஸ்ரீஹரி**

சுஜாதா

பாரதியும் சோமசேகரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சோமசேகர், "வாட் டு யு மீன்? என்ன அபத்தமாப் பேசறீங்க? பாரதி ஆனந்தைக் கொல்றதாவது? மிஸ்டர் ரியாஸ், திஸ் இஸ் டு மச். என்னதான் வக்கிரமா யோசிச்சாலும் இந்த மாதிரி முடிவுக்கு வர முடியாது."

"இதை அவங்க சொல்லட்டும்!" என்றார் ரியாஸ் பாரதியைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு.

"உங்களால் எதையும் நிரூபிக்க முடியாது. எந்தவித சாட்சியமும் இல்லை. யாரும் இதை நம்ப மாட்டாங்க!" என்று தொடர்ந்து சோமசேகர் அடுக்கிக் கொண்டே போக, "அது, வேற விஷயம்."

ரியாஸை நேராகப் பார்க்காமல் பாரதியின் கண்கள் சரிந்தன.

"சொல்லுங்க பாரதி. நீங்க உங்க கணவரைக் கொல்லலைன்னு சொல்லுங்க. நான் இப்பவே மன்னிப்புக் கேட்டுக்கிட்டு திரும்பப் போயிடறேன். சொல்லுங்க!"

"அவ என்ன சொல்றது. நான் சொல்றேன். ஆனந்தை நான்தான் கொன்னேன்."

"சோமசேகர், நீங்க போலீசை முட்டாளடிக்கிற வேலையை முதல்ல நிறுத்துங்க. பாரதி நீங்க சொல்லுங்க – ஆம் – இல்லை. அது போதும் எனக்கு. நீங்க உங்க கணவரைக் கொலை செய்தீர்களா? ஆம், இல்லை!"

"இது என்ன எண்ட்ரன்ஸ் டெஸ்டா?"

"மூன்னா, சும்மாரு!" என்றாள். முதன் முதலாகப் பேசினாள்.

"இனி மறைத்துப் பிரயோசனமில்லை."

சற்று தன்னை சுதாரித்துக் கொண்டு, "ரியாஸ் ஸார், நான்தான் என் கணவரைக் கொன்றேன். நான்தான் அவரைச் சுட்டேன். சுட்டுட்டு, கதறிக் கதறி அழுதேன். ஆனந்தை மறக்க முடியாம, தொடர்ந்து வாழ முடியாம, குற்றத்தை ஒப்புக் கொள்ள முடியாம, ஒரு குழப்பமான உலகத்தில... நீங்க இப்பக் கண்டுபிடிச்சது எனக்கு ஒருவிதத்தில ஆறுதலாக்கூட இருக்குது. புயல் அடிச்சு ஓய்ந்த மாதிரி. இப்ப என்ன பண்ணுவீங்க? என்ன பண்ணணுமோ பண்ணிக்கங்க. கைது பண்ணணுமா இல்லை..."

"இல்லை. இன்னும் இல்லை. எதுக்காகக் கொலை செய்தீங்கன்னு தெரியணும். ஐ'ம் ஸாரி. அதைத் தெரிஞ்சுக்காம நான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாது."

"காரணம் சோமுதான்."

"சோமு?" என்று சோமசேகரைப் பார்த்தார்.

"இந்த சோமு இல்லை" என்றாள்.

"பின்ன மற்றொரு சோமுவா?"

"சோமுங்கறது ஒரு ஆள் இல்லை!"

"பின்ன?"

பாரதி, "மூன்னா அந்த ஃபைலை எடுத்துக்கிட்டு வா!" என்றாள்.

ரியாஸ் சற்று ஆச்சரியத்துடன் காத்திருக்க, சோமசேகர் உள்ளே சென்று, ஒரு சிவப்பு அட்டையிட்ட கோப்பைக் கொண்டு வந்தான்.

அதில் Project Somu. Top secret என்று எழுதியிருந்தது.

"அப்ப சோமுங்கறது..."

"ஆனந்த், சீக்ரட்டா ஒர்க் பண்ணிக்கிட்டிருந்த ப்ராஜெக்ட் அது. Surface Operated Missile Underground என்கிற வாக்கியத்தின் முதல் எழுத்துக்களின் சுருக்கம் சோமு"

"மைகாட்!"

"அதை விற்பதாகச் சம்மதித்துத்தான் பணம் வந்தது. வீடு வந்தது!" என்றாள் பாரதி. இயந்திரம் போலப் பேசினாள். கண்கள் வறண்டிருந்தன.

"யாருக்கு?"

"அவர்களுக்கு."

மெல்ல மெல்ல அடுத்த நான்கு மணி நேரத்தில் படிப்படியாக பாரதி அந்த நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்தாள். சோமுவும் ரியாஸும் மௌனமாக கேட்டுக் கொண்டிருக்க, ஒரு



18

வித தீர்மானத் துடன்தான் பேசி னான்.

"முதன் முதல் நான் கவனித்தது அந்த போட்டோக்களை. ஆனந்த் ஐதராபாத் போயி ருந்தார். திரும்ப வர்றப்ப, அங்கிருந்து முத்து மாலை வாங்கிட்டு வந்தார். ஏது இவ் வளவு பணம்னு கேட்கத் தோணிச்சு. கேட்கலை. சந்தோ ஷத்தில் கேக்கலை. கேட்டிருக் கணும். மாதா மாதம் சம்பளம் பத் தாது. இருபத்தைந்தாம் தேதி கடன் வாங்க வேண்டி வரும். திடீர்னு முத்து மாலையா? அதை அவர் என் கழுத்தில் அணிவித்தபோது சொன்னார்,

'முதல்ல இவளுக்கு எதுக்கு முத்து? பற் களே போதுமேன்'னு யோசிச்சேன். அப்

புறம் போனாப் போவுது, கஷ்டப்பட்டு புள்ளை பெறப் போறா. கேவலம் ஒரு முத்து மாலையாவது போடலாம்னு... ஒரிஜினல் இது. கல்ச்சர் இல்லை!' என்றார்.

'மஸ்ட்பி எக்ஸ்பென்ஸிவ்!' என்றேன்.

ஆனந்த் 'நத்திங் இஸ் எக்ஸ்பென்ஸிவ் ஃபார் யுவர் ஸ்மைல். உலகத்தையே எழுதிக் கொடுக்கலாம்' என்றார்.

உடனே வெளியே புறப்படத் தயாராக இருந்தார். எங்க போறார், யாரைப் பார்க்கறார்... எதுவும் சொல்ல மாட்டார்.

போட்டோக்களை பற்றிக் கேட்டேன்.

'ஆனந்த் இந்த போட்டோக்கள்லாம் உங்க ஸூட்கேஸ்ல இருந்தது. எப்பலிருந்து உங்களுக்கு பப்ளிக் பில்டிங்கஸ்லாம் எடுக்கறதில ஆர்வம் ஆனந்த்? இதெல்லாம் எதுக்கு எடுத்திங்க ஆனந்த்?'

எல்லாம் ஐதராபாத்திலுள்ள பிரதான கட்டடங்கள்.

ஆனந்த், 'ஆபீசுக்கு டயம் ஆச்சு. சாயங்காலம் பார்க்கலாம் என்ன? பை!' என்று மழுப்பினார்.

அப்பக் கூட எனக்கு விபரீதமா சந்தேகம் வரலை. எனக்குப் பயமாகவே இருந்தது. உலகத்தில இத்தனை சந்தோஷம் ஒருத்தருக்கு வரக் கூடாது. என்னைப் போல அதிர்ஷ்டசாலி உண்டா? கண்நிறைஞ்ச கணவன், சொத்து, சுகம், வீடு, வரப்போற குழந்தை... பேரு புகழ்....

ஆனந்த், 'மெல்லப் பேசு. கடவுளுக்கு எங்கயாவது கேட்டுரப் போவுது. பொறாமையாய்டுவார்' என்றார்.

'ஆனந்த் நம்ம சந்தோஷம் உண்மையானதுதானே! அதில எதும் குற்றம் கலக்கலைதானே'ன்னு திருப்பித் திருப்பிக் கேட்டேன்.

ஆனந்த், 'மனசைப் போட்டு உழப்பிக்காதே. சந்தோஷமா இருக்கப் பழகிக்க. இனிமே நம்ம வாழ்வே சாக்லேட் தடவின வானவில்தான்.'

'சாக்லேட் இல்லை' விஷம்ங்கறது அப்புறம் தெரிஞ்சுது. அடிக்கடி போன் கால் வரும். எடுத்து ஹலோ சொல்வதற்குள் கட்டாயிடும். இந்த மாதிரி அடிக்கடி போன் வரது, என் குரல் கேட்டதும் கட் ஆயிடறது, யாரும் பேசறதில்லைன்னு சொன்னப்ப, ஆனந்த் முகம் மாறிச்சு. போன் டிபார்ட்மெண்ட்ல புகார் கொடுக்கறேன்னார். கொடுக்கலை.

நான் இருக்கறப்ப போன் மறுபடி ஒலிச்சா ஆனந்த் அவசரமாக மாடில இருந்து தாவி இறங்கி, 'பாரதி நான் எடுக்கறேன் இரு'ன்னு போனைப் பிடுங்கிக் கொள்வார். 'சுருக்கமாப் பேசறேன், ஆமா... நம்பர் ஃபோர்தான் பேசறேன். வேலை நடந்துக்கிட்டு இருக்கு. ராத்திரி எட்டுக்கு காண்டாக்ட் பண்றேன்.' இப்படியெல்லாம் பேசுவார்.

என்ன வேலைன்னா, 'ஒண்ணுமில்லை!'

இந்த 'ஒண்ணுமில்லை'யை அடிக்கடி கேட்க ஆரம்பித்தேன்!"

ரியாஸ் இடம் மாறிக் கொண்டார். அவர் முகம் மிகவும் தீவிரமாக இருந்தது. மேசை மேல் காப்பி கோப்பைகள் காலியாயின.

"அன்றிலிருந்து ஆனந்த் லாப்பில் மிக அதிக நேரம் செலவழிக்க ஆரம்பித்தார். உள்ளே என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை என்னால் அறிய முடியவில்லை. நான் உள்ளே சென்றால் செய்யும் காரியத்தை உடனே நிறுத்தி விடுவார். நான் அறையை விட்டுப் போகும் வரை காத்திருப்பார். குறுக்கீட்டை அவர் விரும்பவே இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. நானும் பெரிய ஆராய்ச்சியின் போது இவ்வாறான குறுக்கீடுகளை அவர்கள் சகிக்க மாட்டார்கள் என்று எண்ணிக் கொண்டு சும்மா இருந்து விட்டேன்.

சாப்பிடுவதற்கு மறந்தாலும் மறப்பார். ஆனால் இரவு எட்டு மணி சுமாருக்கு



"என்னது! மூணு நாளா பைத்தியமா இருந்தீங்களா!"

"ஆமாம் டாக்டர்!"

"உங்களை, பத்தியமா இருங்கன்னு தானே சொல்லி அனுப்பினேன்!"

- பர்வதவர்த்தினி

டீக்காக உடை உடுத்து. கொஞ்ச நேரம் வெளியே போய் வருகிறேன் என்று தினம் தவறாமல் சென்று வந்தார்.

எங்கே போகிறீர்கள் என்று கேட்டால், சும்மா காற்று வாங்க' என்பார். காற்று வாங்க எதற்கு அத்தனை உத்தமமாக உடையணிந்து செல்ல வேண்டும் என்று கேட்கத் தோன்றும். கேட்கவில்லை.

ஒருநாள் கோவிலுக்குச் சென்று திரும்பும் போது, ஆனந்த் எஸ்.டி.டி. பூத்திலிருந்து யாருக்கோ போன் பண்ணிக் கொண்டிருந்தார். வீட்டில் போன் இருக்கும் போது எதற்கு எஸ்.டி.டி. பூத்துக்கு வர வேண்டும் என்று எனக்குச் சந்தேகம் வந்தது. அங்கே விசாரித்ததில், அவர் தினம் இந்த வேளைக்கு வருகிறார். ஓவர்ஸீஸ் கால் ஒன்று தவறாமல் செய்கிறார் என்று எஸ்.டி.டி. பூத் ஆபரேட்டர் சொன்னார். நேராக வீட்டுக்கு வந்தேன். ஆனந்தின் 'லா'புக்கு வந்தேன். மேசையில் இருந்த காகிதங்களில் ஒரு ஃபைல் பார்த்தேன். சோமு!"

"**லா**பை பார்க்கலாமா?" என்றார் ரியாஸ்.

"வாங்க அழைச்கட்டுப் போறேன்."

லாபில் பலவிதமான சாதனங்கள். ஒரு கம்ப்யூட்டர் டெர்மினல், ஒரு வொர்க் பெஞ்ச், ஒரு சிறிய லேத், பெரிய கண்ணாடி ஜீசாக்களில் பலவிதமான ஆர்கானிக் திரவங்கள் இருந்தன.

Warning Explosive என்று எழுதிய பாட்டில்கள் இருந்தன. சுவரில் கரும்பலகையில் சிக்கலான கணக்குகள் எழுதியிருந்தன. அதில் ஒரு மிஸைலின் வடிவம் வரைந்து, அதன் Trajectory கோடிடப்பட்டு அது விழப் போகும் இடத்தில் ஒரு பெரிய வெடிப்பு ஏற்படுவது போல் படம் வரைந்திருந்தது.

அலமாரியில் பல ஃபைல்கள்.

அதில் ஒன்றை பாரதி எடுத்தாள்.

"இந்த மாதிரி நிறைய பைல் பார்த்தேன்!"

அதில் Project Somu First Phase Implementation Plan என்று எழுதி, அதன் மேல் 'டாப் சீக்ரெட்' என்று எழுதியிருந்தது.

"நான் அதைப் பிரிச்சுப் பார்க்கறப்ப சற்றும் எதிர்பாராம பின்னால் ஆனந்த் வந்துட்டாரு. எனக்கு தூக்கிவாரிப் போட்டது. காரணம் ஆனந்த் முகம் கடுப்பாயிருச்சு. இங்க என்ன வேலை உனக்கு என்று அதட்டினார்.

'ஆனந்த் 'சோமு'ங்கறது என்ன?'

'உனக்கு எதுக்கு?'

'இல்லை ஆனந்த். எனக்குத் தெரிஞ்சாகணும்'னேன்.

'சொன்னா உனக்குப் புரியாது.'

'ஆனந்த் எனக்குப் புரியறது எல்லாம் தப்புன்னுதான் நினைக்க விரும்பறேன். யாரோ போன் பண்றாங்க. யாருக்கோ நீங்க வீட்டுக்கு வெளியே போய் போன் பண்றீங்க. அதெல்லாம் என்ன ஆனந்த்'னு கேட்டப்ப, 'சொல்லிருவேன். நீ அதிர்ச்சி ஆய்டுவே'ன்னாரு. எப்படிப்பட்ட அதிர்ச்சி!".

(தொடரும்)

அழகுக்கு அழகு சேர்க்கும் ருமிகோ!



உலக அளவில் பிரபலமான ஃபாஷன் பத்திரிகைகளின் அட்டைப் படங்களை அலங்கரிக்கும் முன்னணி மாடல் அழகிகளின் அழகு ரகசியம் தெரியுமா உங்களுக்கு? அதுதான் ருமிகோ! நியூயார்க்கில் செட்டிலாகிவிட்ட இந்த ஜப்பானியப் பெண்மணியின் மேக் அப்பில்தான் உலகின் முன்னணி மாடல்களெல்லாம் அழகு தேவதைகளாக ஜொலிக்கிறார்கள்.

தமது தாய்நாட்டில் அழகுக் கலைப் படிப்பை முடித்து விட்டு நியூயார்க் வந்த ருமிகோ, முதலில் ஒரு முன்னணி மேக்கப் கலைஞரிடம் உதவியாளராகத்தான் சேர்ந்தார். சரளமாக ஆங்கிலம் பேச வராமல் முதலில் ரொம்பவே சிரமப்பட்டார். கூடவே கடும் உழைப்பு. இதனால் அடிக்கடி அல்சர் நோய் வந்து அவதிப்படுத்தியது. எனினும் அவர் மனம் தளரவில்லை. தூங்குகிற நேரத்தைக் குறைத்துக் கொண்டு உழைத்தார். விளைவு? இன்று உலகின் முன்னணி மேக்அப் கலைஞர்களில் ஒருவர்! ஜப்பானில் இவரது பெயரிலேயே விற்கும் அழகு சாதனப் பொருள்களுக்கு ஜப்பானியப் பெண்களிடம் ஏக கிராக்கி!


நாமிருக்கும்

நாடு

சத்தியப்பிரியன்

பனி முற்றிலும் விலகியிருந்தது. டிசம்பர் மாதம் எட்டு மணிக்கு மேல்தான் டெல்லியில் சூரியன் சோம்பல் முறிக்கும். பார்கவி ரஜாயை விலக்கிக் கொண்டு எழுந்திருக்கிறாள். மிஸஸ் குல்கர்னியைக் காணவில்லை. முழுமூச்சுடன் சமையல் அறையில் சமையல்காரர் தேவ்சந்தை விரட்டிக் கொண்டிருப்பாள். ஒரு ராணுவ மேஜரின் மனைவி என்பதை எல்லாச் செயல்களிலும் பிரதிபலிக்கச் செய்து கொண்டே இருக்க வேண்டும். மேடம் ரேணுகா குல்கர்னி, ஒரு ராணுவ அதிகாரியின் மனைவி.

நான் யார்?

பார்கவி கடந்த ஐந்து வருடங்களாக அவளை விரட்டிக் கொண்டிருக்கும் கேள்வியுடன் எழுந்தாள்.

மிஸஸ் பார்கவி பாலசந்திரன்.

எங்கோ தேய்ந்து போன சுருதியின் பிசிறு காதில் ஒலிக்கிறது.

இந்த முறை டெல்லி கிளம்பும் பொழுது நவீன் அழாதகுறையாக சொல்லி அனுப்பி இருக்கிறான்.

"அம்மா! இனிமே நீ டெல்லிக்கு அப்பாவைப் பத்தி விசாரிக்கன்னு போக வேண்டாம். அப்பா வரலேன்னாக் கூடப் பரவாயில்ல. ஒரு மாசம், ரெண்டு மாசம்னு குல்கர்னி அங்கிள் வீட்டில் தங்கிட்டு வர்றதை விட்டுடும்மா. அப்பாவோட சேர்ந்து வாழும் பிராப்தம் நமக்கு இருந்தாக் கண்டிப்பா அவர் வருவார். நீயும் இல்லாத நாட்களில் I feel insecured mummy!" இந்த ஐந்து வருஷங்களில் ஏற்பட்ட நிகழ்வுகள் பன்னிரெண்டு வயது பருவத்திற்கு மீறிய சிந்தனையையும், பேச்சையும் கொடுத்திருக்கிறது.

"இது என் கடைசி முயற்சி நவீன். அப்பாவுடன் நிச்சயம் திரும்புவேன்!" என்று அனுமதி வாங்கிக் கொண்டுதான் ரயில் ஏறினாள்.

"நீ எங்கிருக்கிறாய் பாலா?"

"உட்டால் பார்கவி. பத்து மணிக்கு டிஃபென்ஸ் மினிஸ்டரிக்குப் போகணும்னு சொல்லிட்டு எட்டு மணி வரைக்கும் படுத்துக்கிட்டு இருந்தா க்யா மதலப் ஹை? ஜல்தி ஜாயங்கே! ஜல்தி. நேத்து பார்லிமென்டரி ஸெஷன் முடிய நைட்டு எட்டு மணி ஆயிடுச்சாம். கிளம்பு!" - மிஸஸ் குல்கர்னியின் விரட்டல் தொனி மாறாது.

பார்கவி குளித்து, டிபன் சாப்பிட்டு விட்டு தலைமைச் செயலகத்திற்குக் கிளம்புவதற்கு ஆயத்தமானாள்.

ராணுவ அமைச்சகத்தின் செயலகம் ஓர் அதிகாரவர்க்கத்தின் அனைத்து கெடுபிடிகளுடன் இயங்கிக் கொண்டிருந்தது. காணும் இடந்தோறும் ராணுவ அதிகாரிகள். பழக்கப்பட்ட அதிகாரிகள் பார்கவியைப் பார்த்ததும் ஒரு பரிச்சய சல்யூட் அடித்தார்கள். அது பார்கவிக்கு அடிக்கப்பட்ட சல்யூட் அல்ல. கர்னல் பாலசந்திரனுக்கு அடிக்கப்பட்ட சல்யூட்.

ஒவ்வொரு பிரிவின் வாசல்களில் முழுமையான செக்யூரிட்டி செக்-அப் நடைபெற்றது.

பார்கவி ராணுவச் செயலகத்தின் அந்தக் குறிப்பிட்ட பகுதிக்குள் பிரவேசித்தாள். தள்ளு கதவிற்குள் தனியறையில் வரலாற்றுத் தகவல் கவனிக்கும் கூடுதல் செயலர். வெளியில் தனி மேசை, நாற்காலியுடன் சாக்ஸேனா. செயலரின் அந்தரங்கக் காரியதரிசி. மேஜர் குல்கர்னிக்கு மிகவும் தெரிந்தவர்.

"உட்காருங்க மிஸஸ் பார்கவி."

"வெறும் பார்கவி மட்டும்தானா? பாலசந்திரன் இல்லையா?" கேட்டபடி எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

வெற்றுப் புன்னகை ஒன்றுதான் சாக்ஸேனாவிடமிருந்து வந்தது. என்னால் என்ன செய்ய இயலும் என்ற கேள்விப் புன்னகை.

"நீங்கள் வந்த நோக்கம் தெரிந்து கொள்ளலாமா?"

"டிஃபென்ஸ் மினிஸ்டருடன் எனக்கு ஒரு நேரடி அப்பாயின்ட்மென்ட் கிடைத்

துள்ளது. பல மனுக்களுக்குப் பிறகு, எனது பல அலைக்கழிப்புகளுக்குப் பிறகு கிடைத்துள்ள வாய்ப்பு. இது எனது கடைசி ஆயுதம். கிளைகளும், இலைகளும் உதிர்ந்த நிலையில் ஒரு சிறிய துளிராவது முளைக்காதா என ஏங்கும் ஆணிவேரின் ஆதங்கம். கடைசி முயற்சி. உங்கள் ராணுவ அமைப்புகளுடன் முட்டி, மோதி எவ்வித எதிர்பார்ப்பும் இல்லா நிலையில் எடுக்கப்படும் முயற்சி. உங்கள் வரலாற்றுத் தகவல் பிரிவிலிருந்து என் கணவர் கர்னல் பாலசந்திரனைப் பற்றிய முழுமையான டிராஃப்ட் ஒன்றை மத்திய ராணுவ மந்திரி கேட்கிறார். இன்று மதியத்திற்குள் வேண்டும்.''

பார்கவி தனது கைப்பையிலிருந்து ராணுவ அமைச்சகத்தின் தலைமைச் செயலரிடமிருந்து கொடுத்திருந்த உத்தரவுப் படிவத்தை எடுத்து நீட்டினாள்.

"வெல்! இரண்டு மணி நேரத்திற்குள் என்னால் இயன்ற அளவு ஒரு டிராஃப்ட் வரைந்து தருகிறேன். வெயிட் பண்ணுங்கள்.''

பார்கவி வெளியில் காரிடாரில் காத்திருந்தாள்.

சாக்ஸேனா என்ற இவனது சரித்திரத்தை வரையறிக்கை தயாரிப்பில் அவள் நெஞ்சில் பதிந்து கிடக்கிறதே. ஜும்மா மஸ்ஜித்தில் புறாக்களுக்கு நடுவில் முதன் முதலாகப் பார்த்ததிலிருந்து, கர்னல் பதவி உயர்வு கிடைத்த அன்று அறைக் கதவை மூடிவிட்டு அவளை மார்பு வரை தூக்கி ஒரு சுழற்றுச் சுழற்றிய வரை எது பறந்து போகும்?

இருபத்திரண்டு வயதில் என்ஜினியரிங் முடித்து விட்டு, இந்திய ராணுவ தரைப் படைப் பிரிவில் இரண்டாவது லெப்டினன்டாக வேலைக்குச் சேர்ந்தான். அவனே ராணுவத்தில் சேர்ந்ததற்குக் காரணமும் சொன்னான்.

''இறுக்கமான நெறி தவறாத இழைகளால் முறுக்கப்பட்ட இளைஞர்களுக்கு ராணுவம் ஓர் அருமையான எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது. துணிச்சலும், வீரமும், வேட்கையும் நிரம்பிய இளம் இந்தியர்களுக்கு ராணுவம் மிகச் சிறந்த களம் அமைத்துக் கொடுக்கிறது. எனது வேட்கையின் தீவிரம் குறையாத வரையில் ஜெனரல் என்ற எனது இலக்கை அடையும் நாள் அதிக தூரத்தில் இல்லை.''

அவன் கண்களில் பிழம்பாய் எரிந்த நெருப்பைத்தான் அவள் காதலித்தாள். தீக்குள் விரலை விட்டால் நந்தலாலா! இப்பொழுது அந்த நெருப்பு வடகிழக்கு எல்லைப் பகுதிகளின் காட்டில் எங்கோ எரிந்து கொண்டிருக்கிறது.

அவனது ராணுவ நடவடிக்கைகள் எதுவும் அவளுக்கு முதலில் தெரியாது. சொல்ல மாட்டான். ரகசியம். தேச ரகசியம். நவீனை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். வர்ஷாவை அழ விடாதே. பதினைந்து நாள் காம்ப் இருக்கும் போலிருக்கிறது. எங்கே என்பது ரெஜிமெண்டுக்குப் போனால்தான் தெரியும். போய் விடுவான். நடுவில் ஃபோன் வரும். நவீன்தான் எடுப்பான். அப்பாவும், பிள்ளையும் மணிக்கணக்கில் பேசிக் கொள்வார்கள். நவீனுக்குத்தான் அவன் தந்தை ஒரு கர்னல் என்பதில் எவ்வளவு பெருமை!

ஆபரேஷன் விக்ரம் பார்ட்-ஒன் முடித்து விட்டு வந்த பிறகுதான் பார்கவிக்கு விஷயம் தெரியவந்தது.

''வடகிழக்குக் காடுகளில், அஸாமிலிருந்து பல நூறு கிலோ மீட்டர் அவர்களது ராஜ்யம் பரவிக் கிடக்கிறது பார்கவி. மண்ணின் மைந்தர்கள் என முழக்கமிடும் தீவிரவாதிகள். உரிமைகள் பறிக்கப்பட்ட



''என் மனைவியோட லொள்ளு தாங்க முடியல!''

''என்ன விசயம்?''

''மசக்கை சமயத்துல அவ சாம்பல் தின்றப்ப என்னையும் கம்பெனி குடுக்கச் சொல்றா!''

– அம்பை தேவா

தால் போராடுவதாகச் சொல்கிறார்கள். இந்தியா துண்டாடப்பட வேண்டும் என்பதற்காக அண்டை நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு இந்தத் தீவிரவாதிகளை வளர்த்து வருகின்றன. எவ்வளவு ஆயுதங்கள். யூசி ஸப்மெஷின் துப்பாக்கிகளுடன் அவர்களது கட்டுக்கோப்பான பயிற்சியைப் பார்க்க வேண்டும். புரையோடும் வரை தீவிரவாதிகளை வளர விட்டுத் தூர்த்து எறியும் பணிக்கு ஒரு பாட்டாலியனை வழி நடத்திச் செல்ல அனுப்பி உள்ளார்கள். ஒரே ஒரு கிராமத்தை மட்டும்தான் எங்களால் கைப்பற்ற முடிந்தது."

அவன் உற்சாகமாக விவரித்துக் கொண்டே போனான்.

பார்கவி அவனது அகன்ற மார்பில் முகம் புதைத்து அழுதாள்.

"ஒரு கர்னலின் மனைவி அழக் கூடாது."

"நீங்க என் புருஷன்."

"நான் என்னை இந்த நாட்டிற்கு அர்ப்பணம் செய்து கொண்டவன் என்பதை மறந்து விடாதே பார்கவி." பாலசந்திரன் ஞாபகப்படுத்தினான்.

பார்கவி மறக்கவில்லை. எனவேதான் ஆபரேஷன் விக்ரம் இரண்டாவது பகுதிக்காக அவன் சென்ற பொழுது அவளால் சிரித்துக் கொண்டு வழியனுப்ப முடிந்தது. அவள் சிரித்தபடி வழியனுப்பியதால் தானோ என்னவோ கர்னல் பாலசந்திரன் இம்முறை போனவன் திரும்பி வரவில்லை.

ஆபரேஷன் விக்ரம் இரண்டு வெற்றிகரமாக முடிந்து உயிர் பிழைத்த அதிகாரிகளும், வீரர்களும் தலைமை ரெஜிமென்டுக்கு வந்த செய்தியை பத்திரிகை மூலம் தெரிந்து கொண்ட பின்புதான் மிலிட்டரி ஹெட்-க்வார்ட்டர்ஸுக்கு ஓடினாள். லெப்டினன்ட் ஜெனரல் அலுவலகத்தில், அதிகாரிகள் தகவல் சொன்னார்கள். முகாமுக்குத் திரும்பியவர்களில் கர்னல் பாலசந்திரன் இல்லை. இறந்த வீரர்களிலும் அவன் இல்லை.

"என்னை அந்த மலைப்பகுதிக்குக் கூட்டிட்டுப் போங்க. நான் அங்குலம் அங்குலமாய் ஊர்ந்து போயாவது என் கணவனைத் தேடுகிறேன். எனக்கு என் புருஷன் வேணும்!" சுவரில் ஓங்கி ஓங்கி அறைந்தபடி அழுதாள். அலறினாள். ஆவேசம் வந்தவள் போல் அலைந்தாள்.

"இது திரைப்படங்களில் வருவது மாதிரி எளிய விஷயமில்லையம்மா. ஸர்ச் ஆபரேஷன்களில் பெண்களை உடன் கொண்டு செல்ல முடியாது. தேடத் தொடங்கு

அமரர் கல்கி நினைவு நாள்



சனிக்கிழமை, டிசம்பர் 5, 1998 மாலை 6 மணி. இடம்: ஆஸ்திக சமாஜம், வீனஸ் காலனி, சென்னை - 18

இறை வணக்கம்:

டி.கே.எஸ். கலைவாணன்

எழுத்துலகில் அமரதாரா

-அமரர் கல்கி பற்றி பல்வேறு அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக வானதி பதிப்பகம் தயாரித்துள்ள நூலை வெளியிட்டு தலைமையுரை ஆற்றுபவர்:

ப. சிதம்பரம்

(முன்னாள் மத்திய நிதியமைச்சர்)

அமரர் கல்கி நூற்றாண்டையொட்டி அவர் உருவாக்கிய பத்திரிகையாளர்களான

சாவி, எஸ்.வி.எஸ்., பகீரதன் பி.எஸ்.மணி

ஆகியோர் கௌரவிக்கப்படுகிறார்கள்

7.00 மணி: பஜனை சம்பிரதாயம்

பிரமீளா குருமூர்த்தி வழங்கும் விளக்கவுரை.

7.15 மணி: பஜனை பாடல்கள் நிகழ்ச்சி பங்கேற்போர்: பிரமீளா குருமூர்த்தி, செதலப்பதி ஆர்.பாலசுப்ரமண்யம்,குரவி லலிதா,கே.கே.ஏ. தீபரேகா, நீலா ஜெயகுமார் (வயலின்), ஜெயகுமார் (மிருதங்கம்)

கல்கி ரசிகர்களும் வாசகர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்புச் செய்ய அன்புடன் அழைக்கிறோம்.

— கல்கி கிருஷ்ணமூர்த்தி நூற்றாண்டு விழா குழு.
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை.

கிறோம். கிடைக்க வேண்டும் என பிரார்த்தனை செய்து கொள்!" - லெப்டினன்ட் ஜெனரல் சமாதானம் சொன்னார்.

பாராளுமன்றமும் இதே சமாதானத்தைச் சொன்னது. ஐந்து வருடங்களில் இரண்டு முறை அமைச்சரவை மாறினும், டிஃபன்ஸ் மினிஸ்டரி கர்னல் பாலசந்திரனைத் தேடும் பணியைக் கைவிட்டு விடவில்லை என கேள்வி நேரத்தின் பொழுது நான்கு முறை உறுதி அளித்து விட்டது.

"மிஸஸ் பார்கவி!" - சாக்ஸேனா காரிடாருக்கு வந்து விட்டார். கைகளில் பழுப்பு நிற உறை.

"உங்கள் கணவர் பற்றிய டிராஃப்ட்."

"நன்றி."

வாங்கிக் கொண்டு டிஃபென்ஸ் மினிஸ்டரிக்கு விரைந்தாள். மீண்டும் செக்யூரிடி செக்-அப். ராணுவ அதிகாரிகளின் பரிச்சயப் புன்னகை. மந்திரியின் பி.ஏ. காத்திருக்கச் சொன்னார்.

சிறிது நேரத்தில் மந்திரி அறையிலிருந்து ஒரு அதிகாரி வெளியேறினார். பி.ஏ. உள்ளே போனார். சிறிது நேரத்தில் வெளியில் வந்து, "மிஸஸ் பார்கவி. மந்திரியை நீங்கள் இப்பொழுது சந்திக்கலாம்."

பார்கவி உள்ளே நுழைந்தாள்.

மிகப் பெரிய அறை. முழுவதும் ஏ.ஸி. செய்யப்பட்டிருந்த நவீனமான அறை. நீளமான மேஜை. தொலைபேசி இணைப்புகள். சுவரில் வரிசையாக காந்தி, நேரு, இந்திரா காந்தி ஆகியோரின் ஆளுயரப் படங்கள். இந்தியாவின் ஜியன்ட் சைஸ் வரைபடம்.

ஸஃபாரியில் சிரித்தபடி மந்திரி, "உட்காருங்கள் மிஸஸ் பார்கவி பாலசந்திரன்" என்றார்.

மந்திரியுடன் உனக்குக் கிடைத்துள்ள காலம் வெறும் ஐந்து நிமிடம். இதற்குள் உன்னைப் பற்றி, உன் கணவனைப் பற்றி தெளிவான அபிப்ராயத்தைக் கொடுத்து விடு.

"உங்கள் கணவர் கர்னல் பாலசந்திரன் பற்றிய டிராஃப்டை இப்பொழுதுதான் படித்து முடித்தேன். இராணுவ அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் எல்லாம் தெளிவாக உள்ளன. சற்றேறக்குறைய ஆறு வருடங்களாக இந்தத் தேடல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள். நான் இதில் மேற்கொண்டு என்ன செய்யட்டும்?"

மந்திரியின் ஹிந்தியில் பிஹார் வாடையைத் தவிர்க்க முடியவில்லை.

"அவர் ஒரு கர்னல்; ஓர் இராணுவ அதிகாரி; பாரத மாதாவின் புண்ணிய மைந்தன் என்பதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். அவர் என் கணவர். இந்திய மண்ணில் பெண்களுக்குக் கணவனை விட்டால் யாருமில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. அவர் என் உயிர் எனச் சொல்வது மிகையாகாது. ஆத்ம நேசம் என்பார்கள். எனக்கும், அவருக்கும் இடையில் அதுதான் இருந்து வந்தது. எனக்கு இது சாதாரண இழப்பு இல்லை. எனக்கு நல்லதொரு பதில் கொடுங்கள். உங்கள் இராணுவ அதிகாரிகள் அவரைத் தேடுவதில் அக்கறை இழந்து விட்டதாகவே தெரிகிறது. தனிப்பட்ட முறையில் ஸ்க்வாட் அனுப்புவதை விடுத்து, வேறு பணிகளுடன் இவரைத் தேடுவதையும் ஒரு பணியாகக் கொடுக்கப்படுகிறது. அவர் இறந்து போய் விட்டதாகவும் உங்களால் டிக்ளேர் பண்ண முடியாது. அவர் இறக்கவில்லை. என் உள் மனத்திற்குத் தெரியும். தேட முடியவில்லை என்று ஒரு ஓபன்-ஸ்டேட்மென்ட் கொடுங்கள். உங்கள் கையாலாகாத்தனம் நாட்டிற்குத் தெரியட்டும்."

"மிஸஸ் பார்கவி?"

"ஆமாம். மீண்டும், மீண்டும் அதைத்தான் சொல்லுவேன். என் மூத்த பையன் - 12 வயது ஆகிறது - கேட்கிறான். அப்பா வரவே மாட்டாராம்மா? என்று. என் பெண்ணிற்கு ஐந்து வயது. அவளுக்கு விவரம் தெரிய வரும்பொழுது எழும் கேள்விகளையும், ஏக்கங்களையும் யார் போக்குவார்கள்? நான் யாரிடம் முறையிடுவேன்? ஆண்டவனிடமா? இல்லை அரசிடமா? அரசின் மீது எனது நம்பிக்கை குறைந்து வருகிறது. சொல்லுங்கள்."

"உங்கள் ஆதங்கம் புரிகிறது மிஸஸ் பார்கவி. இது ஆதங்கம் கூட இல்லை. வயிற்றெரிச்சல். யாருக்கும் நிகழக்கூடாத கொடுமை. தீவிரவாதிகள் உங்கள் கணவரை பிணைக் கைதியாக வைத்திருக்கவில்லை. ஆபரேஷனில் உங்கள் கணவர் இறக்கவுமில்லை. எங்கு தவறு நிகழ்ந்தது என்பது புரியாத விஷயமாகவே உள்ளது. விடையில்லாத புதிர். அரசாங்கமோ, ராணுவமோ வாளாவிருக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். தனிப்பட்ட முறையில் ஸ்க்வாட் அனுப்புவதை தாற்காலிகமாகத் தான் நிறுத்தி வைத்துள்ளோம். தேடும் பணியை நிறுத்தி விடவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பை த பை தற்சமயம்



டெல்லியில்தானே வசிக்கிறீர்கள்?"

"இல்லை! சென்னையில். என் பிறந்த வீட்டில்."

"குழந்தைகள் அங்கேயே படிக்கிறார்களா?"

"ஆமாம்."

"அரசின் சலுகைகளை ஏற்றுக் கொள்ளுங்கள் மிஸஸ் பார்கவி. அதில் தவறு கிடையாது. நீங்கள் கொடுக்கப் போகும் உத்திரவாதத்திற்குப் பதிலாக அரசு உங்களுக்குச் சலுகை அளிக்கக் காத்திருக்கிறது. கணிசமான தொகை ஒன்று நஷ்டஈடாக வழங்கப்படும். அரசு நிறுவனம் ஒன்றில் உங்கள் கல்வித் தகுதிக்கு ஏற்ற மாதிரி நல்ல சம்பளத்தில் ஒரு வேலை வாய்ப்புத் தருகிறோம். உங்கள் குழந்தைகளுக்கு நல்ல பள்ளிகளில் கல்வி அளிக்கிறோம். ஒரே ஒரு உத்தரவாதம்."

"என்ன உத்தரவாதம்?"

மந்திரி தன் வாயால் சொல்லவில்லை.

"என்ன உத்தரவாதம்?" பார்கவி சிறத் தொடங்கினாள்.

"உங்கள் இயலாமைக்கும், கையாலாகாதனத்துக்கும் நான் உத்தரவாதம் அளிக்க வேண்டும். இல்லையா? என் புருஷன் செத்துப் போய் விட்டார் என்ற உத்தரவாதம். பூவையும், பொட்டையும், தாலியையும் கழற்றி எறிந்து விட்டு, வருவார், வருவார் எனக் காத்திருக்கும் என் நம்பிக்கையைக் குழி வெட்டி புதைத்து விட்டு உத்தரவாதம் அளிக்க வேண்டும். சபாஷ் மந்திரி ஜி! ஒரு கர்னலுக்குக் காட்டப்படும் அக்கறையே இப்படி என்றால் சாதாரண பிரஜைகள்? பாவம் மந்திரி அவர்களே! போதும்! என் முறையீட்டை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். எனக்கு ஆண்டவன் இருக்கிறான். நன்றி மந்திரி ஜி! சுக்ரியா."

"ஏக் மினிட் மிஸஸ் பார்கவி."

நின்றாள்.

"தோ தின் அங்காஷ் தே தா ஹூ. யோசித்து முடிவெடுங்கள்."

இரண்டு நாள் அவகாசம் தருகிறார்களாம், கண்ணை விற்று சித்திரம் வாங்க. இடியட்ஸ்.

வேறு ஒன்றும் சொல்லாமல் லோதி காலனிக்குத் திரும்பினாள். வழியில் இந்தியா கேட்டின் புறாக்கள் அவள் ஞாபகங்களுடன் பறந்து கொண்டிருந்தன. டெல்லியில் எந்த இடம்தான் அவளை ஞாபகப்படுத்தாது?

(அடுத்த இதழில் முடியும்)

● **ஜெ. கண்ணன், சென்னை - 101.**

? **விளம்பரங்களின் குறுக்கீடு இல்லாமல் தொலைக்காட்சியில் கிரிக்கெட் போட்டிகளைக் கண்டுகளிக்க வேண்டும் என்பது என் நீண்ட நாள் ஆசை. என் வாழ்நாளில் இந்த ஆசை நிறைவேறுமா?...**

! கிரிக்கெட் ஒளிபரப்பு உரிமைகள் பெற ஏகப்பட்ட ராயல்டி தருகிறது தூர்தர்ஷன். எனவே விளம்பரங்கள் இடம்பெறுவதில் தவறில்லை. ஆனால் ஆட்டத்தினிடையே விளம்பரம் என்றில்லாமல் விளம்பரங்களிடையே ஆட்டம் என்ற நிலை உருவாகும்போதுதான் எரிச்சல் பற்றிக் கொண்டு வருகிறது. ஷார்ஜா இறுதிப் போட்டியில் டெண்டுல்கர் - கங்குலியின் அபார ஆட்டத்தைக் கூடப் பார்க்கப் பிடிக்காமல் எழுந்து போய்விடும் நிலை தோன்றுகிறது.

• பகல் கனவல்ல...



• அடுத்த நூற்றாண்டு



● **ஏ. காதர், நாகூர்.**

? **'நாங்கள் ராமனைப் பற்றி பேசுபவர்கள். கருணாநிதி ராவணனைப் பற்றிப் பேசுபவர். எங்களுக்குள் எப்படி உடன்பாடு வரும்?' என்று ரங்கராஜன் குமாரமங்கலம் கேள்வி எழுப்பியுள்ளாரே?**

! ஆக, 'ராமனிடம் இருந்த ஓரிரு குறைகளையும் ஒதுக்கி நல்வழியில் செல்வோம்; ராவணனிடம் இருந்த சிறப்பு இயல்புகளை மட்டுமே ஏற்றுக் கொண்டு உயர்வோம்' என்று பேச எந்தத் தலைவருக்கும் 'தில்' இல்லை. ஹூம்! அப்படியெல்லாம் வாழ்ந்து காட்டிய தலைவர்களை எண்ணி நாம் பெருமூச்சு விடுவதுடன் சரி...

● **ஆ. தமிழ்துரைசாமி, பாலசமுத்திரம்.**

? **கி.பி. 2001-இல் தமிழகத்தில் ம.தி.மு.க. ஆட்சி என்னும் இலக்கை நோக்கி நடைபோடுகிறோம் என வை.கோ. பேசியிருப்பது பற்றி...?**

! ஆளாளுக்கு 2001-ஐப் பிடித்து உலுக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது என்ன ஆச்சர்யங்களை உள்ளடக்கியிருக்கிறதோ, அக்னி சர்மாவுக்கே வெளிச்சம்!

● **செ. மலர்விழி, மதுரை - 10.** ❐

? **பெண்களுக்குக் கல்வி அளிப்பதன் மூலம் சமூக சீர்திருத்தத்தை அடைய முடியுமா?**

! பெண்களுக்கு மட்டுமென்ன... அனைவருக்கும் தரமான கல்வி என்பதன் மூலம்தான் எல்லாவிதமான சமூக சீர்திருத்தங்களையும் கொண்டுவர முடியும். நாட்டின் பொருளாதாரத்தையும் முன்னேற்ற முடியும். அனைத்துக்கும் அஸ்திவாரம் கல்விதான். அதனால்தான் அதைக் கவனிக்க ஆளில்லை! மக்கள் அறியாமையில் உழலும் போதுதானே அரசியல்வாதிகள் கொழிக்கலாம்!

● **தேனி ராஜதாசன், தேனி.**

? **பா.ஜ.க. அரசின் நிறமையின்மையே விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்று மூப்பனார் கூறியிருப்பது பற்றி?**

! உண்மைதான். ஓர் ஆட்சியில் உப்பைக் கூட பதுக்கி, அதிக விலைக்கு விற்றார்கள் என்றால், அந்த ஆட்சியை என்னவென்று விமர்சிப்பது! நிலையான ஆட்சி தருவோம் என்றார்கள் - தர முடியவில்லை. அதனால் பலருக்குக் குளிர் விட்டுப் போகிறது; விலைவாசி உயர்கிறது.

கருணாநிதி

● **ஏ. எஸ். இராமசாமி, கோவை - 14.**

? **'வெங்காயத்தின் விலை கூடுதலாக இருந்தால், விலை குறைவான ஆப்பிளை வாங்கிச் சாப்பிடுங்கள்' என்று தேர்தல் பிரசாரம் செய்த ராஜஸ்தான் முதல்வர் ஷெகாவத்துடைய பேச்சு குறித்து...?**

! 'ரொட்டி இல்லாவிட்டால் கேக் சாப்பிடட்டுமே' என்று பிரெஞ்சு அரசி பேசியது நினைவுக்கு வருகிறது. தொடர்ந்து பிரெஞ்சுப் புரட்சி வெடித்தது.

● **ப. இராம் முருகன், சென்னை - 81.**

? **'நான் ஒழிந்து அல்ல; தமிழன்' என்கிறாரே**



• விளையாட்டல்ல...!

நடிகர் மணிவண்ணன்?

! நாத்திகராக இருந்தாலொழிய யாரும் ஹிந்து என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படத் தேவை யில்லை. அதே போல் முஸ்லிம், கிறிஸ் துவர் என்றும் பெருமிதத்துடன் சொல்லலாம். ஆனால், அதற்கும் மேல் தமிழன் என்ற உணர்வும் இன்னும் மேலே இந்தியன் என்ற உணர்வும் அனைவருக்கும் தேவை. குடும் பப் பாசத்தில் தொடங்கித்தான் உலக நலன் குறித்த சிந்தனை வரவேண்டும். இவையெல்லாம் இயற்கையாகவே நம்மிடம் உள்ளன. அரசியல் சுயநலம்தான் செயற்கையாக நம்மைப் பிளக்கப் பார்க்கிறது.

● கப்பு வேதையா சித்திரவேலு,
கருப்பம்புலம்.

? ஒருவழியாய் எதிர்நீச்சல் போட்டு



• காரண அதிசயம்!



• அவரும் உதவும்!



• எதிர் நீச்சல்



• வெட்கம் ஏன்...?



• 'ரொட்டி இல்லாவிட்டால்...'



• பகுத்தறிவு...?

த்து விளக்கு ஏற்றலாமா?

ஜெயித்து விட்டாரே காதாடக முந்திரியா!

! ஆமாம்! கௌடாவை எங்கே காணோம்!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? தேரு ஸ்டேடியத்தில் நடிகர் விஜய் திருமணமாமே...?

! விரைவில் அங்கே கட்சி மாநாடுகள், ஜாதிக் கூட்டங்கள், பொது நிகழ்ச்சிகள், திருமணங்கள், காது குத்தல், மஞ்சள் நீராட்டு விழா எல்லாமே நடக்கும். அட்வான்ஸ் புக்கிங் பண்ணினா லொழிய விளையாட்டுப் போட்டிகளுக்கு இடம் கிடைக்காத நிலை வெகு விரைவில் வந்து விடும்.

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? பெரியார் வழியில் நடக்கும் பகுத்தறி வாளர் கருணாநிதி பல விழாக்களில் குத்து விளக்கு ஏற்றுவது சரியா...?

! தவறில்லை. ஆத்திகர் உணர்வை மதிக்காவிட் டாலும் மிதிக்கத் தேவையில்லை. மேலும், குத்து விளக்கு ஏற்றுவது மட்டுமே இறைவழிபாடு ஆகி விடாது. அது அழகான ஆரம்பம். இருள் விலகி ஒளி பரவுவதன் அடையாளம். உதயசூரியன் போல்தான்!

● செ. கார்த்திகேயன், சாத்தூர்.

? 'உலக நாடுகளிடையே இந்தியாவுக்குத் தனி அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்' என்று வாஜ்பாய் பேசியுள் ளாரே...?

! நோக்கம் இருந்தால் போதாது. மார்க்கம் தெரிய வேண்டும். அவலை நினைத்து உரலை இடித்த கதையாக போக்ரன் பரிசோதனை நடத்தினார்கள். Back Fire ஆகிவிட்டது!

● மல்லிகை மன்னன், மதுரை - 17

? தொண்டர்கள் ஆர்வமாக உழைத்தாலே போதும். இந்தியாவே த.மா.காவின் கைக்குள் வந்து விடும் என்று பகல்கனவு காண்கிறாரே மூப்பனார்?

! அது பகல் கனவு அல்ல. தொண்டர்கள் ஆர்வமாக உழைத்தால் நிச்சயம் த.மா.கா. தமிழ கத்தில் முன்னிலும் அதிக இடங்களைப் பெறும். மத்தியில் ஏதோ ஒரு கூட்டணி ஆட்சியே நாளையும் தொடருமானால் தேசிய அளவிலும் த.மா.காவின் செல்வாக்கு கணிசமாக உயரும்.

● கே. ஆர். வெங்கடேஷ், சீர்காழி.

? வர்த்தகர்களும் சில அரசியல் எதிரிகளின் சதியும்தான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என குஷாபாவ் தாக்ரே கூறியுள்ளாரே...?

! இது பரவாயில்லையே, முன்னர் ஆண்ட இ. காங்கிரஸும் பின்னர் வந்த குஜ்ரால் ஆட்சியும் தான் காரணம் என்று கூட சில பி.ஜே.பிகாரர் கள் பேசி வருகிறார்கள்! மக்கள், இவர்களை ஆட்சியில் அமர்த்தியது விலைவாசியைக் கட்டுப்படுத்தவா அல்லது விலைவாசிக்குக் காரணம் சொல்லிக் கொண்டிருக்கவா?!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
செ. மலர்விழி,
56, ST COPP எதிரில்,
ஏழாவது தெரு,
அன்சாரி நகர்,
மதுரை - 625 010.

கடவுள் கற்றுத் தந்தது என்ன?

ஒரே பிரசவத்தில் பிறந்த ஏழு பாப்பாக்கள் நவம்பர் 19 அன்று, முதல் பிறந்த நாளைக் கொண்டாடியிருக்கின்றன. 'குழந்தைகள் பிழைத்தாலும் மூளை வளர்ச்சி பாதிக்கப்படலாம்' என்று கடுமையாக எச்சரித்த மருத்துவ உலகத்தை வியப்பில் ஆழ்த்தி விட்டு, இந்த நான்கு பையன்களும் மூன்று பெண்களும் சராசரி ஆரோக்கியத்துடன் சிரிக்கின்றன. அமெரிக்கப் பெற்றோரான மெகாகி தம்பதி, வீட்டின் வரவேற்பறையில் 'MIRACLES HAPPEN' என்ற வாசகப் பலகை தொங்குகிறது!

ஏழு கைக் குழந்தைகளை ஒருசேர வளர்க்க இந்தத் தம்பதிக்கு ஊரே உதவி செய்கிறது. கார்லைல் நகரத்தின் எழுபது வாலண்டியர்கள் முறை வைத்துக் கொண்டு உணவு தயாரித்து ஊட்டவும் உடை மாற்றவும் உதவுகிறார்கள். பொருள் உதவியும் பல தரப்புகளிலிருந்து வந்த வண்ணம் இருக்கிறது. ஐயோவா மாநிலத்தின் பல முக்கிய வர்த்தக நிறுவனங்கள் சேர்ந்து 5,500 சதுர அடியில் ஒரு வீட்டை வாங்கித் தந்துள்ளன.

"மனம் நன்றியில் நிறைந்திருக்கிறது. ஆனால், இந்த வீட்டைப் பராமரிப்பதே எங்களுக்குக் கஷ்டம்தான்" என்கிறார் பாப்பாக்களின் அப்பா கென்னி. ஒரு கார் விற்பனை நிறுவனத்தில் பில் போடும் குமாஸ்தா வேலை இவருக்கு. எல்லா குழந்தைகளுக்கும் சேர்ந்தாற்போல் ஃப்ளு ஜுரம் வந்த போது ஏகமாக அவஸ்தைப்பட்டிருக்கிறார்கள்.

ஏழு குழந்தைகள் இருந்தாலும் வீடு அமைதியாக இருக்கிறது. ஏழில் ஒரு குழந்தையை அம்மா பாபீ குளிப்பாட்டும் நேரம் மற்ற ஆறும் அமைதியாக விளையாடிக் கொண்டிருக்கின்றன.

எட்டாவதாக ஒரு குரல் ஒலிக்கிறது : "ஷ்! யாரும் சத்தம் போடக் கூடாது. பாப்பா தூங்குது..." - தன் பொம்மைக் குழந்தையைத் தட்டியபடி சொல்வது மெகாகி தம்பதியின் மூத்த பெண் - இரண்டு வயதான மிகைலா!

'Seven from Heaven' என்ற தலைப்பில் தங்கள் அனுபவங்களைப் புத்தகமாக எழுதியிருக்கின்றனர் இந்தத் தம்பதி. அதன் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் மிகவும் உபயோகமாயிருக்கும் என்கின்றனர்!


"ஏழு குழந்தைகளைக் கருவில் சுமப்பது தெரிந்தபோது ரொம்பக் குழப்பமாயிருந்தது..." என்கிறார் பாபீ மெகா. 'கடவுள் எங்களுக்கு என்ன கற்றுத்தர முயன்று கொண்டிருக்கிறார் என்பது புரியவில்லையே...' என என் டைரியில்



ஆதங்கத்துடன் எழுதி வைத்தேன்..."

இறை நம்பிக்கை இந்தக் குடும்பத்துக்குப் பெரிய பலம். நண்பர்கள் அன்பளிப்பாகத் தந்த பெரிய வேனில் வாரம் இருமுறை குடும்பமே சர்ச்சுக்குப் போய் வருகிறது.

நன்றி : **நியூஸ்வீக்**


Kelsey
Kenny Jr.
Joel
Natalie
Nathan

இனி தெருவுக்கு ஒரு கடையிலாவது 'விர்ச்சுவல் கார்டு இங்கு கிடைக்கும்' என்று போர்டு போட்டிருப்பார்கள். அங்கே உங்கள் தேவைக்கேற்றபடி ரூ. 100, 200, 500 என்று விலை கொடுத்து அந்தக் கார்டுகளை வாங்கி உங்கள் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளலாம்.

போகிற வழியில் எந்த டெலிபோனைப் பார்த்தாலும் ஒரு 'எக்ஸ்கியூஸ்மி' சொல்லி, உலகின் எந்த மூலைக்கு வேண்டுமானாலும் டயல் செய்து பேசலாம். உங்கள் விர்ச்சுவல் கார்டில் உள்ள பர்சனல் நம்பரைச் சொன்னால் போதும், நீங்கள் பேசிய தொகைக்கான மதிப்பு உங்கள் கார்டில் குறைந்து விடும். டெலிபோன் சொந்தக்காரருக்கு ஒரு பைசா கூட பில்லில் ஏறாது!

அப்புறம் நீங்கள் பார்க்கும் பொருள்கள் எதையாவது வாங்க விரும்பினால், நீங்களே கடைக்குச் சென்று வாங்க வேண்டும் என்பதில்லை. ஒரு போன் செய்தால் போதும். நீங்கள் செய்கிற அந்த போனுக்கான கட்டணம் உங்கள் பில்லில் ஏறாது. பொருளை விற்கிற கடைக்காரருடைய போன் பில்லில்தான் ஏறும்!

அட, இதெல்லாம் ஒரு பக்கம் கிடக்கட்டுமய்யா! முதலில் எங்களுக்கு ஒரு டெலிபோன் இணைப்பு வேண்டாமா? பணத்தைக் கட்டிவிட்டு எத்தனை வருஷமாகக் காத்திருப்போர் பட்டியலிலேயே காத்துக்கிடப்பது என்கிறீர்களா!

கவலையே வேண்டாம். பக்கத்திலுள்ள ஒரு பொதுத் தொலைபேசி நிலையத்துக்குச் சென்று ஒரு கால் செய்து, 'எனக்கு ஒரு டெலிபோன் கனெக்ஷன் ப்ளீஸ்!' என்று சொல்லுங்கள். சொல்லிவிட்டு, அப்படியே வழியில் தென்படுகிற உங்கள் பழைய நண்பருடன் கொஞ்சம் மலரும் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டுவிட்டு வீட்டுக்கு வாருங்கள்!

"என்னங்க. இத்தனை நேரம் எங்க போய்த் தொலைஞ்சிங்க. நமக்கு டெலிபோன் கனெக்ஷன் குடுக்கறதுக்காக வந்து இவங்க ரொம்ப நேரமாக் காத்துக்கிட்டிருக்காங்க!" என்று உங்கள் வீட்டு அம்மணி சந்தோஷத்தில் அங்கலாய்ப்பார்!

'அட, ரீல் சுத்தறதுக்குக் கூட இந்தியாவுல ஒரு அளவு இருக்கய்யா'ன்னு சொல்றீங்களா! இது ரீல் இல்லீங்க. வரப் போகிற நிஜம். இந்த நிஜத்தை நடத்திக் காட்டப் போறவங்க, 'மகாநகர் டெலிகாம் நிகாம் லிமிடெட் (MTNL)' என்கிற பொதுத் துறை தொலைபேசி நிறுவனம்தான்!

நடந்து கொண்டிருக்கிற சந்தைப் பொருளாதாரத்தில் தொலைத் தொடர்பு என்பது ரொம்பவும் சுலபமாக இருக்க வேண்டும். கேட்டதும் டெலிபோன் இணைப்புக் கிடைக்க வேண்டும் என்கிற எண்ணத்தில்தான் டில்லி, மும்பை பெருநகரங்களில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிற எம்.டி.என்.எல். நிறுவனத்திடமே நமது சென்னைத் தொலைபேசி நிர்வாகத்தையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கான பிரதமர் சம்மதத்தையும் நமது முதல்வர் பெற்று விட்டார்!

இதில் இன்னொரு விஷயமும் இருக்கிறது. மகாநகர் டெலிபோன் பெரும்பாலும் பயன்படுத்தப் போவது 'வயர்லெஸ் லோக்கல் லூப் (WLL)' என்கிற தொழில் நுட்பத்தை. அதனால் புதிதாகப் போட்ட ரோடுகளையெல்லாம் வெட்டிக் குதறி கேபிள் புதைக்க வேண்டிய அவசியமில்லை. வயர்லெஸ் என்பதால் கேட்டதும் டெலிபோன்; மழைக்காலங்களில் கேபிள் கோளாறு என்று டெலிபோன்கள் மக்கர் செய்யாத நிலை என்று இந்தியர்களாகிய நமது கற்பனைக்கெட்டாத




அட, கேட்டதும் கிடைக்குமாம் டெலிபோன்!


வசதிகள்!

இண்டர் நெட்டில் வீடியோ கான்ஃபரன்ஸிங் செய்கிற பெரிய பெரிய அலுவலகங்கள், தொழிலகங்கள் ஆகியவற்றுக்கு மட்டும் வயர்லெஸ்ஸின் கெபாசிடி போதாது என்பதால் உலோக கேபிளுக்குப் பதிலாக ஆப்டிகல் ஃபைபரைப் பயன்படுத்தி ஆரம்ப கட்டச் செலவுகளையும் குறைக்கப் போகிறார்கள்!

இது பற்றி சென்னைத் தொலைபேசியின் தலைமைப் பொது மேலாளர் சடகோபனிடம் கேட்டால், "மகாநகர் டெலிபோன் வருவதெல்லாம் பாலிஸி மேட்டர். அது பற்றியெல்லாம் நான் கருத்துச் சொல்ல முடியாது. ஆனாலும் நாங்களும் வரும் மார்ச் மாதத்திலிருந்து சென்னையின் பல இடங்களில் கேட்டவுடனே டெலிபோன் கனெக்ஷன் கொடுக்க முடியும். கேபிள் இல்லாத தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஆறாயிரம் டெலிபோன்களை வழங்க உள்ளோம். அதற்கான டெண்டர்களைக் கோரியுள்ளோம். எங்களாலும் ஆப்டிகல் ஃபைபரைப் பயன்படுத்திச் சேவை வழங்க முடியும்!" என்கிறார்.




• ஜுன்ஜுன்வாலா



• சந்திரன்



• மதிவாணன்



• கேபிள் இல்லாத டெலிபோன்...

ஆனால், மகாநகர் டெலிபோனின் வரவை எதிர்த்து வருகிற டிசம்பர் 2-ம் தேதி சென்னைத் தொலைபேசி ஊழியர் சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகச் சொல்கின்றன.

"மத்திய அரசு ஊழியர் என்கிற அந்தஸ்தையும் வேலைப் பாதுகாப்பையும் இழந்து, மகாநகர் டெலிபோனின் பொதுத் துறை ஊழியர்களாக நாங்கள் மாற விரும்பவில்லை. எதிர்காலத்தில் மகாநகரின் பங்குகளைத் தனியார்கள் வாங்குவார்கள் என்கிற நிலையில் எங்கள் வேலைக்கு உத்தரவாதமில்லை!" என்கிறார் தொழிற்சங்கத் (NFTE) தலைவர்களில் ஒருவரான சி.கே. மதிவாணன்.

"முன்னேற்றம் வேண்டுமானால் தமிழக, சென்னைத் தொலைபேசி வட்டங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுங்கள். எங்கள் தலைமைப் பொது மேலாளர் தன்னிச்சையாக ஒரு அடி காப்பர் கம்பியைக் கூட வாங்கி விட முடியாது. எதற்கெடுத்தாலும் டெல்லியிடம் அனுமதி வாங்க வேண்டும். மகாநகர் போல எங்களையும் தன்னிச்சையாகச் செயல்பட விடுங்கள். அப்புறம் பாருங்கள் எங்கள் சேவையை!" என்கிறார் மதிவாணன்.

ஆனால் வி. சந்திரன் வேறு விதமாகப் பார்க்கிறார். வழக்கறிஞரும் சென்னை நகர தனியார் மற்றும் பொதுத் தொலைபேசிச் சந்தாதாரர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளரும் சென்னைத் தொலைபேசி ஆலோசனைக் கமிட்டி உறுப்பினருமான இவர், "மகாநகரின் வருகையை இங்குள்ள ஊழியர்கள் எதிர்ப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அது வந்து, கேட்டதும் டெலிபோன், சிறப்பான சேவை

என்பது நடைமுறையாகி விட்டால் அப்புறம் டெலிபோனுக்கு மக்களிடையே டிமாண்டே இருக்காது. 'டிமாண்ட்' இருக்கிற வரையில் தானே டெலிபோன் ஊழியர்களுக்கு மக்களிடையே மரியாதை! அதனால்தான் எதிர்க்கிறார்கள்! சென்னை டெலிபோனின் 'கேட்டதும் இணைப்பு, உடனடி சேவை' என்கிற வாக்குறுதிகளைக் கேட்டுக் கேட்டு எங்களுக்குப் புளித்துப் போய்விட்டது. சிறந்த மாற்றம் தேவை என்பதால் மகாநகர் போன்ற பொதுத்துறை நிறுவனத்தோடு தனியார் துறைகளும் டெலிபோனில் வரத்தான் வேண்டும்!'' என்கிறார் சந்திரன் தீர்க்கமாக.

மக்கள் எதிர்பார்க்கிற அளவுக்கு சென்னைத் தொலைபேசி சிறப்பான சேவை செய்ய முடியவில்லை என்பதை ஊழியர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். "இதற்குக் காரணம் ஊழியர்கள் பற்றாக்குறைதான்!" என்கிறார்கள். பத்து வருடங்களுக்கு முன்பு ஒரு லைன்மேன் 200 இணைப்புகளைக் கவனித்துக் கொண்டிருந்தாரென்றால் இன்று அவரே 2000 இணைப்புகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறதாம்.

"நாளொன்றுக்கு 17.21 கோடி ரூபாய் சம்பாதிக்கிறது இந்திய தொலைத் தொடர்புத் துறை. அதை இதன் வளர்ச்சிக்குப் பயன்படுத்தாமல், பட்ஜெட்டிலுள்ள ஓட்டைகளை அடைப்பதற்காக அள்ளிக் கொண்டு போய்விடுகிறது அரசு. அப்புறம் எப்படி சிறப்பாகச் சேவை செய்ய முடியும்?'' என்பது ஊழியர்களின் கேள்வி.

"சரி அப்படியே இருக்கட்டும். தொலைபேசி பழுதடைந்து ஏழு நாட்களுக்குள் சரி செய்யாவிட்டால், ரெண்டல் ரிபேட் உண்டு. இதை எத்தனை பேருக்கு வழங்கியிருக்கிறது நமது தொலை பேசித் துறை? கணக்குச் சொல்ல முடியுமா? அதற்காக அலைகிற அலைச்சலை மனத்தில் கொண்டே பலபேர் இந்த 'ரெண்டல் ரிபேட்' விஷயத்தை ஒழிகிறது போ என்று விட்டு விடுகிற நிலைதான் இன்றைக்கும் இருக்கிறது. இதற்குக் கூட ஊழியர் பற்றாக்குறையா காரணம்? இல்லை. சேவையில் காட்டுகிற அலட்சியம்! அரசுத் துறைக்கே உள்ள சிவப்பு நாடா முறைதான்! அதனால்தான் பொதுத்துறைகளையும் தனியார் துறைகளையும் மக்கள் வரவேற்கிறார்கள்!'' என்கிறார் சந்திரன்.

சென்னை நகரம் தவிர்த்து தமிழகத்தின் மற்ற நகரங்களில் செல்ஃபோன் வசதிகளைச் செய்து கொண்டிருக்கும் பி.பி.எல் நிறுவனம், "சாதாரண செல்ஃபோன் கட்டணத்திலேயே ஒரு நகரிலிருந்து இன்னொரு நகருக்குப் பேசுகிற அளவுக்கு நாங்கள் திட்டம் வகுத்து விட்டோம்!'' என்று விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், நமது டெலிபோன் மட்டும் 380 ரூபாயாக இருக்கும் இருமாத வாடகையை 620 ரூபாயாகவும் எண்பது பைசாவாக இருக்கும் உள்ளூர்த் தொலைபேசிக் கட்டணத்தை 120 பைசாவாகவும் உயர்த்தப் போவதாகப் பேச்சு!

"காரணம், நமது தொலைத் தொடர்புத் துறை இன்னமும் காப்பர் கம்பி கேபிள்களை வைத்துக் கொண்டு குழிதோண்டிக் கொண்டிருக்கிற பழைய தொழில் நுட்பத்தைத்தான் கையாண்டு கொண்டிருக்கிறது. இதனால் ஒரு புதிய டெலிபோன் கனெக்‌ஷன் கொடுப்பதற்கு 30,000 ரூபாய் வரை செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இதனால்தான் அதிக வசூல் செய்ய வேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது. இதையே கேபிள் இல்லாத (WLL) தொழில்நுட்பத்தில் செய்தால் அடிப்படைச் செலவுகள் பாதியாகக் குறைந்து விடும். கட்டண உயர்வுக்கும் அவசியம் இருக்காது!'' என்கிறார் சென்னை ஐ.ஐ.டி. பேராசிரியர் அசோக் ஜுன்ஜுன்வாலா.

பல்வேறு மாற்றங்களையும் கருத்தில் கொண்டுதானோ என்னவோ, சந்தாதாரர்களின் சேவைக்கென தனி துணைப் பொது மேலாளர், நகரின் பதினாறு இடங்களில் உபயோகிப்பாளர் சேவை மையங்கள், வருகிற மார்ச்சிலிருந்து கேட்டதும் இணைப்பு என்று சில மாற்றங்களைச் செய்து கொண்டிருக்கிறது நமது தொலைபேசித் துறை.

எந்த மாற்றமானாலும் அது ஏட்டளவில் இல்லாமல் சந்தாதாரர் வரை சென்றடைய வேண்டும். அது இல்லாத வரை, மகாநகர் டெலிபோன் போன்ற வேறு ஏதாவது வந்து தங்களுக்கு ஒரு விடிவு காலம் பிறக்காதா என்றுதான் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். ●

— ஜி. சங்கரநாராயணன்

அட்டையில் *செல்வி சாரதா;*

வண்ணப்படம் : **யோகா**

(4-ம் பக்கத் தொடர்ச்சி...)

ஞர்கள், அவர்களில் நான்கு பேரைப் பிணைக் கைதிகளாகப் பிடித்து வந்த பிறகு தான் போலீஸ் நடவடிக்கை எடுத்தது. பிறகு, அப்படிப் பிடித்துக் கொண்டு வந்தவர்களிடமிருந்து எங்கள் ஆட்கள் செயின், மோதிரங்களைத் திருடிக் கொண்டுவிட்டதாக எங்கள் மீது பொய் வழக்கும்போட்டது. இதுபோல் ஏகப்பட்ட உதாரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.''

''நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். ஆனால் மறுபுறம் 'தாழ்த்தப்பட்டோர் வன்முறை கொடுமைத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு மேல்ஜாதியினர் மேல் பொய்ப் புகார் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறதே?''

''இப்படிச் சொல்பவர்கள், அந்தச் சட்டத்தின் கீழ் எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்கிற கணக்கையும் சொல்லுவார்களா? அந்தச் சட்டத்தை அரசு பயன்படுத்தவில்லை என்பதுதானே எங்களின் குற்றச்சாட்டே! தாழ்த்தப்பட்டோர் கொடுக்கின்ற கொலைக் குற்றப்புகார்களையே பதிவுசெய்ய மறுக்கிற காவல் நிலையங்களில் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் – மேல் ஜாதிக்கு எதிராக எப்படி வழக்கு பதிவுசெய்வார்கள்? இதெல்லாம் தாழ்த்தப்பட்டோருக்குச் சட்டம் கூட துணை போய் விடக் கூடாது என்று கருதுகிற மேல் ஜாதியினரின் கட்டுக்கதையே தவிர வேறில்லை. இன்னொன்றும் சொல்கிறேன். இன்னும் தமிழகத்தில் உள்ள ஆயிரம் கிராமங்களில் தீண்டாமை இருப்பதாக முதல்வரே ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆயினும் இச் சட்டத்தின் கீழ் 46 வழக்குகளே பதிவாகியுள்ளன. தமிழகத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு 19% இட ஒதுக்கீட்டை அரசு நடைமுறைப் படுத்த வேண்டும். இதுவரை ஆறு சதவிகிதத்துக்கு மேல் நிரப்பப்படவில்லை என்பதே உண்மை. இதுபற்றிய வெள்ளையறிக்கையை அரசு வெளியிட வேண்டும் என்று நாங்கள் எத்தனையோ முறை குரலெழுப்பியும் அரசு காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. காரணம் என்ன? இந்த அரசும் மேல் ஜாதியினருக்குச் சாதகமான அரசு என்பதுதான்!''



அடங்க மறுப்போம்; அத்து மீறுவோம்' என்பது எங்களின் கோஷம். அதாவது இந்த ஜாதிய சமுதாயத்துக்கு அடங்க மறுப்போம்; காலங் காலமாக வரும் இந்த ஜாதிய 'எல்லைகளின் அத்து மீறுவோம் என்று அர்த்தம்.

''இத்தனையையும் சகித்துக் கொண்டு நீங்கள் அமைதியான பாதையில்தான் போகிறீர்கள் என்று உறுதியாகச் சொல்லுவீர்களா?''

''உள்ளபடியே உளப்பூர்வமாகச் சொல்கிறேன். பொது அமைதியைக் கெடுக்கும் வகையில் வன்முறை செய்து, அதன் மூலம் தலைவனாகும் எண்ணம் எனக்குத் துளியும் இல்லை. ஆனாலும் இதை நாங்கள் சகித்துக் கொண்டேயிருக்க முடியாது. பொது அமைதி தேவை. அதே நேரத்தில் எங்களின் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும் நாங்கள் அக்கறையாக இருக்கிறோம்.''

''ஆயினும் உங்கள் கடலூர்ப் பேரணிக்கு அரசு தடைவிதித்தது ஏன்?''

''ஒரு ஜாதிக் கட்சித் தலைவரைத் திருப்திப் படுத்துவதற்காக அரசு செய்த தடை என்றுதான் நாங்கள் கருதுகிறோம். அதற்கு என்ன அவசியம் வந்தது என்பது எங்களுக்குத் தெரியாது. இனியும் தடைவிதித்தால் அதை நாங்கள் மீறுவோம்.''

''இப்படி தலித்துகளுக்கு எதிராக அரசு செயல்படுகிறது என்றால், உங்களின் வோட்டுக்களைப் பற்றி அரசியல்வாதிகள் கவலைப்படவில்லை என்கிறீர்களா?''

"கவலைப்படுகிறார்கள். அதனால்தான் சலுகைகளை அறிவிக்கிறார்கள். அந்தச் சலுகைகளின் மூலமே எங்களைத் திருப்திப்படுத்த நினைக்கிறார்கள். நாங்கள் கேட்பது உரிமை. எல்லா ஜாதியினருக்கும் இருப்பது போன்ற சமூகத்தில் புழங்குகிற – வாழ்கிற சம உரிமை. இதைக் கொடுத்து விட்டால் ஜாதியக் கட்டுமானம் உடைந்து விடும். அதனால் இந்துத்வாவும் உடைந்து விடும் என்பதால் அதைக் கொடுக்க மறுக்கிறார்கள். உரிமைகளைக் கேட்டு நாங்கள் போராடும் போது அதை நசுக்கு கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அரசும் ஆதிக்க சக்திகளும் எங்களுக்குப் பிச்சை போடத் தயாராக இருக்கிறார்களே தவிர, சமமாகப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இல்லை. சேரிகளைக் கொளுத்தும் போது துப்பாக்கிச் சூடு நடக்காது. அதை எதிர்த்து சேரி ஜனங்கள் போராடும் போது மட்டும் தான் துப்பாக்கிச் சூடு நடக்கும்! இதுதான் அரசின் நடுநிலையா? பலவீனமானவர்களை அடக்கி வைப்பதால் ஏற்படும் அமைதியா பூரண அமைதி? புருஷனின் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டும் சகித்துக் கொண்டும் வாழ்கிற பெண்கள் இருக்கிற குடும்பம் சந்தோஷமான குடும்பம் போல்தான் தோற்றமளிக்கும். ஆனால் உண்மையில் அந்தக் குடும்பத்துக்குள் சந்தோஷமா இருக்கும்? புருஷனின் கொடுமைகளுக்கு எதிராக ஒரு பெண் குரல் கொடுத்தால், அவள் அடங்காப் பிடாரியாகி விடுவாளா? இதுதான் நாங்கள் கேட்கும் கேள்வி!"

"அண்மையில் மேலவளவுப் பஞ்சாயத்துத் தலைவர் ராஜா, தமது அலுவலகத்தைத் திறந்து செயல்படுவதற்குக் கூடத் தம்மை மற்ற ஜாதியினர் விடவில்லை என்றும் குறிப்பிட்ட காலத்துக்குள் அரசு தமக்குப் பாதுகாப்புத் தரவில்லையென்றால் 'விடுதலைச் சிறுத்தைகளின் உதவியோடு திறப்பேன்' என்றும் கூறியிருக்கிறார். அதற்கு என்ன அர்த்தம்?"

"இப்போது அவருக்கு அரசே பாதுகாப்புத் தந்து விட்டது!"

"அப்படித் தராமல் போயிருந்தால் நீங்கள் அவருக்கு எப்படி உதவியிருப்பீர்கள்?"

"அறிவிப்புச் செய்து விட்டு நாங்கள் போய்த் திறந்திருப்போம். அவருக்குப் பாதுகாப்புத் தந்திருப்போம். ஒருவருக்குப் பாதுகாப்புத் தருவதும் எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்வதும் எப்படி வன்முறையைத் தூண்டுவதாகும்?"

"வன்முறை உங்கள் பாதையல்ல என்கிறீர்கள். நல்லது. ஆனால் நீங்கள் குறிப்பிடுகிற 'விடுதலை'யை அடைவதற்கான உங்கள் பாதை எப்போதும் இதே போல்தான் இருக்குமா?"

"தேர்தல் என்பது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை, இருக்கிற ஜாதிய சமுதாயத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்காக நடக்கிற விஷயம் என்பதால் நாங்கள் அதில் நிச்சயம் பங்கெடுத்துக் கொள்ள மாட்டோம். அப்படிப் பங்கெடுத்துக் கொள்கிற கட்சிகளோடும் உறவு வைத்துக் கொள்ள மாட்டோம். நாங்கள் விரும்புவது சமத்துவத்தில் வருகிற அமைதி. சமரசத்தால் – வருகிற அமைதி அல்ல. இதற்காக நாங்கள் செல்லுகிற பாதை நாளை எப்படியிருக்கும் என்பதை நான் மட்டும் தனியொருவனாக நின்று தீர்மானிக்கிற விஷயமும் அல்ல!"

"பெயரில் சிறுத்தை என்று இருப்பதால்தான் மக்களுக்கு ஒரு சந்தேகம்..."

"லயன்ஸ் கிளப் என்று கூடத்தான் பெயர் இருக்கிறது? அவர்கள் மேல் சந்தேகம் வருகிறதா என்ன?"

"உங்களுக்கும் மார்க்ஸீய-லெனினீய இயக்கத்துக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?"

"இல்லை. அவர்கள் வர்க்கப் போராட்டம் நிகழ்கிற போது, ஜாதிகள் என்பது உதிர்ந்து போய்விடும் என்று நம்புகிறார்கள். நாங்களோ, ஜாதிகள் ஒழியாமல் வர்க்கப் போராட்டம் நடப்பதற்கான சாத்தியக்கூறுகளே இல்லை என்பதில் உறுதி கொண்டவர்கள். மேலும் தனிமனிதர்களைக் கொல்வதால் விடுதலை கிடைத்து விடும் என்பதிலும் எங்களுக்கு நம்பிக்கையில்லை!"

"உங்கள் அமைப்புக்கான நிதி வசதிகளை எப்படிப் பெறுகிறீர்கள்?"

"என் வாழ்நிலையைப் பார்த்தாலே தெரியுமே! சுரண்டப்படுகிறவர்களின் விடுதலைக்காகச் சுரண்டுபவர்களிடம் நிதி வாங்க மாட்டோம். இயக்கத்தின் மேல் நம்பிக்கையுள்ள மக்கள் கொடுக்கும் சிறு சிறு நிதியுதவிகளால்தான் இயக்கம் நடக்கிறது!" ●

பேட்டி : **இளங்கோவன், ஸ்ரீநிவாசன்**

படங்கள் : **வெங்கடேஷ்**

எங்களுக்குப் பிடித்தது

வெங்காய ஹைக்கூ!

✉ தாம் ஒரு கிறிஸ்தவப் பாதிரியாராக இருந்த போதிலும் பிற மதங்களின் நல்ல கருத்துக் களையும் ஏற்று அங்கீகரிக்கும் ஃபாதர் ஹூர் துராஜ், உண்மையிலேயே வித்தியாசமான துறவிதான்!
தூத்துக்குடி-1, ப. சுகுமார்.

✉ உல்லாசமாகச் செல்வதற்குத்தான் பரி சலைப் பயன்படுத்துவதைப் பார்த்திருக் கிறோம். தங்கள் ஊருக்கு ஆற்றினைக் கடந்து செல்ல, பாலம் இல்லாததால் பரிசலை மட்டும் நம்பி அன்றாட வாழ்க்கையை நடத்தும் நெல்லித்துறை கிராம மக்களின் நிலைமை மிகவும் பரிதாபமாக உள்ளது.
லால்குடி, எம். இராஜேந்திரன்.

✉ நிஜமாகவே 'சல்மான் வேட்டை' கதை யைப் படித்தால் சல்மான்கான் அசந்து விடு வார்! கதை எழுதிய மாதுரிக்கு பாலிவுட்டில் நல்ல எதிர்காலத்தைத் தோற்றுவித்து விடுவார்!
தேவனாங்குறிச்சி, பா. வடிவேல்.

வெட்டமேஜை

✉ 'சோ' அவர்கள் எந்த விஷயத் திலும் இப்படியொரு 'ஜகா' வாங் கினதே இல்லை! 'கடவுள்' விஷ யத்தில் மட்டும் ஏன் இப்படி?
சென்னை-39, சிம்மவாஹினி.

✉ மும்தாஜ் யாசினின் 'இருள்' சிறு கதை மனதை ஈர்த்த குடும் பப்பாங்கான சிறுகதை.
விழுப்புரம்-2, வை. வெங்கடேசன்.

✉ 'வீரம் வெளஞ்ச மண்ணு'க்கு காரம் நெறஞ்ச விமர்சனம் எழுதி அசத்தி விட்டீர்கள்!
அயன்புரம், த. சத்தியநாராயணன்.

✉ "தமிழ்நாட்டில் ஆங்கில மோகத் தைக் குறைத்து தமிழுக்கு முத லிடம் கொடுக்கலாமே..!" என்று கேள்வி கேட் டால் "வொய்நாட்(!)" என்று ஆங்கிலத்திலே பதிலளிக்கிறீர்களே! என்ன ஒரு கிண்டல் உங் களுக்கு!
சென்னை-41, ந. வந்தியக்குமாரன்.

✉ தங்க அரிசியை அருவருப்புடன் எறிந்த சுவாமி தேசிகனின் அற்புத பக்தியும் வைராக் கியமும் அதற்கு முக்கூர் நரசிம்மாச்சாரியார் தந்த விளக்கமும் மெய் சிலிர்க்க வைத்தன!
திருவண்ணாமலை, ஆர். ராமசாமி.

✉ சரவணா வீடியோஸ் கணேசனின் வெற்றிக் கதை படித்தேன். ஆர்வமும், உழைப்பும், திறமையும் இருந்தால் எதிலும் வெற்றி பெறலாம் என்பதை உணர்த்தியது.
மொரட்டுப்பாளையம், சு.நா. இராஜேஸ்வரன்.

✉ கிரிக்கெட்டிற்குத் தரப்படும் முக்கியத்துவம் டேபிள் டென்னிஸுக்குத் தரப்படுவதில்லை எனும் சந்திரசேகரின் வருத்தம் நியாயமானதே. அவரது நல்முயற்சிகளுக்குக் 'கை' கொடுக்க நிறுவனங்கள் முன் வர வேண்டும்.
சென்னை-26, சி. மகேஷ்.

✉ உங்கள் மனதிற்குப் பிடித்த ஹைக்கூ என 'தீப்பெட்டி ஹைக்கூ'வைக் கூறினாலும், டாபிக்கலாக நீங்கள் சொல்லிய வெங்காய ஹைக்கூ எங்களுக்குப் பிடித்தது!
பொன்மலை, ஆர். பிரகாஷ்.

✉ ஜெயிக்காத லலிதா – தலையங்கமும் கார்ட்டூனும் சூப்பர்! பத்திரிகைகளின் கருத்தை மதிக்காத காரணத்தால்தான் 96ல் ஜெயலலிதா தோல்வியைத் தழுவினார். வழக்குகளைத் தாமதப்படுத்த முட்டுக் கட்டைகள் போடுவதை விடுத்து, நீதி விசாரணையை நேருக்கு நேர் சந்திக்க வேண்டும். இல்லையென்றால் நீதிமன்றத்தில் குற்றங்கள் நிரூபிக்கப்படுவதற்கு முன்பு மக்கள்மன்றம் மறுபடி தண்டனை வழங்கி விடும்.
திருநாகேசுவரம், ஏ. ஜெயகிருஷ்ணா.

✉ 4.10.98 வார கல்கி இதழில் எங்கள் தாய்த் தமிழ் கல்வியைப் பற்றி கா.சு. வேலாயுதன் எழுதிய கட்டுரை வந்த பிறகு பொங்கலூர் சட்டமன்ற உறுப்பினர் மோகன் கந்தசாமி பள்ளிக்கு நேரடியாக வந்து பார்வையிட்டுச் சென்றார்கள். உதவி செய்வதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார். கல்கிக்கு நன்றி!
தாய்த்தமிழ் தொடக்கப்பள்ளி,
திருப்பூர். குரு. தங்கராசு.

குரு பார்வை

சாதாரணமாக குரு யாரையாவது பார்த்தால், கல்யாண காலம் வந்து விட்டதாக ஜோசியர்கள் சொல்வார்கள். இங்கே குருவாகப்பட்ட பிரகாஷ்ராஜ் பார்க்கும் பெண்களுக்கு வருவது கஷ்ட காலம்.

பூர்வஜென்ம புருடாவெல்லாம் விட்டு ஒரு நீதிபதியின் பெண்ணைக் காதலித்து, கல்யாணக் கனவுகளை சாப்பிடக் கொடுத்து, திருத்தணி வரை தள்ளிக் கொண்டு போய், 'பலான' குற்றம்சாட்டிப் போலீஸில் சிக்க வைக்கிறார். ஏன் என்று மனம் பதைக்கிறது.

பதற்றம் கொஞ்சம் மட்டுப்படுவதற்குள் இன்னொரு பெண்ணின் திருமண தினத்தன்று (அதுதானே வழக்கம்?) இடையில் புகுந்து தனக்கும் அவளுக்கும் திருமணம் ஆகிவிட்டதாகப் போலி ஆவணங்கள் காட்டி நிறுத்தி, பதைப்பை மேலும் அதிகரிக்கிறார். ஏன்? ஏன்? என்று ஆர்வம் எகிறும் போது குஷ்பு வந்து விட, கிளை மாக்ஸும் நெருங்கி விட, சற்றே நீளமான ஒரு ஃப்ளாஷ்பேக்.

பிரகாஷ்ராஜின் பெண்குல விரோத கைங்கர்யங்களுக்குச் சொல்லப்படும் காரணம் (சொந்தக் குடும்பம் அழிய அப் பெண்கள் மறைமுகக் காரணமாக இருந்தது.) ஏற்கும்படி இருக்கிறது. என்னதான் ஜென்டில்மேன் ஃப்ளாஷ்பேக்கின் கா... பாதிப்பு என்று தோன்றினாலும் ஓரளவு படத்துடன் ஒன்ற முடிகிறது.

விற்பார்களே, அன்னார் யாரோ ஸ்கிரிப்டில் மிக உதவியிருக்க வேண்டும். வெட்டு ஒண்ணு; துண்டு நாறு!

அநியாயத்துக்குப் பிரகாஷ்ராஜால் போலீஸில் மாட்டி விடப்பட்ட ஈஸ்வரி ராவ் என்ன ஆனார்? ஜட்ஜ் அப்பா சிறிக் கிறி எழாமல் கடலை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாரா? ஒரு என்கொயரி? ம்ஹூம்!

போலி கையெழுத்துப் போடவைத்து இன்னொரு பெண்ணை ரிஜிஸ்தர் கல்யாணம் பண்ணி, ரேஷன் கார்டு வரை ஃப்ராடு காரியங்களாலேயே சாத்தியமாக்கும் நெகடிவ் ஹீரோ, ஒன்றிலுமே பிடிபடாமல் போவது அழகிய பூவனையம். (காதுகள் பத்திரம்.)

ஜோக்கள் அரை டீனேடு 'தலை



அல்லாதபட்சத்தில் ஜவ்வடிக்கும் காட்சி நீளங்களால் நறநறக்கும் பற்களும் டல்லடிக்கும் ஒளிப்பதிவினால் தூக்கத்துக்குத் தயாராகும் கண்களும் கொடூரமான பின்னணி இசையால் கன்றிப் போயிருக்கும் காதுகளும் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தொடங்கியிருக்கும்.

ஒரு டீவி சீரியல் கூட இதைவிடச் சிறப்பாயிருக்கும் என்று எண்ணும்படி ஆரம்பத்தில் காட்சி அமைப்புகள். சாலை ஓரங்களில் ஒரு முழு தர்பூசணியைத் துண்டு துண்டாக நறுக்கி வைத்து

வாசல்' விஜய் திடீரென்று பெரிய ஹோட்டலாதிபதி ஆவது தொடங்கி ஒரு லிஸ்ட் போட்டால் படத்தில் எண்ணி எண்ணிச் சிரிக்க நிறைய லாஜிக் ஓட்டைகள்.

பிரகாஷ்ராஜின் அதி உன்னதமான நடிப்பு ஒன்றை மட்டுமே நம்பி எடுக்கப்பட்டிருக்கிற படம் இது. கதையிலும் சற்று வலு இருக்கிறது. ஒரு நல்ல த்ரில்லராக வந்திருக்க வேண்டியது. நாசமாக்கியே தீருவது என்று விடாப்பிடியாக முயன்று ஜெயித்திருக்கிறார் டை ர க் டர். ○




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

பிரமாதமான நேரம் வந்திருக்குங்க. நினைச்ச காரியம் நடக்கும். அரசியல்வாதிங்க காட்டுல அடை மழை! வராத பணம், கிடைக்காத அதிர்ஷ்டம், எல்லாம் கூடிவரப் போவுது. உத்தியோக ரீதில ப்ரமோஷன், இடமாறுதல் சிலருக்கு வரலாம். பெண்களுக்கு திருமணம்/குழந்தைப் பிறப்பு வாய்ப்பு ரொம்பப் பிரகாசமா இருக்கு. சினிமாக்காரங்களுக்கும் டிராமா, டான்ஸ் துறையினருக்கும் கொஞ்சம் சிக்கல் இருக்கும். ரொம்ப நெருக்கமானவங்க கூட சண்டை போட்டுப் பிரிய வேண்டி வரலாம். பெண்கள் தம் பெற்றோர் உடல் நலத்துல எச்சரிக்கையா இருக்கணும்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

கிரகங்கள் எதுவும் அனுகூலமா இல்லை. ஸோ நீங்க ரொம்ப கவனமா இருக்கணும். வீண் விவாதங்கள்ல கலந்துக்க வேணாம். தண்ட செலவுகள் நிறைய வரும். கவனம்! மனகல நிறைய இட்டங்கள் உருவாகும். ஆனா, எதையும் செயல்படுத்த முடியாதபடி சூழ்நிலை உங்களைப் பந்தாடும். பயணத்துல எச்சரிக்கையா இருங்க. பண இழப்பு நேரலாம். சிலருக்கு நண்பர்களால ஏதாவது பிரச்னை வரும். பண விஷயத்துல எச்சரிக்கையா இருங்க. கடன் வாங்கறதோ, ஜாமீன் கையெழுத்துப் போடறதோ வேணவே வேணாம்!



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

உங்களுக்கென்னங்க! நம்பிக்கை வாக்கெடுப்புல ஜெயிச்ச ஜேஎச். படேல் மாதிரி முகத்துல ஒரு தேஜஸ் கூடியிருக்குதே, கவனிச்சீங்களா? தாராளமான பணவரவு, காதல் அனுபவம், உல்லாசப் பயணம்னு அமையறப்ப தேஜஸுக்கு என்ன குறைச்சல்ங்கறீங்களா? அதுவும் கரெக்ட்தான். இப்ப நீங்க உஷாரா இருக்க வேண்டியது நண்பர்கள் விஷயத்துல! கூட இருந்தே குழிபறிக்க அவங்க தயாரா இருக்காங்க. கவனமா இல்லாட்டி அவப் பெயர், பண இழப்பு நேரலாம்! வாரக் கடைசில லேசா வயித்து வலி வரலாம். கண்ட இடத்துல சாப்பிடாதீங்க!



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*


உறவினர்கள் சிலரால இந்த வாரம் உங்களுக்கு ஏதோ நன்மை நடக்கப் போவுது. அது, உங்க நீண்ட நாள் கனவான வெளிநாட்டில் வேலை வாய்ப்பாகவும் இருக்கலாம். அரசாங்கப் பணியாளர்களுக்கு பழைய பாக்கிகள் வந்து சேரும். விவசாயிகள், கம்ப்யூட்டர் துறையினர் எல்லோருக்குமே வெற்றி வாய்ப்புகள் பிரகாசமா தெரியுது. கணவன் மனைவிக்குள்ளான லேசா ஊடல் வரலாம். ஆனா பகிரங்கமா காட்டிக்காதீங்க. உங்க விவகாரத்துல மூணாவது மனுஷங்க தலையிடறதை அனுமதிக்காதீங்க. இந்த வாரம் உங்க உடல் ஆரோக்கியம் ஓஹோன்னு இருக்கும்!



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

மயக்கறாப்பல பேசற கலை உங்க கிட்ட இருக்குதுங்க. அதனாலேயே எங்கயும் உங்களுக்கு முக்கியத்துவம் இருக்கும். இப்ப உங்களுக்கு நல்ல வாய்ப்புகள் கூடி வர்ற சமயம். ஆனா உங்க சோம்பேறித்தனத்தால பல அருமையான வாய்ப்புகளை இழப்பீங்க. கடல் வியாபாரம், கம்ப்யூட்டர் துறைக்காரங்க ரொம்ப விழிப்போட இருக்கணும். போட்டிகள் ஜாஸ்தியா இருக்கும். பெண்களுக்கு இது பிரமாதமான நேரம். வீட்டுல ஏதோ விசேஷம் வரப் போவுது. ஜயாமாருங்க, சுபச் செலவுக்குத் தயாரா இருங்க.






கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

பொதுவா பிரச்னை அதிகம் இருக்காதுன்னாலும் நீங்களே சில பிரச்னைகளை உருவாக்கிக்க வேண்டி வரும். முக்கியமான முடிவுகளை இப்ப எடுக்காதீங்க. அப்படியே முடிவெடுத்தாக வேண்டிய அவசரம்னாலும் பெரியவங்களை கன்ஸல்ட் பண்ணிட்டு செய்யுங்க. யாருக்கும் வாக்குக் கொடுக்காதீங்க. வம்பு விவகாரங்கள்ல தலையிட வேணாம். சிலருக்கு பிக்பாக்கெட்ல பணம் இழக்கற வாய்ப்பு இருக்கு. இன்னும் சிலருக்கு நாய்க்கடி அபாயம்!

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல்*




சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)

ரெண்டுல சூரியன் வீடு கட்டியிருக்கறது அவ்வளவா நல்லதில்லைங்க. உக்கிரம் கொஞ்சம் ஜாஸ்தி தான். உடல் நலன், பண விஷயம், உத்யோக ரீதில ஒண்ணும் பிரச்னை இல்லை. ஆனா, எப்பவும் ஏதாவது ஒரு குழப்பம் உங்களைப் பிடுங்கிட்டே இருக்கும். வீட்லே சிறு பிரச்னைகள் நிறைய வரும். விட்டுக் குடுத்து நடந்துக்கங்க. பெரியவங்ககிட்ட அவமரியாதையா நடந்துக்காதீங்க. இந்த வாரம் சோறு திங்க நேரமில்லாம நிறைய அலைய வேண்டி இருக்கும். தூக்கப் பற்றாக்குறை இருக்கும். எதுக்கும் டென்ஷன் ஆகாம இருக்க முயற்சி பண்ணுங்க.

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

நடக்கும்!




புது மனிதர்கள் கிட்ட பழகறப்ப எச்சரிக்கையா இருங்க. இந்த வாரம் அறிமுகமில்லாதவர்களால உங்களுக்கு ஏதாவது பிரச்னை வரலாம். கோர்ட் கேஸ் ஏதாவது இருந்தா இழுத்தடிக்கும். பணப் பிரச்னையும் இருக்கும். ஆனா புதன், சனி, ராகு மூணு பேரும் உங்களுக்குச் சாதகமா இருக்கறதால உங்க வேலையை கரெக்டா செய்து முடிப்பீங்க. வெளியில எங்காவது போறதானா, சூரியனை வழிபட்டுக் கிளம்புங்க. பெற்றோர் உடல் நலத்துல அக்கறை செலுத்த வேண்டியது முக்கியம்.

மேஷ ராசிக்காரரான திரைப்பட மக்கள் தொடர்பாளர் ஜான்சனுக்கு நல்ல




நேரம் கூடி வருது! 'பழைய பாக்கி'கள் வசூலாயிடுமாம்.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

செவ்வாய் தவிர மத்த கிரகங்கள் எதுவும் சாதகமா இல்லை. உடல் நலன் பாதிக்கப்படலாம். உத்தியோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களால ஏதாவது பிரச்னை வரலாம். மேலதிகாரிங்களோட சுமுகமான உறவு இருக்காது. வேலைல கவனமா இருங்க. பெண்களுக்கு சில 'பிரத்யேக'ப் பிரச்னைகளால உடம்பு முடியாம போகலாம். எண்ணெய்ப் பலகாரங்களை ஒதுக்கிடுங்க. மாணவர்கள் மனசு அலைபாயாம படிக்க வேண்டியது முக்கியம். சிலருக்கு வேண்டாத இட மாறுதல்கள் வரலாம். கடன் வாங்கிட்டுப் போனவங்க டயத்துக்குத் திருப்பித் தராம இழுத்தடிப்பாங்க. எதுக்கும் தினம் பிள்ளையார் கோயிலுக்குப் போயிட்டு வந்தா ரொம்ப நல்லது.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்குத் தயாரா இருங்க. சிலருக்கு டாலர்ல சம்பளம் வாங்கற யோகம் கூடி வரும். சிலருக்கு லாட்டரில கூட லக்கடிக்கலாம். விருந்து, கேளிக்கைக்கும் வாய்ப்பு இருக்கு. பெண்களுக்கு இது நகை வாரம். குறைந்தபட்சம் கவரிங் நகையாவது வாங்கியே தீருவீங்க. எழுத்தாளர்கள், கவிஞர்களுக்கும் புதிய வாய்ப்புகள் வரும். சிலருக்கு எதிர்பாராத பிரமோஷன் கிடைக்கலாம். வயசானவங்க மனம் குளிர்றாப்பல அவங்க பசங்க ஏதாவது நல்ல காரியம் பண்ணுவாங்க. பொதுக் காரியங்கள்ல ஆர்வமுள்ளவங்களுக்குப் புகழ் கூடும் வாரம் இது!



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

கஷ்டமே இல்லாத வாரம் இது! உங்க ஆசைகள் எதுவானாலும் உடனே நிறைவேத்தி வைக்கத் தயாரான குடும்பம் இருக்கறப்ப என்னங்க கவலை? பண நடமாட்டம் பிரமாதமா இருக்கும். நிறைய வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்கப் போறீங்க. வீட்டுல ஏதோ விசேஷம் வேற வரப் போவுது. சுபச் செலவுக்குத் தயாரா இருங்க. தாயார் உடல் நலத்துல கவனம் முக்கியம். கூடப்பிறந்தவங்களால லேசா கவலை/சஞ்சலம் வரலாம். வார்த்தையை மட்டும் விட்டுடாதீங்க. மௌனமே சிறந்த ஆயுதம். எதிலும், எங்கேயும்!



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உடல் நலம் கொஞ்சம் சரியா இருக்காது. தலைவலிப் பிரச்னை இருக்கலாம். ராத்திரில கண்முழிக்காதீங்க. தெருவுல நடக்கற கசமுசா சண்டைகள்ல தலையிடாதீங்க. உங்க பலமே உங்க புத்திக் கூர்மைதான். அதைப் பயன்படுத்த இந்த வாரம் சில முக்கியமான சந்தர்ப்பங்கள் வரலாம். ஆபீஸ்ல சில பிரச்னைகள் உங்களுக்கு வரலாம். யார் மனசும் புண்படாம நடந்துக்கங்க. பணப் பிரச்னை இருக்காதுன்னாலும் அநாவசிய செலவுகளும் நிறையவே இருக்கும். சிலருக்கு புண்ணியத் தலயாத்திரை யோகம் கூடி வரலாம்.



• ஸ்விட்சர்லாந்தில் எங்குபார்த்தாலும் பனிதான்!

சுந்தரமான, மனோகரமான, அந்த அழகுக் குவியலுக்குப் பெயர்தான் சுவிட்ஜர்லாந்து: எழில் கொஞ்சும் அந்த மரகத விரிப்புகளுக்கு 'ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்' என்ற பெயர் வெகு கச்சிதம்! பார்த்த மாத்திரத்தில் பஸ்ஸிலிருந்து வெளியே குதித்து, 'பூப்பூக்கும் ஓசை...' பாடிக் கொண்டு, பட்டாம் பூச்சிகளைத் துரத்தும் ஆசை யாருக்குத்தான் வராது?

உண்மையிலேயே பூப்பூக்கும் ஓசை கூட (பூப்பூக்கும் போது ஓசை வருமா என்ன!) வெடிச் சத்தமாகக் கேட்குமளவுக்கு, அப்படி ஒரு கம்பீர அமைதி! இரு பக்கமும் இளம் பச்சையால் வெல்வெட் போர்த்தியிருக்க, தூரத்தில், பார்டர் கட்டியது போல் வீடுகள். யாரிந்தப் புற்களை எல்லாம் ஒரே நிறத்தில், ஒரே அளவில் வைத்திருப்பது?


கொழுமொழுவென்று ஆங்காங்கே சோம்பேறித்தனமாய், வெள்ளையும், புள்ளியிட்ட கறுப்புமாய், அசைபோட்டுக் கொண்டிருக்கும் பசுக்களா? "ஸ்விஸ் பசு படுத்தாலும் இந்திய ஆளின் உயரம்" என்று பாடலியற்றத் தூண்டும், அசத்தலான செழுமை- நாளொன்றுக்கு 30 லிட்டர் சுரக்குமாம்!

ஜெர்மனி, ஃப்ரான்ஸ், ஆஸ்த்ரியா என மூன்று பக்கங்களாலும் சூழப்பட்டிருக்கும் இச் சின்னஞ்சிறு நாட்டின் மூர்த்தி சிறிதானாலும், கீர்த்தி பெரிது. ஸ்விஸ்காரர்களின் 'ஹைடெக்' கண்டுபிடிப்புகள் உலகப் பிரசித்தம்- லிஃப்ட், எஸ்கலேட்டர், எலிவேட்டர்,

ஜெயஸ்ரீ ராஜ்

கேபிள் கார் என்று ஒருபுறம்; சாக்லேட், பிஸ்கட், சீஸ் வகைகள் என பால் பொருள்கள் மறுபுறம்!

மலைகள் சூழ்ந்த இந்தச் சிறிய நாட்டை, ஸ்விஸ் மக்கள், தங்கள் அயராத உழைப்பாலும் புத்திசாலித்தனத்தாலும் பெருஞ் சிறப்புடையதாக மாற்றியுள்ளனர்; ரைன் நதி ஸ்விட்ஜர்லாந்திலிருந்து தான், போக்குவரத்துக்கு



• பனிக்குவியல்களுக்கிடையில்தான் ரயில் பயணம்...

உகந்ததாயிருக்கிறது!

அறுபத்தைந்து லட்சம் மக்களில், ஸ்விஸ் ஜெர்மன் பேசுபவர்கள் 69 சதம். 12 சதம் இத்தாலியிலும், 18 சதம் ப்ரெஞ்சிலும் உரையாட, ஒரு சதவிகிதத்தினர் மட்டும், 'ரோமான்ச்' என்ற ஒரு பிரத்யேகக் கலவை மொழியைப் பிரயோகிக்கிறார்கள்.

நமக்கு மாநிலங்கள் போல் இங்கே கான்டென்கள்; மொத்தம் 21! ஒவ்வொன்றிலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்லிமெண்டுக்குச் செல்கிறார்கள் என்றாலும், அரசியல் பித்து எதுவுமில்லை. சிவப்பில் வெள்ளையாகக் கிராஸ் போட்டிருக்கும் கொடி!

சிவப்பு நிறம், யுத்தத்தில் இவர்கள்

சிந்திய ரத்தத்திற்கு, வெள்ளை க்ராஸ், இவர்களது புகழ்பெற்ற லூசர்ன் ஏரியின் வடிவைக் குறிக்க. உலகின் மிகப் பெரிய "டன்னல்" ஸ்விட்ஜர்லாந்தில் தான் உள்ளது. இவர்களது கரன்ஸி, ஸ்விஸ் ஃப்ராங்க்ஸ் (1 ப்ராங்க் = 25 ருபாய்).

"ஸ்விட்ஜர்லாந்து என்றதும், ஸ்விஸ் பாங்க்குகள் நினைவுக்கு வருவது இயல்பு தான். முன்பெல்லாம் இங்கே வரும் டூரிஸ்டுகள் 'எனக்கும் ஸ்விஸ் பாங்க்கில் அக்கவுண்ட் உண்டு' என பீற்றிக் கொள்ள, கையிலுள்ள சிறு தொகையை வைத்துக் கொண்டு கணக்கு துவங்கி விடுவார்கள். அப்புறம் அது அப்படியே தூங்கும். அதனால் இப்போதெல்லாம் குறைந்தபட்சம் 5000 ஸ்விஸ் ஃப்ராங்க்குகள் இருந்தால்தான் (ரூ. 1, 25,000) கணக்கு ஆரம்பிக்கலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்து விட்டார்கள்"- இப்படி நம் ஸ்விஸ் பாங்க் ஆசையில் முதலிலேயே மண்ணைத் தூவிய மரியா, "ஸ்விஸ்காரர்கள் ரொம்ப ஸீரியஸ் டைப்! யார் அவர்கள் முகத்தில் ஒரு புன்னகையை வரவழைக்கச் செய்கிறாரோ அவரைப் பெரிய காமெடியனாக நான் ஏற்கத் தயார்!" என எடுத்த எடுப்பிலேயே சவால் விட்டு பயமுறுத்தினார்.

ரொம்ப 'டிஸிப்ளின்டான' மக்கள்; நாட்டுக்குள்ளே நுழைவதற்கு டாக்ஸ் கட்டியாக வேண்டும்; பாஸ் போர்ட்டை அலசி ஆராய்வார்கள்; ஆனால் ஒரு நல்ல விஷயம்: இங்கே டாய்லெட்டுகள் இலவசம்!

கண்ணில் பட்ட வீடுகளில் சிலவற்றில், கீழ்த்தளம் கால் நடைகளுக்காகவும், மேல் தளம் வீட்டுச் சொந்தக்காரர்களுக்காகவுமிருந்தது. "மே இறுதியில் நடக்கும் விழாவில் மாடுகளை எல்லாம் அழகாக அலங்கரித்து, மலை உச்சிக்கு அழைத்துச் சென்று விட்டு, மீண்டும் கீழே ஓட்டிக் கொண்டு வருவார்கள். "இனி பனிக்காலம்; கீழேதான் மேய்ச்சலுக்கு செல்ல வேண்டும்" என்பதை மாடுகளுக்கு அறிவுறுத்தத்தான் இந்த விழா" என்றார் மரியா!

• கடிகாரக் கடையில்...



• புகழ் பெற்ற சிங்க நினைவுச் சின்னம்...



ஸ்விட்ஜர்லாந்தைப் பற்றிய அறிமுகம் முற்றுப்பெறும் தருவாயில், நாங்கள் தங்க வேண்டிய ஹோட்டல் "ஹிர்ஷேன்" வந்துவிட்டிருந்தது.

"இது சுமாரான வசதிகளுடையதுதான்; சின்ன அசௌகரியங்கள் இருந்தாலும் தயவு செய்து பெரிது படுத்தாதீர்கள்; ஏனென்றால், இது ஒரு அனாதரவான பெண்மணியும் அவர் மகளும் தனித்திருந்து நடத்தும் விடுதி; நட்புக்காக நாங்கள் தொடர்ந்து அவர்களுக்கு ஆதரவளிக்கிறோம்; கார்பெட்டை எக்காரணம் கொண்டும் ஈரமாக்கி விடாதீர்கள்; அதை உலர வைப்பது அவர்களுக்குப் பெரும் பாடு" என ஈர உணர்ச்சியுடன் மரியா கோரியது; நெஞ்சைத் தொட்டது.

ஹோட்டல் சின்னதாக

இயற்கை எனும் இளைய கன்னி...

இருந்தாலும், பளிச்சென்று துப்புரவாக இருந்தது. இரண்டு சின்ன ரோஜா வடிவ சோப்புகள், ஸ்விட்ஜர்லாந்தைப் போன்றே கவனத்தைச் சுண்டியிழுத்தன!

சிவப்பு கார்பெட்டுகள், லேஸ் கர்டன்கள், கலர் கண்ணாடியில் பூச்சாடி, கட்டில் மெத்தை, அலமாரி, மேஜை, நாற்காலி, மலர் வடிவ லைட் ஃபிட்டிங்குள், சின்ன டீ.வி. எல்லாமே இருந்தன. எதை அசௌகரியம் என்று மரியா குறிப்பிட்டார் என முதல் ரவுண்ட் கண்களைச் சுழலவிட்டதில் ஒன்றுமே விளங்கவில்லை. அப்புறம்தான் புரிந்தது.... அங்கேயிருந்த பாத்ரூம்-கம்-டாய்லெட்டில் கதவே இல்லை! வெறும் ஸ்க்ரீனை- அதுவும் வெள்ளை வெளேரென்ற மெல்லிய திரையை- தொங்கவிட்டிருந்தார்கள்!

ஜன்னல் திரையை விலக்கினால், அங்கிருந்தே ரயில்வே ஸ்டேஷன் தெரிந்தது. இங்கேயும் ரயில் விஷயம் பொறாமையைக் கிளறும்படியாகத்தானிருந்தது-ஒரு முழு கம்பார்ட்மெண்டில் காலை நீட்டி சாய்ந்த வண்ணம் இரண்டே இரண்டு பேர்!

இரவு உணவுக்கென்று கீழே குழுமினோம்; தினமும் 'ப்ரேக்ஃபாஸ்ட்' மட்டும் தான் அவர்கள் வழங்குவார்கள்; சில நாட்களில் தான் மதிய உணவோ இரவு உணவோ டூரில் அடக்கம்; மற்ற தினங்களில் நாமே பார்த்துக் கொள்ள வேண்டும்.

டூர் நிறுவனமே உணவு வழங்கும் நாட்களில், நாங்கள் நால்வரும், முன் கூட்டியே மரியாவை 'மஸ்கா' அடித்து வைத்திருப்போம்- அரிசிச் சோற்றுக்காகவென்று! அவரும் நமக்கென்று சஞ்சீவி மலையையே பெயர்த்து வருவது போல் பாவலா காட்டி, எப்படியாவது சாதத்தை வரவழைத்து விடுவார். அப்புறம்தான் இருக்கவே இருக்கிறதே பொடி... ஊறுகாய் வகைகள்.

அன்றுதான் டூரின் முதல் டின்னரென்பதால் 'அரிசிச் சோறு' என்பது எவ்வளவு அருமையான பொருள் என்ற விஷயம் எங்களுக்குத் தெரியவில்லை. சர்வ அலட்சியமாக "ரைஸ்" என்று நாங்கள் கேட்டதும், ஹோட்டலை நடத்திய அம்மாவும் பெண்ணும் திணறியே விட்டார்கள். பலமுறை மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விதவிதமான, ருசியான கார்ன் ஃப்ளேக்ஸ் வகைகளையும், கீரை சூப் ஒன்றையும், ப்ரெட், ஆப்பிள், திராட்சை வகைகளையும் கடை பரப்பி எங்களைத் திணறடித்தனர்.

மறுநாள் காலை, ரோடெல்லாம் ஈரமாயிருந்தது- 'மழை பெய்ததோ' என்று நினைத்தால்... ரோடை எல்லாம் கழுவி விட்டுக் கொண்டிருந்தனர்!

மீண்டும் ஒரு கார்ன் ஃப்ளேக்ஸ் விருந்துக்குப் பிறகு, சுற்றுலாவுக்குத் தயாரானோம். எல்லோருமே கம்பளித் துணிகளில் மூழ்கி, பார்க்க, நிலவில் கால் வைக்க இருக்கும் ஆர்ம்ஸ்ட்ராங்கைப் போலிருந்தோம்.

"இன்று மதியம் மவுண்ட் டிட்லிஸ் என்ற பனிமலைச் சிகரத்திற்கு செல்லப் போகிறோம்; செமை குளிர்.... உஷார்"- என்று பலமுறை மரியா பய முறுத்தியது தான் காரணம்!

அன்று முதலில் சென்றது "Lion Monument" ஐப் பார்க்க. இது பத்தொன்பதாம் நூற்றாண்டின் புகழ் பெற்ற நினைவுச் சின்னம்! ஃப்ரெஞ்சு ரெவல்யூஷன் காலத்தில், துயிலரீஸ் அரண்மனையில், 14-ம் லூயி மன்னனுக்குப் பாதுகாவலாயிருந்தது ஸ்விஸ் வீரர்கள்தாம். லூயி மன்னனின் ஆணைப் படி, ஸ்விஸ் ரெஜிமெண்டிலிருந்த அனைவரும் தங்கள் ஆயுதங்களைத் தியாகம் செய்ய, வெறித்தனத்துடன் உள்ளே நுழைந்த, கொலைகார வெறிக் கும்பல் ஒன்று, இந்த வீரர்களைக் குற்றுயிரும் குலை உயிருமாக கிழித் தெறிந்தது. வெறும் கையுடன் கடைசி நிமிடம் வரை போராடிய இந்த வீரர்களின் நினைவாக, வலிமையின் பிரதிபலிப்பான சிங்கத்தை, டேனிஷ் சிற்பி பர்டெல் தோர் வால்ட்ஸென் வடிவமைக்க, ஏனைய ரெஜிமெண்டுகளிலிருந்

"வர வர நம்ம சதிஷோட 'பந்தா'வுக்கு அளவே இல்லாம போச்சுடா!"

"எப்படிச் சொல்றே...?"

"பேண்ட் சர்ட் தைச்சா கூட எலிசபெத் டைலர்கிட்டதான் தைப்பேன்கிறான்!"

— டி.என். சத்ய முருகவேல்



தவர்களிடமிருந்து பெற்ற ''டொனேஷன்''களை வைத்துக் கொண்டு ஃபைபர் என்பவர், பாறைக்குள் படுத்திருக்கும் 30 அடி சிங்கத்தை நிர்மாணித்தார்.

ஈட்டி இதயத்தைத் துளைத்த போதும், ராஜாவின் சின்னத்தை விடாமல் வாயால் கவ்விக் கொண்டிருக்கும் சிங்கத்தின் தீரம், அன்று உயிர் நீத்த 26 ஆபீஸர்கள், ஏனைய சிப்பாய்களின் நேர்மை தவறாத வீரத்திற்குத் தலைவணங்குவதாய் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

இன்றளவும் ஸ்விஸ் காவலர்களின் வீரமும் கடமையுணர்ச்சியும் தன்னிகரற்று விளங்குகிறது; 48 மணி நேரத்துக்குள் இங்கே ஒரு படையையே திரட்டிவிடலாம்! 'வாடிகன் ஸிடி'யில், 'போப்'புக்கு பாது காப்பாயிருப்பது ஸ்விஸ் 'கார்டு'கள்தான். (சமீபத்தில் கூட போப்பைக் காக்க தன் உயிரைக் கொடுத்த ஸ்விஸ் காவலர் பற்றிய செய்தி வந்ததே..)

வீர வணக்கத்திற்குப் பின், ஸ்விட்ஜர்லாந்தின் ஸ்பெஷாலிடியான Cuckoo clocks கடைக்குச் சென்றோம்; அரை மணிக்கொருமுறை கூவி அழைத்து குரல் கொடுக்கும் இந்த அற்புதத்தை உலகில் வேறெங்கிலுமே காண முடியாது!

கூரை வீடு போன்ற வடிவம்; நீண்ட செயினில் தொங்கும் சாவிகள்; நாங்கள் உள்ளே நுழைந்தபோது சரியாக மணி எட்டு! சுவரிலிருந்த நூற்றுக் கணக்கான கடிகாரங்களில், சின்னக் கதவைத் திறந்து கொண்டு ஒரு சின்னக் குயில் எட்டிப் பார்த்து, எட்டு முறை 'கூ கூ' என்று கத்தி விட்டு, 'பட்'டென்று தலையை உள்ளே இழுத்துக் கதவைச் சாத்திக் கொண்டது. வினோத வரவேற்பாயிருந்தது. சிலவற்றில் அதைத் தொடர்ந்து 'பாலே' நடனம்வேறு! நான்கு ஜோடிகள் இசைக்கேற்ப சுழன்றாடி விட்டு நிற்கும். ஆயிரத்திலிருந்து பத்தாயிரம் வரையிலான விலைகள்! விசேஷ தள்ளுபடியுடன், டாக்ஸ் ஃப்ரீயாகவும் கிடைத்தது!

அமெரிக்கன் டயமண்ட் பதித்த ப்ரேஸ்லெட் வகை வாட்சுகள், எனாமல் வர்க் செய்யப்பட்ட வளையல் போன்ற வாட்சுகள், செயின் பெண்டண்டில் வாட்ச்... மோதிரத்தில் வாட்ச் என்று எத்தனையோ வகைகள்.

அரைமணியில் குயில்கள் மறுபடியும் வெளியே வந்து 'குக்கூ' என்று ''பை...பை'' சொல்ல, 'நேரமாகிவிட்டது' என மரியா



''குடும்பப்படம்னு சொல்றீங்க; அதே சமயம் வித்தியாசமான சண்டைக்காட்சிகள் கொண்ட படம்னும் சொல்றீங்க? அதெப்படி சாத்தியம்?''

''குடும்பப்படம் என்கிறதாலே மாமியாரும் மருமகளும் அடிச்சுக்கிறாங்க...''

''அதுல வித்தியாச சண்டைக்காட்சி எப்படி...?''

''மாமியாருக்கு அமெரிக்கா சப்போர்ட் பண்ணுது. மருமகளுக்கு சீனா படைபலம் தருது!''

– சென்னிமலை சி.பி. செந்தில்குமார்

எல்லோரையும் தள்ளிக் கொண்டு வந்து விட்டார்.

''சென்ற முறை வந்தபோது ஒன்று வாங்கினேன்; அது இன்று வரை ஷோகேஸ் பொம்மை தான்'' என்று இந்தோனேஷிய நண்பர் பயமுறுத்தினார். (ஆனால் கடவுள் புண்ணியத்தில், இன்று வரை எங்கள் குக்கூ ஒழுங்காகப் பாடி, ஆடி எல்லோரையும் புருவத்தை உயர்த்த வைத்திருக்கிறது!)

அங்கிருந்து நேராக, உலகத்தின் மிக சுத்தமான, துப்புரவான ஏரியை நோக்கிப் பயணமானோம்."லேக் லுசரைன்"– சிலுவை வடிவத்தில் இருந்த ஏரியைச் சுற்றி எழில் கொஞ்சியது. ஏரியைச் சுற்றிப் பார்க்க படகுப் பயணம்; ஆங்கிலக் கமெண்ட்ரி; ஓட்டுநர் பெண் பயணிகளை அழைத்து, படகை அவர்கள் கையில் கொடுத்து பூச்சாண்டி காட்டினார்.

கரையை ஒட்டி ஓர் அரண்மனை, ஒரு காஸினோ(போண்டியானால் தண்ணீரில் குதிக்கும் வசதி உண்டே), ஒரு மதுபானத் தொழிலதிபரின் பங்களா ஒரு ஃபெரஞ்சுக்கார் தொலதிபரின் வீடு... இத்யாதிகள்.

மேல் தளத்தில் ஏறி நின்றும் அழகைப் பருகலாம்; ஆனால் சில்லென்ற காற்று, ஸ்வெட்டரையும் கோட்டையும் தாண்டி எலும்பைத் துளைத்தது! அங்கிருந்து நேராக மவுண்ட் டிட்லிஸ்தான்.

ஓ! அது ஒரு தனி அனுபவம்; சுற்றுலாவின் க்ளைமேக்ஸ்!

(தொடரும்)

குறையொன்றுமில்லை

தேவகி - வசுதேவன் என்கிற அரணிக் கட்டையிலிருந்து கிருஷ்ணனாகிற அக்னி உண்டானான் என்று சொன்னேன். அந்த அக்னியை வசுதேவன் சிரசிலே எடுத்துக்கொண்டு மூச்சுகூட படாமல், ஆதிசேஷன் குடைபிடிக்க, யமுனை ஆற்றைக் கடந்து போனார். முழங்கால் அளவுக்கு வற்றி அவருக்கு வழி செய்து கொடுத்தாள் சூரிய புத்ரியான யமுனை.

அந்தக் குழந்தையை எடுத்து வந்து நந்தகோபனுடைய இல்லத்திலே பிரதிஷ்டை பண்ணினார். அங்கே ஜ்வலித்தான் அவன்!

அக்னியானது எத்தனை புனிதமானது என்று புரிந்து கொள்ள வேண்டும். வெவ்வேறு அக்னியைக் கலக்கக் கூடாது. அக்னியை இன்னொரு கிரஹத்திலிருந்து வாங்கக் கூடாது.

ஆஞ்சநேயருக்கு வாலிலே அக்னியை வைத்து விட்டார்கள் இலங்கையிலே... 'இதை நாம் கேட்கவில்லையே; கேட்காமலே கொடுத்து விட்டார்களே. தப்பாயிற்றே! என்ன பண்ணுவது...' என்று பார்த்தான் ஆஞ்சநேயன். 'கொடுத்தவர்களுக்கே கொடுத்து விடுவோம்' என்று அக்னி பகவானுக்கு விருந்து வைத்தான்! அங்கேயே அக்னியை வைத்துவிட்டு, தன் வாலில் அவர்கள் வைத்ததை அணைத்து விட்டு வந்தான்.

ஆகவே, அக்னியை சர்வ ஜாக்கிரதையுடன் கையாள வேண்டும் என்கிறது சாஸ்திரம். ஒன்றோடு ஒன்று, அக்னியைக் கலக்கக் கூடாது; கடன் வாங்கக் கூடாது, ஒரு அக்னியிலிருந்து இன்னொன்றை உண்டாக்கக் கூடாது.

யக்ஞம் பண்ணுகிறவர்கள் இதையெல்லாம் கடைப்பிடிக்க

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

வேண்டும். யக்ஞம் பண்ணும்போது தூங்கக் கூடாது. தூங்கினால் என்ன ஆகிறது?... யக்ஞ பலன் கிடைக்காமல் போய் விடுகிறது. பலவிதமாக அல்லலுறுவார்கள்.

சத்காரியம் பண்ணுகிறபோது, நல்லதை நாம் அடைய வேண்டுமே யொழிய தீயதை சம்பாதிக்கலாமா...? ஆகையினாலே தூக்கம் வரவே கூடாது அங்கே. ஆனால் வரத்தான் வரும்! அப்படி வந்தால் எழுந்து போய்விட வேண்டும்; உட்கார்ந்திருக்கக் கூடாது.

சரி, யக்ஞம் நடத்துகிறவரே தூங்கினால்...? ராத்திரியெல்லாம் கண் விழித்து, பட்டினியிருந்து ஹோமம் பண்ணிக் கொண்டேயிருப்பவருக்குத் தூக்கம் வந்துவிடும்.

ஒரு இடத்திலே அச்வமேத மஹா யக்ஞம் - பெரிய யக்ஞம் நடந்தது. ஹோமம் பண்ணிக் கொண்டிருந்தார். அவருக்குத் தூக்கம் வந்துவிட்டது! மத்தியானம் பன்னிரண்டு மணியிருக்கும்... நல்ல தூக்கம்? அந்தத் தூக்கத்திலே ஸ்வப்னம் வேறு வந்து விட்டது. என்ன ஸ்வப்னம்...?

காட்டு வழியாக அவர் போகிற மாதிரியும் புலி துரத்துகிற மாதிரியும் ஸ்வப்னம். அவர் ஓட, புலி துரத்த அவர் ஓட, புலி துரத்த... இப்படியே கண்ணை மூடிக் கொண்டிருக்கிறார்!

ராஜா பார்த்தான்.... 'இப்படித் தூங்குகிறாரே... யக்ஞம் கெட்டுப் போய் விடுமே... யக்ஞம் கெடுவதோடு அல்லாமல் யார் யக்ஞம் பண்ணுகிறார்களோ அவர்களுக்கும் கெடுதல் ஏற்படுமே...'

என்ன பண்ணுவதென்று பார்த்தான். கையிலே செங்கோல் வைத்துக் கொண்டிருந்தான் ராஜா. தூங்கி ஆடுகிறவரைப் பார்த்தான். அவர் கை மட்டும் அனிச்சையாக ஹோமம்

86



பண்ணிக் கொண்டேயிருக்கிறது! தூக்கத்தில் கண்ட புலி அவர்கிட்டே வந்து விட்டது-

ராஜா – கையில் செங்கோலிருந்ததே – அதால் ஒரு குத்து குத்தினான்!

'ஹா!' என்றார் அவர். ஸ்வப்னத்தில் வந்த புலி அடித்ததாக நினைத்துக் கொண்டார். அப்படியே எகிறி அந்த ஹோம குண்டத்திலே விழுந்து பஸ்மமாகி விட்டார்!

வேதம் என்ன சொல்கிறது..? அச்வமேத யக்ஞத்தால் யார் பகவானை ஆராதிக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்கள் பிரும்மஹத்யாதி தோஷங்களிலிருந்து விடுபடுவார்கள் என்று சொல்கிறது.

ஆனால் இந்த ராஜா, அச்வமேத யாகம் பண்ணி பிரும்மஹத்தியை மூட்டை கட்டிக் கொண்டான்! ஆகையினாலேதான் ஆரம்பத்திலேயே அவனை வேண்டிக் கொண்டு யக்ஞத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றது. 'சர்வதோமுகனே! எங்கும் முகமுடையவனான விஷ்ணு! இந்த யக்ஞ கர்மாவை உன் திருவடி பலத்தினாலே ஆரம்பித்து விட்டேன். நீதான் இதை பூர்த்தி பண்ண வேண்டும்' என்ற பிரார்த்தனையுடனேயே யக்ஞம் ஆரம்பிக்க வேண்டும்.

நித்யம் பகவானுக்குத் திருவாராதனம் பண்ணுகிறோம். அதிலேகூட நாம் என்ன பிரார்த்தனை பண்ண வேண்டும். பூஜையை நாமே பண்ண முடியாது. அதற்காக முன்னமேயே 'பகவதே பலேன, பகவதே வீர்யேண..' என்று 'பகவானுடைய பலத்தினாலேயும் அவன் கொடுத்த சக்தியினாலேயும் இந்தப் பூஜை நடக்கிறதேயொழிய, நம்மால் இந்தப் பூஜையைப் பண்ண முடியுமா' என்று நினைத்து அவன் திருவடியை தியானம் பண்ணி இந்தப் பூஜையை ஆரம்பிக்க வேண்டும் – திருவாராதனத்தை ஆரம்பிக்க வேண்டும்.

பெரிய பெரிய யக்ஞங்களையெல்லாம் ரக்ஷிக்கக் கூடியவன் அவனானதனாலே, விஷ்ணு: சர்வதோமுக: – விஷ்ணுவுக்கு எங்கும் முகம். எங்கும் பார்க்கக் கூடியவன். அப்படிப்பட்டவனைப் பிரார்த்தனை பண்ணினால் அந்த யக்ஞகர்மா பூரண பலனைக் கொடுக்கும்.

விஷ்ணு: சர்வதோ முக: என்பதற்கு இன்னொரு அர்த்தம்.

ஸ்வர பந்தத்தோடு கூடியிருக்கும் படியான உத்தமோத்தமமான வேத வான்மயம் மொத்தம் அவனுடைய ஸ்வரூபமாய் இருப்பதனாலே அவனுக்கு விஷ்ணு என்று பெயர். அதனால் அவன் சர்வதோ முகனாகிறான்.

வேத வான்மயம் அவனையே சொல்கிறது. வேத வான்மயம் மொத்தம் அவனுடைய ஸ்வரூபமாகவே இருக்கிறது. அதனால் அவன் சர்வதோமுகன் என்று வியாக்யானம் பண்ணுகிறார் இங்கே.

அதனால்தான் திருமங்கை ஆழ்வார் –

வேதத்தை, வேதத்தின் சுவைப் பயனை
விழுமிய முனிவரர் விழுங்கும் கோதில்
இன்கனியை
நந்தனார் களிற்றை, குவலயத்தோர்
தொழுதேத்தும்
ஆதியை, அமுதை, என்னை
ஆளுடையப்பனை
ஒப்பவரில்லா மாதர்கள் வாழும் மாட
மாமயிலை
திருவல்லிக்கேணி கண்டேனே...

என்று பாடுகிறார்.

திருவல்லிக்கேணியிலே எழுந்தருளியிருக்கும்படியான எம் பெருமான், பார்த்தனுக்குத் தேர் ஊர்ந்தான் அவன்.

தனஞ்சயனுடைய ரதத்திலே உட்கார்ந்திருக்கிறதே, அதுதான் பொருள். மற்றெல்லாம் பொருளே அல்ல என்று சொல்லி விட்டார். அப்படிப்பட்ட எம்பெருமான் யார்..? அவன் தான் வேதம், வேதத்தின் சுவைப்பயன்' என்று பாடுகிறார் திருமங்கையாழ்வார்.

வேத ஸ்வரூபன் என்று சாஸ்திரம் பேசுவதாலே அதை அடியொற்றி, ஆழ்வாரும்

அருள்வாக்கு

எப்போது பார்த்தாலும் குடிக்கணும், ஊதணும் என்று இருப்பதுபோல வெற்றிலை போட்டுக் கொள்வதும் ஒரு 'ஹாபிட்' ஆகி, அதற்கு அநேகம் பேர் 'அடிக்ட்' ஆகிறார்கள். இதனால் நாக்குத் தடித்து, பசி மந்தித்துப் போய் விடுகிறது. இப்படி விடக்கூடாது. பார்க்கவே பிடிக்காமல், வாய் நிறைய வெற்றிலைச் சாற்றை வைத்துக் கொண்டு பேசுவது, நம் மேலே அது தெறிப்பது, தங்கள் மேலேயே ஒழுகுவது என்றெல்லாம் பண்ணுவது கௌரவமும் இல்லை. ஆசாரமும் இல்லை. பொடியும் இப்படித்தான். போகிற இடமெல்லாம் (வெற்றிலை) துப்புவதும் (பொடி) சிந்துவதும் ஸிவிக் ஸென்ஸுக்கே விரோதம்.



க்ருஹஸ்தர்கள், முக்யமாக ஸுமங்கலிகள் வெற்றிலை போட்டுக் கொள்வதில் தப்பேயில்லை. தாம்பூலம் கொடுத்து உபசரிப்பதே மங்களம் என்று இருக்கிறது. பூஜையிலும் தாம்பூலம் அர்ப்பணம் பண்ண வேண்டும். அது ஸௌபாக்ய சின்னம்; அதோடு ஜீர்ணகாரி, ரக்த சுத்தி, சுண்ணாம்பில் கால்ஷிய ஸத்து இருக்கிறது. இத்தனையிருந்தாலும் அது ஸாத்விகம் இல்லை. அதனால்தான் பிரம்மச்சாரி, ஸந்நியாஸி இருவருக்கும் அது கூடாது என்று வைத்திருக்கிறது. லோக வியவஹாரங்களைக் கவனிக்க வேண்டிய க்ருஹஸ்தர்களுக்கு ராஜஸ குணமும் இருக்க வேண்டுமென்றே தாம்பூல தாரணம் அநுமதித்திருக்கிறது. அதற்காக ராஜஸ குணம் மட்டுமே இருக்கும்படியாக ஓயாமல் தாம்பூல சர்வணம் பண்ணக் கூடாது. நல்ல பதார்த்தம், கெட்ட பதார்த்தம் எதுவானாலும் ஓயாமல் தின்னும் பழக்கமாகப் பண்ணிக் கொள்ளக் கூடாது. நம்மை நம் கண்ட்ரோலில் இல்லாமல் பண்ணித் தன் வசப்படுத்திக் கொள்வதாக எந்தப் பதார்த்தத்தையும் விட்டு விடக் கூடாது.

ஸாத்விகாஹாரத்தைச் சேர்ந்த தித்திப்புப் பதார்த்தங்கள், நெய் முதலானவை தாமாகவே ஓரளவுக்கு மேல் தின்ன முடியாமல் திகட்டிப் போய் விடுவதாலேயே நமக்கு நன்மை செய்கின்றன.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

வேதமே அவன், வேத வடிவினன் அவன், மறைபொருளாய் இருக்கிறான்... என்று பாடுகிறார்.

வித்யாரண்ய ஸ்வாமியும் வேத பாஷ்யத்தை ஆரம்பிக்கிறபோதே,

வேதம் என்றால் என்ன?

அந்த வேதத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் யார்?

அதில் என்ன விஷயம் சொல்லப்படுகிறது?

அது எப்படி நமக்குப் பிரமாணமாகிறது?

– என்றெல்லாம் கேள்விகள் கேட்டுக் கொண்டு சொல்ல ஆரம்பிக்கிறார்.

இஷ்டத்தை உண்டு பண்ணுவதனாலேயும் அநிஷ்டங்களைப் போக்குவதனாலேயும், கண்கூடாகப் பார்த்து உணரமுடியாததை, மறைந்திருக்கிற விஷயத்தையெல்லாம் நமக்குக் காட்டுவதனாலேயும் அதற்கு வேதம் என்று பெயர்.

இஷ்டம், அநிஷ்டம் என்றால் என்ன...? சரீரத்துக்கு வியாதி அநிஷ்டம். சரீரத்துக்கு ஆரோக்கியம் இஷ்டம். சரீரத்தைக் காட்டிலும் வேறான விஷயம் – ஆத்மா. ஆத்மாவுக்கு வியாதி திரும்பத் திரும்ப சரீரத்தைப் பெறுதல். ஆத்மாவுக்கு ஆரோக்கியம் மோக்ஷத்தை அடைதல். அந்த ஆரோக்கியமான விஷயத்தை அந்த ஆரோக்கியத்தை அடைவதற்கான வழியை வேதம் தன்னுள்ளே மறைத்து வைத்திருப்பதனாலே அதற்கு வேதம் என்று பெயர்.

மோக்ஷம் என்றால் என்ன...?

'சரீரத்திலே இருக்கிற ரோகம் போவதே ஆரோக்கியமா?' என்றால் இல்லை! ஒருவர் ஒரு மாதமாக உடம்பு சரியில்லாமல் படுத்திருந்தார். உடம்பு வாடிப் போய் விட்டது. ஆகாரம் இல்லாமல் ரொம்ப வாடிப் போய் விட்டார். எழுந்திருக்கவே முடியவில்லை. ரோகம் போய் விட்டது; ஜுரம் போய்விட்டது. ஆனால் எழுந்து உட்கார முடியவில்லை. மந்திரம் சொல்வதற்கு புஷ்டி இல்லை! வேதோச்சாரணம் பண்ணுகிற அளவுக்குப் புஷ்டி வந்தால்தான் ரோகம் போயிற்று என்று அர்த்தம். அதுதான் பூரண ஆரோக்கியம். வெறும் ரோக நிவ்ருத்தியே ஆரோக்கியமில்லை.

அதேபோல மோக்ஷம் என்றால் சம்ஸார நிவ்ருத்தி இல்லை... அந்த பகவானுடைய சரணாரவிந்தத்திலே கைங்கர்யம் நமக்கு சித்திக்க வேண்டும். அதுதான் மோக்ஷம்.

ஆகையினாலே, அநிஷ்டம் எது என்றால் இந்த உலக வாழ்க்கை. இஷ்டம் எது என்றால் அவன் திருவடி அடைந்து கைங்கர்யம் பண்ணுதல்.

இதைத்தான் வித்யாரண்ய சுவாமிகள் எடுத்துச் சொல்கிறார்.

பிரத்யக்ஷத்தாலேயும் அனுமானத்தாலேயும் உணர முடியாததை நமக்கு நன்கு புலப்படுத்துவதனாலே அது வேதமாகிறது. அதற்கு வேதம் என்று பெயர் ஆகிறது.

'இந்த வேதமே பகவான் விஷ்ணு' என்று அதன் பெருமைகளை மேற்கொண்டு அத்யாஸ்சர்யமாக விவரிக்கிறார்.

(தொடரும்)

ஷூட்டிஸ்பாட்டுக்குப் போயி ரொம்ப நாளாச்சே!!

ஷங்கர் : 'முதல்வன்' படத்தில் ஒரே ஒரு நாள் முதல்வர் பதவி வகித்து, அர்ஜுன் பல அதிரடி வீரதீரச் செயல்கள் புரிவதாய்க் கதை பண்ணி வைத்திருந்தார் ஷங்கர். அதற்கு பேராபத்து வந்தது – 'புதுமைப் பித்தன்' படத்தின் மூலமாக. இதில் பார்த்திபனும் முதல்வராக நடித்திருக்கிறார். அதனால் ஷங்கர் கதைக் குழப்பத்தில் இருக்கிறார். மனீஷா கொய்ராலாவிடம் வாங்கிய கால்ஷீட்டை வீணாக்கக் கூடாது என்று பாடல் காட்சியை இப்போது சுட்டுத் தள்ளிக் கொண்டிருக்கிறார். இதற்குப் பின்தான் கதையைச் சுட நேரம் ஒதுக்கியிருக்கிறாராம் ஷங்கர்.

கௌசல்யா : 'பூவேலி' படப்பிடிப்பில் இருந்த கௌசல்யா, முகத்தில் சந்தோஷப் பூ பூக்க சொன்ன தகவல் இது. 'மின்சார கனவு'க்குப் பின் ராஜீவ்மேனன் இயக்க இருக்கும் படத்தின் கதாநாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறாராம். கதாநாயகன் மம்முட்டி. இதோடு சேர்த்து கௌசல்யா சொன்ன கொசுறு தகவல்... இப்படத்தின் பாடல் கம்போஸிங்கிற்காக ஏ.ஆர். ரஹ்மானும், ராஜீவ்மேனனும் லண்டன் சென்றிருக்கிறார்கள். அப்புறம் நெகடிவ் கேரக்டர்களில் நடிக்க ரொம்ப இஷ்டமாம் கௌசல்யாவுக்கு!

இஷா கோபிகர் : 'காதல் கவிதை' படப்பிடிப்பில் இருந்த இஷாகோபிகர் சொன்ன நியூஸ் இது. அறிமுகமான 'என் சுவாசக் காற்றே' படப்பிடிப்பு முடியாமல் இழுவையாகிக் கொண்டிருக்க, இரண்டாவதாக நடிக்கும் 'காதல் கவிதை' முதல் படமாக வெளிவந்து விடுமாம். அதனால் கோபிகருக்கு என்ன கோபமோ? கோபிகரை இழந்து விட்டு இஷா என்கிற பெயர்ச் சுருக்கத்தோடு தெலுங்கிலும் தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறாராம்.

நாசர் : அடுத்து இயக்க இருக்கும் 'விரன் விருமாண்டி' படத் திட்டத்தை ஜனவரிக்கு தள்ளி வைத்திருக்கிறார் நாசர். காரணம், அவர் வீட்டில் சொந்த தயாரிப்புக்குத் தடையுத்தரவு!

ரம்பா : சிம்ரன், கௌசல்யா வருகையோடு பல புதுமுகங்களின் படையெடுப்பாலும் தாம் வாங்கும் சம்பளத்தைக் குறைக்கத் தயாராகியிருக்கிறார் ரம்பா. அப்படி இருந்தும் வாய்ப்புகள் வரக் காணோம். 'என்றென்றும் காதல்' படத்திற்குப் பின் தமிழ்ப் படங்களுக்கு குட்பை சொல்லி விட்டு தெலுங்கு, இந்தி பக்கம் போய் விடலாம் என்று முடிவெடுத்திருக்கிறாராம். அதோடு தயாரிப்பாளராகவும் மாற



• இஷா கோபிகர்



• கௌசல்யா

இருக்கிறார். உடன் பிறந்த சகோதரரை கதா நாயகனாக்க இந்த அவதாரம். இதற்காக படப்பிடிப்பு இல்லாத நாட்களில் சீரியஸாக கதை கேட்டுக் கொண்டிருக்கிறார்!

சிம்ரன் : 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தில் பார்வையிழந்தவராக நடிக்கிறார் சிம்ரன். இவரை 'லவ்ஸ்' விடுபவராக விஜய். க்ளைமாக்ஸில் காதலிக்கு உதவாத கண்கள் எல்லாம் கண்களா என்று ஆவேசமாகி, தம் கண்களை தாமே குத்தி... பார்வையிழந்தவராகி விடுகிறார் விஜய்! (எவ்வளவு நெகடிவ் சிந்தனை!) கௌசல்யாவுக்கு 'சொல்லாமலே' என்றால் சிம்ரனுக்கு 'துள்ளாத மனமும் துள்ளும்'. டான்ஸ் மாஸ்டர் ராஜுசுந்தரத்தை சிம்ரன் பதிவுத் திருமணம் செய்து கொண்டு விட்டதாக வதந்தி பரப்பிய தம் மானேஜர் அருணுக்கு கல்தா கொடுத்து விட்டார் சிம்ரன். அந்த மானேஜர் பதவியைப் பிடிக்க பலத்த போட்டா போட்டி, சினிமா பி.ஆர்.ஓ.க்களிடையே!

விஷ்வா : அம்பிகாவின் இளைய சகோதரர் இவர். எப்படியாவது விஷ்வாவைப் பேசப்படுகிற கதாநாயகனாக்கி விட வேண்டுமென்பது தான் அம்பிகாவின் லட்சியம். அதற்காகத் தயாரிப்பாளர்களை தேடிக் கொண்டிருக்கிறார். முன்னோட்டமாக 'காக்கைச் சிறகினிலே' படத்தில் பவர்புல் கேரக்டர் ஒன்றை பறித்துக் கொண்டு வந்து தம்பிக்குக் கொடுத்து விட்டார். பார்த்திபனை விட படத்தில் விஷ்வா தோன்றும் பகுதிகள்தான் அதிகமாம்!

எபி குஞ்சுமோன் : 'கோடீஸ்வரன்' என்று தம் மகனுக்காக படம் எடுத்து விட்டு ரிலீஸ் பண்ண படாத பாடு பட்டுக் கொண்டிருக்கிறார் குஞ்சுமோன். திரையுலக வி.ஐ.பிக்களுக்கு ஒரே ஒரு ப்ரிவியூ ஷோ போட்டுக் காட்டினார். படத்தைப் பற்றி நல்ல அபிப்ராயம் இல்லை. அதனால்தான் ரிலீஸ் தாமதம். 'கோடீஸ்வரன்' ரிலீஸ் ஆனாலும் ஆகாவிட்டாலும் எபியை ஹீரோவாக்கியே தீருவது என்று அடுத்த தயாரிப்புக்கான வேலையில் மும்முரமாய் இறங்கி விட்டார் குஞ்சுமோன்.

ரசிகா : ரசிகா நடிக்கும் படங்கள் வெளி வருகிறதோ இல்லையோ அவரைப் பற்றிய செய்திகள் மட்டும் வந்து கொண்டேயிருக்கும். பத்திரிகையாளர்களிடம் அவ்வளவு செல்வாக்கு! இவர் நடிக்கத் துவங்கிய முதல் படமான 'பூஞ்சோலை' விரைவில் வெளி வரப் போகிறது. சுருட்டோ சுருட்டென்று கங்கை அமரன் சுருட்டிக் கொடுத்ததை எடிட்டர் லெனின் நகாசு வேலைகள் பண்ணி வெட்டி ஒட்டிக் கொண்டிருக்கிறார்! 'பூஞ்சோலை'யை ரசிகாவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். என்ன இருந்தாலும் அவர் நடித்த முதல் படமாயிற்றே! ●

— மஹாநந்த்



வேஷதாரிகள்!

முலுண்டிலுள்ள நீலம் நகருக்கு, டெபுடி சி.எம். முண்டே வருகை தந்தபோது, பி.ஜே.பி. தலைவரான கிரீத் சோமையாவுக்கு 'ஹாப்பி பர்த்டே' சொல்ல வந்தார் என்றே நினைத்திருந்தார்கள். அப்படியே முலுண்டு - பாண்டுப் பகுதியிலுள்ள 'பார்'களை திடீர் விஸிட் செய்வார் என்று யார் கண்டார்கள்? தெரிந்திருந்தால், அண்டர் வர்ல்ட் டான்களின் லீலைகளை வளர்க்கும் இந்த 'பார்'களை சட்டுப்புட்டென்று மூடியிருக்க மாட்டார்களா என்ன? செக்நாகா பகுதியில், 'ஆக்ட்ராய் கலெக்ஷன்' என்ற பெயரில், வருடக் கணக்கில் 'வெயிட்'டிங்கிலிருக்கும் லாரிகளையும் ட்ரக்குகளையும் அப்புறப் படுத்தித்தான் இருக்க மாட்டார்களா? போதாத காலம்! முண்டேவின் கோபம் மண்டைக்கேறி, சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் தண்டிக்கப்பட்டனர். போரிவிலி விசிட்டின் போது, போலீஸ் ஸ்டேஷனைப் பற்றியே பெண்கள் எக்கச் சக்க புகார் கொடுக்க, மறுபடியும் சில அதிகாரிகளுக்கு 'சஸ்பென்ஷன்'! மும்பையின் சட்டம் ஒழுங்குப் பிரச்னையால் ஆடிப் போயிருக்கும் ஆட்சியாளர்கள், அந்தக் கால மன்னர்கள் ஸ்டைலில் நகர்வலம் வரத் துவங்கி விட்டார்கள். மாறு வேஷத்தில் வந்தால், இன்றும் பலரின் வேஷம் கலையுமே?

இது ஊனமல்ல ஊக்கம்!

இராவணனை நிந்திப்போம்!

"ராஜனின் படையில் ராவ் சேர்ந்தபோது 18 வயது தான்; குறி வைப்பதில் தேர்ந்தி, எதிரிகளை வீழ்த்துவதில் துரிதம், நவீன ஆயுதங்களில் பயிற்சி, பகைவனை பதற அடிப்பதில் தேர்ச்சி போன்றவற்றில் ஈடு இணை இல்லாதிருந்ததால் விரைவிலேயே படைத் தளபதியாக உயர்த்தப்பட்டான். அவன் கொன்று குவித்தவர்கள் ஏராளம்; குவித்த செல்வம் தாராளம்"... இவை ஏதோ சரித்திர பாடத்தில் இடம் பெற்றிருக்கும் வீர வரலாற்றுக் குறிப்பு என எண்ணினால், நீங்கள் "தேறாத கேஸ்!" மும்பை தினசரிகள் மெனக்கெட்டு வெளியிடும், அண்டர்வர்ல்ட் ஆசாமிகளின் வீர தீர புராணம்தான் இவை! பரீட்சைக்குப் படிப்பது போல் ஊன்றிப் படித்துவிட்டு, இவர்களையே தங்கள் 'ரோல் மாடல்' களாக்கிக் கொண்டு, எளிதாகப் பணக்காரர்களாகும் கனவுகளில் மிதக்கும் சட்டம் மும்பையில் அதிகரித்து வருகிறது. பொதுத் தொலைபேசி நிலையத்திலிருந்து ஒரு ரூபாயில் ஒரு 'கால்' போட்டு, யாரையாவது மிரட்டி, லட்சக் கணக்கில் பணம் பறிப்பது பெருகி விட்டது. வேலையிழந்த பட்டதாரியான கிருஷ்ணமூர்த்தியிலிருந்து, வேலை தேடி வந்த கிருஷ்ணாலால் வரை, பலரும் திடீர் "எக்ஸ்டார்ஷனிஸ்டு"களாக மாறி, வச

மாக மாட்டிக் கொண்டு, கம்பி எண்ணுகிறார்கள். பதிவான 713 எக்ஸ்டார்ஷன் வழக்குகளுள் 317 கேசுகளில் பிடிபட்டவர்கள் கிரிமினல்களே அல்ல! எல்லாம் இராவணர்களை 'glorify' பண்ணுவதால் வந்த வினை!

உன்னால் முடியும் தங்காய்

நாயர் ஹாஸ்பிடலில் வாழ்க்கையுடன் போராடிக் கொண்டிருக்கும் 23 வயது ஜெயபாலா ஆஷரைப் பார்க்க வருபவர்கள் கொண்டு வருவது மலர்களை, அல்லது காசோலைகளை. ஆனால் 48 வயது ரமேஷ் ஓசானி கொண்டு வந்தது வண்டி வண்டியான நம்பிக்கையை! விக்ரோலி ஸ்டேஷனில் இறங்கும் போது, கால் தவறி, ரயிலுக்கும் ப்ளாட்ஃபாரத்துக்குமிடையே சிக்கி, இரண்டு கால்களையுமிழந்தபோது அவருக்கு வயது 18! இன்று, காலேஜில் படிக்கும் இரண்டு மகன்களின் தந்தை; 'மிக்ஸி' இணைப்புகள் தயாரிக்கும் பிசினஸ்; சொந்த வீடு, மாருதி 'ஜென்' எல்லாம் உண்டு! செயற்கைக் கால்களுடன் அவர் ஜெயபாலா முன் நடந்து, மாடிப்படி ஏறி, நாற்காலியில் அமர்ந்து, தன் 'லைவ்' டெமான்ஸ்ட்ரேஷனால் அவருக்குப் புத்துயிரூட்டினார். அரைமணி நேரம் தொடர்ந்து நடப்பதாகவும், தாமே கார் ஓட்டுவதாகவும் கூறி புதுத் தெம்பளித்தார். 'டைம்ஸ் ஆஃப் இந்தியா', தன் வாசகர்களிடமிருந்து 4½ லட்சங்களைத் திரட்டியளித்தது பெரிசில்லை; இப்படி ஒரு வாசகருடன் சந்திப்பை ஏற்படுத்தியதுதான் பாராட்டப்பட வேண்டிய விஷயம்! மற்றவர்களெல்லாம் வழி காட்டுபவர்கள்; இவர் வாழ்ந்தே காட்டியுள்ளாரே!



விளையாட்டு வீரர் 'கல்'

கல்லெறிதலை தேசிய விளையாட்டாக அறிவித்து விட்டார்களா என்ன? தாதரில் 9, பாந்த்ராவில் 8, குர்லாவில் 6, மும்பை சென்ட்ரலில் 6, போரிவிலியில் 6, மும்பை CST யில் 3, காஞ்சுர் மார்க்கில் ஒன்று என்று பட்டியல் போட்டு தினசரிகள் பிரசுரிக்கும் அளவுக்கு, இந்த ஒரு வருடத்துக்குள் எத்தனை கல்லெறி நிகழ்ச்சிகள்? அதுவும் ஓடும் ரயிலில், கதவுகளுக்கருகில் நின்று கொண்டிருக்கும் பயணியின் கண்ணைச் சரியாக குறிபார்த்து எறிய வேண்டுமென்றால், அதற்கு எத்தனை திறமை வேண்டும்? 'இலக்கு'களைப் பற்றிய புள்ளி விவரங்களை வெளியிடுகிறார்களே யன்றியும், கல்லெறி வீரர்களை அடையாளம் கண்டு அவர்களை 'கௌரவித்த'தாகச் செய்தியே வருவதில்லையே! நாம் ஸ்போர்ட்ஸுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்ற கூற்று உண்மைதான் போலும்!

இன்னொரு ஹரிலால்...?

நாதுராம் கோட்ஸேவைப் பற்றி நாடகம் எழுதினால் தடை விதிக்கிறார்களே யென்று பிரதீப் தால்வி, பாவம், பால்தாக்கரேவை நாயகனாக்கி 'பலயதான்' நாடகத்தை எழுதினார். அதற்கும் அரசு தடை விதித்து விட்டதே? தாக்கரே தம் ஒப்புதலை, எழுத்தில் தரவில்லையாம்! இவருக்கு வெதுவெதுப்பான பீர் மீதுள்ள பற்றுதலையும், ஸிகார் பிடிப்பதையும் பறை சாற்றினால், எப்படித் தருவார்? "என் தந்தைக்கு முன் நான் ஸிகார் பிடித்ததேயில்லை; எங்கள் குடும்பத்தில் யாரும் பெரியவர்கள் முன் புகை பிடிப்பதற்கு அனுமதியில்லை" என்று குமுறுகிறாராம். மற்றொரு காட்சியில், இவர் புல் வெட்டிக் கொண்டே மனோகர் ஜோஷியின் டயாபடீஸைப் பற்றி விசாரிக்கிறாராம்! நம்ப முடியவில்லை, இல்லை... என்று கதறலாம் போல இருந்தாலும், தால்வியின் கூற்றுப்படி, தாக்கரேயின் பிள்ளை 'உதவ்'வும் மருமகள் 'ரஷ்மி'யும், நாடகத்தை 'பாஸ்' பண்ணிவிட்டார்களாம்!

— ஜெயஸ்ரீ ராஜ்

• திடீர் எக்ஸ்டார்ஷனிஸ்ட கிருஷ்ணமூர்த்தி பிடிபட்டபோது...

தோழமையே, உன் விலாசம் என்ன?

- தோழமையே...
  செடி கொடிகளில்
  கொழுந்துகளைக் கண்டு - நீ
  குழந்தையாகி இருக்கின்றாயா?
- பூ
  இலை
  மொட்டுக்களைக் கண்டு - நீ
  முகம் மலர்ந்திருக்கின்றாயா?
- காய்களின் சபையில்
  நீ
  கைகட்டி நின்றதுண்டா?
- விதைகளின் நேர்த்தியை
  விழிகள் விசாரிக்கும் போதெல்லாம்
  உனக்குள்
  புன்னகை முளைப்பதுண்டா?
- இலைகளின்
  நட்டுவாங்கத்திற்கு - நீ
  அபிநயம் பிடித்ததுண்டா?
- பூக்களின் சங்கீதத்தில்
  புலன்கள் அவிழ்ந்து - நீ
  கிறங்கிக் கிடந்ததுண்டா?
- நீர்தேடும் வேர்களிடம்
  எப்போதாவது - நீ
  உட்கார்ந்து பேசியதுண்டா?
- என்றேனும்
  என்றேனும்
  பூக்களின்
  இலைகளின்
  சருகுகளை - உன்
  கண்ணீரால் நனைத்ததுண்டா?
- ஆமெனில்
  ஆமெனில் - நீ
  மனிதன்!
  இல்லையெனில்
  அரக்கன்!
- சொல்...
  எது உன் விலாசம்
  மனிதமா?
  அரக்கமா?

— வெற்றிப் பேரொளி



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 98 * Licensed
post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

